கல்கி



KALKI 9.11.1969 40 காசு



பரிபூரண அழகு பராமரிப்பு-

எவ்வேளையிலும் எங்குமே

க்ருக்ஸ் லாக்டோ-காலமைன் துணையுடன் வேனிஷிங் க்ரீமாக உபயோகிக்க வேண்டுமா?
ஓ...தாராளமாக

ஏனெனில் லாக்டோகாலமைன் ஒரு உயர்ந்த வேனிஷிங் க்ரீம் போலவே உங்கள் சருமத்தை மிருதுவாக்கி, வெயில், காற்று, தூசு, இவற்றிலிருந்து பாதுகாக்கிறது.

ஆனால்... இதுமட்டுமல்ல லாக்டோ-காலமைனின் பெருமைக்கு காரணம், காலமைன் மற்றும் விட்ச்ஹேஸல் கொண்ட லாக்டோ-காலமைன் உங்கள் சருமத்தை இதமாக பேணுகிறது ...சுத்தீகரித்து,ஈரத்தன்மை-யளித்து நயமான மென்மையும் தருகிறது.மேலும் பகல், இரவு எந்நேரத்திற்கும் உகந்த அருமையான ஒப்பனைசாதனம் க்ருக்ஸ் லாக்டோ காலமைன்.

உங்கள் முக எழிலுக்கு உண்மையில் லாக்டோகாலமைன் தவிர வேறு எதுவுமே வேண்டாம்.


க்ருக்ஸ்

லாக்டோ-காலமைன்

மாசில்லா அழகுக்கு !



க்ருக்ஸ் இன்டர்ப்ரான் லிமிடெட்,
பம்பாய்-25.



CIL 8TM

இப்பொழுது சிறிய சைஸ்களிலும் கிடைக்கிறது



எவர்:ப்ரெஷ்
67% 'டெரீன்' 33% காட்டன்
தி இந்துஸ்தான் ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் கோ., லிட்.,
தி இந்தியன் மான்யுபாக்சரிங் கோ., லிட்.,
16, அப்பாலோ ஸ்ட்ரீட், பம்பாய்-1.


Kleertone

கிளீயர்டோன்-
உன்னத
மின்சார
சாதனங்கள்

கிளீயர்டோன் எல்லாவித மின்சார சாதனங்களுக்கும் ஈடற்ற பேர் பெற்றது. அனைத்துமே நம்பகம், உறுதி, நீடித்த உழைப்பு ஒருங்கிணைந்தவை. நாடெங்கிலுமுள்ள பல்லாயிரம் இல்லத்தரசிகளின் பாராட்டு பெற்றவை. ஒவ்வொரு தயாரிப்பும் ஆண்டுக் கணக்கான அனுபவ நுட்பத்தையும், தொழில் நுணுக்கத்தையும் பின்னணியாகக் கொண்டவை.

உங்கள் இல்லங்களுக்கேற்ற கிளீயர்டோன் மின்சார சாதனங்களையே வாங்குவீர். அது நீங்கள் அளிக்கும் பணத்திற்கும் பன் மடங்கான பலனையே தருகிறது.

நாடு பூராவும் உள்ள 1500 க்கும் அதிகமான கிளீயர்டோன் விற்பனையாளர்கள். விற்பனைக்குப் பின்னும் எப்போதும் சேவை செய்யக் காத்திருக்கிறார்கள்.



நேஷனல் ரேடியோ அண்ட் எலக்ட்ரானிக்ஸ் கம். லிட்
(ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸஸ் பிரிவு)

ULKA-GRA 3 TAM

சௌமிய, ஐப்பசி 24 :: 1969, நவம்பர் 9

கல்கி
பொருளடக்கம்

அட்டைப் படம்: உதயபாஸ்கர்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



'தருமம்' 'தருமம்' என்று இடைவிடாமல் பிரசாரம் செய்து வந்த அனந்தராம தீக்ஷிதர் சமாதி அடைந்து விட்டார். ஜாதிமத பேதமின்றி தீக்ஷிதர் அவர்கள் சொல்லிவந்த உபதேசமொழிகளை மனம் உருகிக் கேட்ட ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் துயரைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தீக்ஷிதர் செய்து வந்த பணியைப்போல் வேறு யாரும் செய்வார்கள் என்று ஆசைப்படுவதற்கு இடமில்லை. நம் நாட்டு ரிஷிகள் நமக்கென்று எழுதி வைத்திருக்கும் விலையற்ற மொழிகளை யெல்லாம் தீக்ஷிதரைப்போல் சம்பூர்ணமாகப் படித்தறிந்தவரும் எடுத்துச் சொல்லத் தகுந்தவரும் தமிழ் நாட்டில் வேறு யாரையும் நான் காணேன்.



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 □ இதழ் 15

ஆஸ்திக ஜோதி அஸ்தமித்தது!

கலியின் இருளிடையே ஒளி கூட்டி வந்த தர்ம ஜோதிகளில் ஒன்று அணைந்து விட்டது.

நாஸ்திகமும் விபரீத விஞ்ஞானமும் வெற்றுப் 'பகுத்தறிவு'ம் பரவி வந்த போது பகவந்நாம ஒளியை, பகவத் கதைகளின் ஒளியைப் பரப்பிவந்த பக்திப்பிழம்பு அணைந்து விட்டது!

துராசாரமும் பாரதப் பண்புக்கு ஒவ்வாத நடைமுறைகளும் கிளர்ந்தெழுந்த போது ஆசார, அநுஷ்டான கிரணங்களைப் பரப்பி வந்த ஆஸ்திகத் திருவிளக்கு அணைந்துவிட்டது!

துவேஷமும், பொறாமையும், வசைமொழியும் மலிந்த இவ்வுலகில் அன்பு மயமாக, வஞ்சனையற்ற வாஞ்சை மயமாக, மதுர வாக்கின் மூர்த்தியாகத் திகழ்ந்த உயிர்ச்சுடர் அணைந்து விட்டது!

இல்லறத்தை நீத்துத் துறவியான சேங்காலிபுரம் பெரியவர்கள் இகவுலகையேவிட்டு மறைந்துவிட்டார்கள்!

சநாதன தர்மத்தின் மறுமலர்ச்சிக்கு ஓர் ஆணிவேராக, பக்தி மண்டபத்துக்கு ஒரு மைய ஸ்தம்பமாக விளங்கிய சேங்காலிபுரம் பெரியவர்களின் மறைவை ஒருகாலும் ஈடு செய்யவே இயலாது. அவரோடு ஒரு சகாப்தமே முடிந்து விட்டது!

'சுருதி சாகரம்' என்று ராஜாஜி குறிப்பிட்ட அந்த வேதக் கடலைக் காணோம் என்று எண்ணும் போதே 'சொரேல்' என்கிறது. தர்ம தத்துவங்களை, ஆசார நெறிகளை விட்டுக் கொடுக்காமல் அடித்துச் சொல்லும் போதே, தமது அன்புப் பாண்மையால் தாய்போல அணைத்தும் சொல்கிற இங்கிதம் வாய்ந்த அம்மகானைப் போல் ஒருவரை இனி எங்கு காண்போம்?

ஞானத்தின் கம்பீரமும், பக்தியின் கனிவும் ஒருங்கே கூடிய உத்தம சாரீரத்தால் உணர்ச்சி பொங்க உத்கோஷிக்கப்பட்ட அந்தத் தேவ பாஷை சுலோகங்களை இனி எங்கு கேட்போம்?

பரிவு சொட்டச் சொட்ட அனைவரையும் ஒருபோல் விசாரித்துத் துயர் நீக்கும் இன்முகத்தை எங்கு பார்ப்போம்?

பரமனிடம் பக்தி; ஜன சமூகம் அனைத்திடமும் அன்பு; ஒருவரிடம் எவ்வளவு குற்றம் இருப்பினும் அதைப் பொருட்படுத்தாமல் அவரிடமுள்ள சிறிதளவு குண நலனை மதித்து அதைப் பாரறிய எடுத்துச் சொல்லிக் கொண்டாடுகிற பெருந்தன்மை; அதன் மூலம் தோஷமுள்ளவர்களையும் வெகு பக்குவமாகக் குணசீலர்களாக்கிய ஆற்றல் — இதையெல்லாம் எவரிடம் காண்போம்?

சேங்காலிபுரம் பெரியவர்கள் எடுத்துரைத்த உண்மைகளில் அவரது அறிவு மட்டும் பிரகாசிக்கவில்லை; அவரது இதயமும் அவற்றில் ஆழ மூங்கித் திளைத்திருந்தது. இது காரணமாகவே அவரது வாக்குக்கு ஓர் அற்புத மந்திர சக்தி இருந்தது. பக்தியும், வைதிக ஆசாரங்களும் மிக நலிந்து வந்த தருணத்தில் மீண்டும் அவற்றுக்கு நவஜீவனம் தந்து பாரதத்தை மெய்யாகவே பாரதமாக்கும் மகத்தான புண்ணியத் திருப்பணியில் அதிமுக்கியமான ஸ்தானம் வகித்தார் சேங்காலிபுரம் பெரியவர்கள்.

இது முடிவுபெறாத திருப்பணி. பணி முடிவுபெறும் வரையில் அதில் ஆத்மார்ப்பணமாக ஈடுபட்ட உயிருக்கும் முடிவில்லை.

சேங்காலிபுரம் பெரியவர்கள் உடலைத் துறந்துவிட்டாலும், தர்ம உத்தாரணத்தையே கருதிய அவ்வுயிரின் அன்புச் சக்தி என்றென்றும் நம் தேசத்தைக் காத்து வரும். நம் சிற்றறிவுக்கு எட்டாத சூட்சுமமான முறையில் காத்து வரும், ஐயமில்லை.

'அழிவு உடலுக்கே; ஆன்மாவுக்கு அல்ல. இதை அறிந்தவன் உடலின் அழிவைக் கண்டு துக்கிப்பதில்லை', என்று சேங்காலிபுரம் பெரியவர்களின் உள்ளக் கோயிலில் குடிகொண்ட குருவாயூரப்பன் கூறிய மொழிகளே இன்று நமக்கு ஆறுதல் தரவேண்டும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

பஞ்சாபைச் சேர்ந்த பெருமானின் ஆன்ம ஹத்தியில் நாட்டுக்கே மதிப்பு வாய்ந்த ஓர் உயிரை இழந்து விட்டோம். சண்டிகர் பஞ்சாபை மட்டும் சேர வேண்டும் என்ற கோரிக்கை வெறும் அரசியல் விஷயம் மட்டுமல்ல, அதில் தார்மிகமான அம்சமும் கலந்துள்ளது என அவர் எண்ணினார் போலும். சண்டிகர் குறித்து எது சரி, எது தப்பு என்று கருத்துச் சொல்கிற விஷய ஞானம் எனக்கில்லை. ஆனால் இவ்விஷயத்தில் இந்திய சர்க்கார் செய்த கால தாமதத்தைப் பற்றி நான் வருந்துகிறேன். இப்பிரச்னையிலும் சரி, மற்ற பல பிரச்னைகளிலும் சரி, காலத்தைக் கடத்துவதால் எவ்விதப் பயனும் ஏற்படாது என்பதை உணராமல் இருக்கிறது இந்திய சர்க்கார். சண்டிகர் குறித்துப் பரிசீலனைக்குரிய விவரங்கள் அனைத்தும் கைவசம் இருந்தும், உடனுக்குடன் எவ்வித நெரிசலுக்கும் ஆட்படாமல் முடிவு எடுப்பதற்கு இந்திய அரசாங்கம் தவறிவிட்டது.

''பெருமானின் மறைவு மத்திய சர்க்காரைச் சண்டிகரின் எதிர்காலம் பற்றி முடிவு கட்டுவதில் விரைவுபடுத்தக் கூடும். ஆனால் எதையும் காலம் தாழ்த்திச் செய்யும் பொதுவான நிரந்தரப் போக்கை மாற்ற இது உதவாது. ஏனெனில், நமக்கு நினைவு தெரிந்த வரையில், 'நாளை மறுநாள் மட்டும் தள்ளிப் போடக்கூடிய ஒன்றை இன்றே ஏன் செய்ய வேண்டும்?' என்பதே இந்திய சர்க்காரின் கொள்கையாக உள்ளது.'' — இவ்வாறு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' கூறியிருப்பது நியாயமே.

★

செல்வத்தின் பயனை இன்பத்தை அநுபவிப்பது அதைத் தனக்கே உபயோகப்படுத்திக் கொள்வதில் இல்லை. பிறருடைய துன்பத்தைப் போக்கவும் இன்பத்தைப் பெருக்கவும் செல்வத்தைப் பயனுக்கும்போதே அதிக நிறைவு ஏற்படும். இது இந்த உலகுக்குச் சம்பந்தமில்லாத விஷயமல்ல; நடைமுறை விவேகமே. இதுவே காந்தி மகான் கூறிய தர்மகர்த்தா முறைக்கும், திருவள்ளுவர் உபதேசித்த ஒப்புரவுக்கும் அடிப்படை. 'ஊருக்கெல்லாம் பயனுகிற நீர் நிலை போல் உன்னுடைய செல்வம் அனைவருக்கும் பயனுகட்டும்; ஊர் நடுவேயுள்ள கனி மரம் போல் செல்வத்தை அனைவருக்கும் பயனுக்கு; பிறரின் வறுமை நோய் தீர்க்கும் மூலிகையாக உன் செல்வம் இருக்கட்டும்' என்றார் திருவள்ளுவர். காந்திஜி போலவே திருவள்ளுவரும் நடைமுறை உலகுக்குத் தேவையான உபதேசம் தந்தவரே. இன்பமும் கொடை உணர்வும் இணைந்த உண்மையான வாழ்வினை இருவரும் உணர்ந்து உபதேசித்தனர். 'ஒப்புரவு' என்ற மதிப்பு மிக்கத் தமிழ்ச் சொல், சுற்றியுள்ளோருடன் தன்னை ஒன்றுகக் கருதும் பான்மையைக் குறிப்பதாகும். குறளின் இருபத்திரண்டாவது அத்தியாயத்துக்கு இதுவே பொருள். 'சுயேச்சையாகவே ஒருவன் தன்னைச் சுற்றி உள்ளவர்களுடன் தன்னை ஒன்றுகக் கருதி வாழ்வதுதான் உண்மை வாழ்வு ; அப்படிச் செய்யாதவன் இறந்தவர்களுடன் வைத்துப் பார்க்க வேண்டியவனே' என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழ் மக்களுக்கு வழிகாட்டியாக இயற்றப்பட்ட குறளின் உபதேசம்.

★

ஏகபோக ரீதியில் நடைபெறும் சர்க்கார் தொழிலகங்களில் ஏற்படும் அநுபவங்களை அக்டோபர் 28ந் தேதி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆராய்ந்துள்ளது. அவை செயல்பட்டு வந்திருக்கும் விதத்தை நுணுக்கமாகப் பரிசீலிக்க வேண்டும் என்பது அதன் கருத்து. ''தனியார்த் துறை கையாளும் சில முறைகள் தவறுனவை, மன்னிக்க முடியாதவை என்று கூறுகிறார்கள். ஆனால் அரசாங்க நிறுவனங்கள் அதே தவற்றைச் செய்தால் அது சரியானது என்று மதிக்கப்படுகிறது. இது நியாயமற்றது. தனியார்த் துறையிலுள்ள ஏகபோகங்கள் விஷயத்தில் இருந்து வரும் எல்லா நிபந்தனைகளும், நிர்ப்பந்தங்களும் அரசாங்க அமைப்புக்களுக்கும் இருந்தாக வேண்டும். அவற்றுக்கு விலக்கு அளிப்பது நியாயமாகாது'' என்று கூறுகிறது 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'. தனியார் ஸ்தாபனங்களில் சில 'ஏகபோகத் தன்மை உள்ளவை' என்று சர்க்கார் கூறுகிறது. இது தெளிவற்ற பேச்சு. உண்மையில் இந்தத் தனியார் ஸ்தாபனங்கள் எப்போர்ப்பட்டவை? அவை திறமையாக நடக்கின்றன; நம்பகத்துக்குப் பெயர் எடுக்கின்றன ; செல்வாக்குப் பெறுகின்றன. இது காரணமாகவே பொது மக்களிடமிருந்து அவற்றுல் மூலதனத்தைச் சுலபமாகப் பெற முடிகிறது.

'ஏகபோகம்' என்பது தானாக வந்துவிடவில்லை. உற்பத்தி, விநியோகம் பற்றிய எந்தத் தொழிலில் ஈடுபடுவதானாலும் அரசாங்கத்திடமிருந்து லைசென்சும் பெர்மிட்டும் பெற்றாக வேண்டுமென்பது சர்க்காரின் கொள்கை. அரசாங்கம் இக்கொள்கையைக் கண்டிப்பாக அமுல் செய்வதன் காரணமாகத்தான் ஏகபோகங்கள் தோன்றுகின்றன. அதாவது, ஏகபோகங்களைப் படைப்பதே சர்க்கார்தான். ஆனால் தன்னிடமே உள்ள ஏகபோகங்களைத் தவிர மற்றவை விஷயத்தில்தான் அதற்குக் கோபம் ஏற்படுகிறது.

★

ரபாட் சம்பவத்துக்கும் வட வியட்நாம் சர்க்காரிடம் ஏற்பட்டுள்ள புதுக் காதலுக்கும் இந்திய சர்க்கார் சார்பில் பேசுகிறவர்கள் நியாயம் கூற முற்பட்டிருக்கிறார்கள். இது சரியல்ல. தவறுகளை மனமார ஒப்புக்கொண்டு திருந்த முற்படுவதுதான் நியாயம். சர்க்காரின் மனப்பான்மை மிகவும் துரதிர்ஷ்டவசமானது. உலக நாடுகள் இந்தியாவை எள்ளிநகையாடுவதற்கு இது காரணமாகிறது. அமெரிக்காவிடமிருந்து உதவி பெறுவதற்கான வாய்ப்புக்கள் முன்னைவிட இதனுல் மோசமாகின்றன.


பாஷ்பெருமான் உடல் தகனத் துக்குச் செல்கிறதா?
இல்லை! இது காங்கிரஸைத் தகனம் செய்வதற் காக உங்கள் ஆணைப்படி சேகரித்த கையெழுத்து மூட்டை.
நான் மையக் கொள்கைக் கோஷத்தின் மீது செல்லும் போது ஏன் வழி மறைக்கிறீர்கள்?
உங்களுடைய சர்க்கார் உங்கள் பதவி காலத்துடன் முடிந்துவிடும். காங்கிரஸ் அதன் பிறகும் நீடிக்க வேண்டும்.
பிரசார கோஷங்கள்
சாமா


சாதாரண ஜலதோஷம் சிலரை உடனே பற்றிக் கொள்ளுகிறது. மற்றவர்களைப் பற்றுவதில்லை. ஏன் ?



சாதாரண ஜலதோஷத்தால் எளிதில் பாதிக்கப்படுதல் மற்றும் இதர உடற்பிணிகள், அதாவது பசியின்மை, சோர்வு, சருமம் மற்றும் பற் கோளாறுகள் இவற்றிற்கு காரணம், விடமின்கள் மற்றும் தாதுச் சத்துக்களின் பற்றாக்குறையாக இருக்கக்கூடும். எனவே, போதிய அளவு விடமின்களும் தாதுச் சத்துக்களும் உங்கள் உடலுக்கு ஒழுங்காகக் கிடைப்பதற்காக நீங்கள் நாள் தோறும் ஒரு விம்க்ரான் சாப்பிடுங்கள். விம்க்ரானில் 11 அத்தியாவசிய விடமின்களும், 8 முக்கியமான மினரல்களும் அடங்கியுள்ளன. அதனால் உங்களுக்கு ஆரோக்கியம், வலிமை, ஆற்றல், மற்றும் நோய்களை எதிர்க்கும் சக்தி கிடைக்கும்.

விம்க்ரான்®

மல்டிபின் விடமின்-மினரல்
டேப்லெட்டுகள்





நாள் முழுவதும் உங்களை
சக்தியுடன் வைத்திருக்க
ஒரே ஒரு விம்க்ரான்
மாத்திரை
போதுமானது.

SQUIBB® SARABHAI CHEMICALS

® இ. ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட்டின், ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்கைக் குறிக்கிறது. கரம்சந்த் பிரேம் சந்த் பிரைவேட் லிட்., இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

Shilpi SC 4A/69 Tam



பொன்னியின் செல்வன்

அமரர் **கல்கி**

நாலாம் அத்தியாயம்

தாழைப் புதர்

நடுக் கடலில் படகு தொட்டில் ஆடுவது போல் உல்லாசமாக ஆடிக் கொண்டு சென்றது. இரண்டு நாளைக்கு முன்னால் அங்கே தென்னை மர உயரம் அலைகள் எழும்பி விழுந்தன என்று கற்பனை செய்வதே கடினமான காரியம்.

படகில் இளவரசர் பொன்னியின் செல்வரும் வந்தியத்தேவனும் பூங்குழலியும் இருந்தனர்.

பூங்குழலியின் கையில் துடுப்பு இருந்தது. ஆனால் அதை அவள் விசையாகப் போடவில்லை. வந்தியத்தேவனுக்கும் இளவரசருக்கும் நடந்த சம்பாஷணையை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவர்களும் பேச்சில் கவனமாக இருந்தார்கள். படகு விரைவாகப் போக வேண்டுமென்று ஆவல் கொண்டவர்களாகத் தோன்றவில்லை.

படகு கோடிக்கரை சேர்ந்த பிறகு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றித் தான் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இளவரசர் தஞ்சாவூருக்குப் போகக் கூடாது என்றும், பழையாறைக்கு வரவேண்டும் என்றும் வந்தியத்தேவன் வாதிட்டுக் கொண்டிருந்தான். அதற்குப் பல காரணங்களை அவன் எடுத்துச் சொன்னான்.

''தங்கள் சகோதரி தங்களை மிக அவசர காரியமாகப் பார்க்க விரும்புகிறார். தங்களைக் கையோடு அழைத்துக் கொண்டு வருவதாக வாக்களித்து வந்திருக்கிறேன். அதை நிறைவேற்றி வைக்க வேண்டும்'' என்று மன்றாடினான்.

''உன் வாக்கை நிறைவேற்றுவதற்காக என் தந்தையின் கட்டளையை மீறச் சொல்லுகிறாயா?'' என்று இளவரசர் கோபமாகக் கேட்டார்.

''அது தங்கள் தந்தையின் கட்டளையில்லை; பழுவேட்டரையரின் கட்டளையல்லவா?'' என்றான் வந்தியத்தேவன்.

அதோடு இன்னொன்றும் சொன்னான்: ''சக்கரவர்த்தியைத் தாங்கள் பார்க்கப் போவதாயிருந்தாலும் சுதந்திரமாகப் பார்க்கப் போவது நல்லதா ? பழுவேட்டரையர்களின் சிறையாளியாகப் பார்க்கப் போவது நல்லதா? நான் சொல்கிறேன், கேளுங்கள். 'தங்களைப் பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தியிருக்கிறார்கள்' என்ற செய்தி பரவ வேண்டியதுதான். சோழ நாட்டு மக்கள் எல்லாரும் திரண்டு எழுந்து வந்து விடுவார்கள். தங்களுடைய அருமைத் தாய்நாடு ஒரு பயங்கர ரணகளமாகி விடும். அது நல்லதா என்று எண்ணிப் பாருங்கள்! அப்படிப்பட்ட கேடு சோழ நாட்டுக்கு ஏற்படக் கூடாது என்றுதான் கடவுளே பார்த்து அந்தச் சுழற் காற்றை ஏவி விட்டிருக்க வேண்டும். கடவுளின் விருப்பத்துக்கும் விரோதமாகத் தாங்கள் சோழ நாட்டில் கலவரத்தை உண்டாக்க விரும்புகிறீர்களா ?'' என்று கேட்டான் வந்தியத்தேவன்.

அவ்வளவு நேரமும் அவன் சொல்லி வந்த வாதங்களுக்குள் இது இளவரசரின் மனத்தை ஓரளவு மாற்றியது. தம்மைப் பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிந்தால் சோழ நாட்டில் கலவரம் உண்டாவது சாத்தியந்தான். மக்களுக்குத் தம்மிடம் உள்ள அபிமானம் எவ்வளவு

மகத்தானது என்பது அவருக்கு ஒருவாறு தெரிந்துதானிருந்தது. ஆகையால் இளவரசர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, ''அப்படியே உன் விருப்பத்தை நிறைவேற்ற நான் முடிவு செய்தாலும் அது எப்படிச் சாத்தியம்? கோடிக்கரையில் பழுவேட்டரையர்களின் ஆட்கள் எனக்காகக் காத்துக் கொண்டிருக்க மாட்டார்களா?'' என்று கேட்டார்.

''அதற்கு உதவி செய்ய இந்த ஓடக்காரப் பெண் இருக்கிறாள். கரையில் எத்தனை பேர் காத்திருந்தாலும் அவர்கள் கண்ணில் படாமல் கோடிக்கரைக் காட்டுக்குள் நம்மைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவாள். — பூங்குழலி! நான் கூறியது காதில் விழுந்ததா? அவ்விதம் செய்ய முடியுமா?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

பூங்குழலி அப்போது ஏழாவது சொர்க்கலோகத்தில் இருந்தாள். இளவரசரைக் கடலிலிருந்து காப்பாற்றிப் படகிலேற்றி அழைத்துக் கொண்டு வந்தது அவளுக்கு எல்லையில்லாத உள்ளக் களிப்பை அளித்திருந்தது.

கோடிக்கரை சேர்ந்ததும் அவரைப் பிரிய வேண்டுமே என்ற எண்ணம் இடையிடையே வந்து துன்புறுத்திக் கொண்டிருந்தது. மேலும் அவருக்கு எந்த விதத்திலாவது உதவி செய்ய முடியுமானால், அதைக் காட்டிலும் அவள் பெறக்கூடிய பேறு வேறு என்ன இருக்க முடியும் ?

'' கோடிக்கரைக்குக் கொஞ்சம் மேற்கே தள்ளிப் படகைக் கொண்டு போனால் அங்கே இருபுறமும் காடு அடர்ந்த கால்வாய் ஒன்று இருக்கின்றது. அதன் வழியாகப் படகை விட்டுக் கொண்டு போகலாம். இருபுறமும் அங்கே சதுப்பு நிலம். சுலபமாக யாரும் வர முடியாது !'' என்று பூங்குழலி சொன்னாள்.

'' எங்களை அங்கே விட்டு விட்டு நீ கோடிக்கரை போய்த் தகவல் விசாரித்துக் கொண்டு வர முடியும் அல்லவா?''

''முடியும். படகை ஒருவரும் பார்க்க முடியாதபடி நிறுத்துவதற்கு எத்தனையோ இடம் இருக்கிறது.''

''இளவரசே ! கேட்டீர்களா?'' என்றான் வந்தியத்தேவன்.

''கேட்டேன், அப்பா! என்னுடைய தாய்நாட்டில் என்னைத் திருடனைப் போல் பிரவேசிக்கச் சொல்லுகிறாய். திருடனைப் போல் ஒளிந்திருக்கச் சொல்லுகிறாய்'' என்றார்.

படகில் சற்று நேரம் மௌனம் குடி கொண்டிருந்தது. பிறகு இளவரசர், ''சமுத்திர குமாரி ! ஏன் படகை அடியோடு நிறுத்தி விட்டாய்?'' என்று கேட்டார்.

பூங்குழலி வந்தியத்தேவனைப் பார்த்து விட்டுத் துடுப்பை வலிக்க ஆரம்பித்தாள்.

''பாவம்! இந்தப் பெண் எத்தனை நேரம் தனியாகத் துடுப்பு வலிப்பாள்? நான் கொஞ்சம் தள்ளிப் பார்க்கிறேன். இங்கே கொடு, அம்மா, துடுப்பை!'' என்றான் வந்தியத்தேவன்.

அவனுடைய எண்ணத்தை அறிந்த இளவரசர் புன்னகை புரிந்தார்.

''நண்பனே! உன்னுடைய சூழ்ச்சிகள் எல்லாம் வீண்தான். நான் பழையாறைக்கும் போகப் போகிறதில்லை; தஞ்சாவூரையும் பார்க்கப் போகிறதில்லை. கடவுள் என்னைக் கைலாசத்துக்கே அழைத்துக் கொண்டு போய் விடுவார் போலிருக்கிறது!'' என்றார்.

வந்தியத்தேவனும் பூங்குழலியும் பீதியடைந்து இளவரசரை உற்றுப் பார்த்தார்கள். அவர் உடம்பு நடுங்கத் தொடங்கியிருப்பதைக் கண்டார்கள்.

வந்தியத்தேவன் அவர் அருகில் சென்று, '' ஐயா ! இது என்ன ? தங்கள் உடம்பு ஏன் நடுங்குகிறது?'' என்று கேட்டான்.

''இது குளிர் காய்ச்சல், அப்பனே! இலங்கையில் இந்தக் காய்ச்சல் அதிகம் பரவியிருக்கிறது என்று சொன்னேனே, ஞாபகம் இல்லையா? இந்தச் சுரம் வந்தவர்கள் பிழைப்பது அரிது !'' என்று சொன்னார் இளவரசர்.

கடல் நடுவில் கப்பலின் பாய்மரம் இடி விழுந்து பற்றிக் கொண்ட போது கூட வந்தியத்தேவன் அவ்வளவு கலக்கம் அடையவில்லை. இளவரசரின் வார்த்தைகள் அவ்வளவாக அவனை இப்போது கதிகலங்கச் செய்துவிட்டன.

பூங்குழலியின் கையிலிருந்து துடுப்பு தானாக நழுவிவிட்டது. உடம்பில் ஜீவ சக்தி அடியோடு மங்கி விட்டது. கண்களில் மட்டும் உயிரின் ஒளி தோன்றியது. அந்தக் கண்களினால் இளவரசரை வெறித்துப்பார்த்துக்கொண்டு நின்றாள்.

இளவரசரின் உடல் நடுக்கம் அதிகமாகிக் கொண்டேயிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் தூக்கித் தூக்கிப் போட ஆரம்பித்தது.

''ஐயா! நான் என்ன செய்யட்டும்? சொல்லுங்கள்! ஒன்றும் புரியவில்லையே? படகை எங்கே கொண்டு போகட்டும்? பூங்குழலி! கோடிக்கரையில் வைத்தியர் இருக்கிறார் அல்லவா?'' என்று வந்தியத்தேவன் பதறினான்.

பூங்குழலியோ பேசாமடந்தை ஆகியிருந்தாள்.

இளவரசர் திடீரென்று குதித்து எழுந்தார். நடுங்கிக் கொண்டிருந்த அவர் உடம்பு இப்பொழுது நிற்க முடியாமல் தள்ளாடியது.

''என்னை என் தமக்கையிடம் கொண்டு போங்கள்! என்னை உடனே இளைய பிராட்டியிடம் கொண்டு போங்கள்!'' என்ற வார்த்தைகள் அவருடைய வாயிலிருந்து குளறலாக வெளி வந்தன.

இதைக் கேட்ட வந்தியத்தேவன் குதூகலம் அடைந்தான். அந்தக் குதூகலத்தில் இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான்.

நடுக்கத்துடன் ஆடிக்கொண்டு நின்ற இளவரசர் அடுத்த கணத்தில், ''அக்கா! இதோ வருகிறேன்! உன்னைப் பார்க்க 'இதோ வருகிறேன்! யார் தடுத்தாலும் இனிமேல் கேட்க மாட்டேன்!'' என்று சொல்லிக் கொண்டே படகிலிருந்து கடலில் பாயப் போனார்.

நல்ல வேளையாக, வந்தியத்தேவன் அப்போது, நிலைமை இன்னதென்பதை உணர்ந்தான். இளவரசர் சுரத்தின் வேகத்தினால் சுய



உணர்வு இழந்து விட்டார் என்பதை அறிந்து கொண்டான். கடலில் பாயப் போனவரைச் சட்டென்று பிடித்து நிறுத்தினான்.

ஏற்கனவே மிக்க பலசாலியான இளவரசர் இப்போது சுரத்தின் வேகத்தினால் பன்மடங்கு அதிக பலம் பெற்றிருந்தார். வந்தியத் தேவனுடைய பிடியிலிருந்து திமிறிக் கொள்ள முயன்றார். தன்னால் மட்டும் அவரைத் தடுக்க முடியாது என்பதை வந்தியத்தேவன் கண்டு, ''பூங்குழலி! பூங்குழலி! சீக்கிரம் ஓடி வா !'' என்று அலறினான்.

செயலற்று நின்ற பூங்குழலி உயிர் பெற்றாள். ஒரு பாய்ச்சல் பாய்ந்து இளவரசர் அருகில் வந்து அவரைக் கடலில் விழாமல் தடுப்பதற்காக ஒரு கரத்தைப் பற்றினாள். சுர வேகத்தினால் இளவரசர் பெற்றிருந்த மத யானையின் பலம் உடனே மாயமாய்ப்போய்விட்டது. சின்னஞ்சிறு குழந்தையைப் போல் ஆனார்.

''அக்கா! நீ சொல்கிறபடியே பேசாமல் படுத்திருக்கிறேன். என் பேரில் வருத்தப்படாதே. அக்கா! நீ ஒருத்தி இல்லாவிடில் என்னுடைய கதி என்ன?'' என்று இளவரசர் கூறிவிட்டு விம்மினார்.

வந்தியத்தேவனும் பூங்குழலியும் இளவரசரை மெதுவாகப் படகில் படுக்க வைத்தார்கள்.

அதன் பிறகு பொன்னியின் செல்வர் சும்மாப் படுத்திருந்தார். அவருடைய கண்கள் எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. அவருடைய வாயிலிருந்து ஏதேதோ வார்த்தைகள் குழறிக் குழறி வந்து கொண்டிருந்தன. சிலவற்றுக்குப் பொருள் விளங்கின. பெரும்பாலும் சம்பந்தமற்ற வார்த்தைகளாகத் தோன்றின.

இளவரசரிடம் ஆலோசனை கேட்பதில் பயனில்லை என்பதை வந்தியத் தேவன் உணர்ந்தான். இந்த மிகப் பயங்கரமான ஆபத்திலிருந்து பொன்னியின் செல்வரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தன் தலையில் சுமந்திருக்கிறது என்பதையும் அறிந்தான். ஆனால் புத்திசாலியான இந்தப் பெண் ஒருத்தி இருக்கிறாள். இளவரசரைப் பாதுகாப்பதில் தன்னைப் போலவே இவளும் கவலை கொண்டவள்தான். பின்னர், எத்தனையோ அபாயங்களிலிருந்து தன்னைத் தப்புவித்த கடவுளின் கருணையும் இருக்கவே இருக்கிறது.

''பூங்குழலி! படகை இனிமேல் வேகமாகச் செலுத்திக் கொண்டு போக வேண்டியதுதானே ?'' என்றான் வந்தியத்தேவன்.

பூங்குழலியின் கரங்கள் இழந்திருந்த வலிமையை மீண்டும் பெற்றன. படகு துரிதமாகச் சென்றது.

வந்தியத்தேவன் இளவரசரின் அருகிலேயே உட்கார்ந்திருந்தான். மறுபடியும் அவர் சுர வேகத்தில் கடலில் குதித்து விட்டால் என்ன செய்வது என்பதை நினைத்த போதே அவன் கதி கலங்கியது. ஆகையால் சர்வஜாக்கிரதையாக அவரைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அதே சமயத்தில் மேலே செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றி அவன் உள்ளம் தீவிரமாகச் சிந்தனை செய்தது.

'' பெண்ணே ! உனக்கு என்ன தோன்றுகிறது! நாம் துணிந்து கோடிக்கரைக்கே போய் விடலாமா? இளவரசரைப் பாதுகாப்பதற்கு உன் குடும்பத்தார் உதவி செய்வார்கள் அல்லவா?'' என்று கேட்டான்.

''ஐயா! இந்தக் காலத்தில் யாரை நம்பலாம், யாரை நம்பக் கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும்? என் தமையன் மனைவி ஒருத்தி இருக்கிறாள். அவள் பணத்தாசை பிடித்தவள். என் தந்தைக்குப் படி அளப்பவர்கள் பழுவேட்டரையர்கள்!'' என்றாள் பூங்குழலி.

''மேலும், தங்களைப் பிடிக்க வந்த பழுவூர் ஆட்கள் இன்னும் கோடிக்கரையில் தங்கி இருக்கலாம். இளவரசரின் வரவை எதிர்பார்த்து மேலும் பல புதிய ஆட்களும் வந்திருக்கலாம் !'' என்று தொடர்ந்து கூறினாள்.

அவளுடைய முன் யோசனையைக் குறித்து வந்தியத்தேவன் வியப்படைந்தான். இந்த இக்கட்டான சமயத்தில் தனக்கு அவளுடைய உதவி கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தான்.

'' அப்படியானால், நேரே கோடிக் கரைக்குப் போவது அபாயம் என்று நீயும் எண்ணுகிறாயா?'' என்றான்.

''அதோ பாருங்கள்!'' என்று சுட்டிக் காட்டினாள் பூங்குழலி.

அவள் சுட்டிக் காட்டிய திசையில் கப்பல் ஒன்று நின்று கொண்டிருந்தது. அதற்கு அப்பால் கோடிக்கரைக் கலங்கரை விளக்கின் உச்சியும் தெரிந்தது.

''ஆகா! பெரிய மரக்கலம் ஒன்று நிற்கிறதே! அது யாருடைய கப்பலோ, என்னமோ! ஒருவேளை பார்த்திபேந்திரனுடைய கப்பலாயிருக்கலாம். அப்படியிருக்குமானால், இந்த நிலையில் இளவரசரைக் காஞ்சிக்கு அழைத்துப் போவதே நல்லதல்லவா ?''

''பழுவேட்டரையரின் கப்பலாகவும் இருக்கலாம். ஐயா ! கப்பலுக்குப்பின்னால் ஏதாவது தெரிகிறதா ?''

''கோடிக்கரைக் கலங்கரை விளக்கின் உச்சி தெரிகிறது.''

''அதில் ஏதாவது வித்தியாசமாகக் காணப்படுகிறதா ?''

''எனக்கு ஒன்றும் வித்தியாசமாய்த் தெரியவில்லையே !''

''எனக்குத் தெரிகிறது. அந்த உச்சியில் கூட்டமாக மனிதர்கள் நின்று கடலை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.''

''அங்கிருந்து பார்ப்பவர்களுக்கு இந்தப் படகு தெரியுமா?''

''தெரியாது. இன்னும் கொஞ்சம் கரையை நெருங்கினால் தெரியும்.''

''எல்லாவற்றுக்கும் நாம் முன்ஜாக்கிரதையாக இருப்பதே நல்லது. நீ முன்னம் சொன்னாயே கோடிக்கரைக்கு மேற்கே கால்வாய் ஒன்று இருக்கிறதென்று ? அங்கேயே படகை விடலாமா ?''

''அப்படித்தான் செய்ய வேண்டும். இருட்டுகிற சமயத்துக்கு அங்கே போய்ச் சேரலாம். ஐயா! நீங்கள் ஒரு நாள் இருண்ட மண்டபத்தில் ஒளிந்திருந்தீர்களே? அதற்கு வெகு சமீபம் வரையில் அந்தக் கால்வாய் வருகிறது. இளவரசருடன் தாங்கள் சற்று நேரம் அங்கே தாமதித்தால் நான் போய் எல்லாவற்றையும் விசாரித்துக் கொண்டு விரைவில் வந்து சேருகிறேன்.''

''கால்வாய் அங்கேயே நின்று விடுகிறதா, பூங்குழலி! மேலும் எங்கேயாவது போகிறதா ?''

''கோடிக்கரையிலிருந்து நாகைப்பட்டினம் வரையில் அந்தக் கால்வாய் போகிறது'' என்றாள் பூங்குழலி.

இந்தச் சமயத்தில் பொன்னியின் செல்வர் சுர வேகத்தில் தமக்குத் தாமே பேசிக் கொண்டது கொஞ்சம் உரத்த சத்தத்துடன் கேட்டது.

''ஆமாம், அக்கா, ஆமாம்! நாகைப்பட்டினத்துப் புத்தபிக்ஷுக்கள் சொன்னதாகக் கூறினாயே? அதன்படியே நடந்தது. அநுராதபுரத்தில் புத்த பிக்ஷுக்களின் மகா சங்கத்தார் எனக்கு இலங்கைச் சிங்காதனத்தையும் கிரீடத்தையும் அளிக்க முன்வந்தார்கள். நான்தான் மறுத்து விட்டேன், அக்கா ! இராஜ்யத்தில் எனக்கு ஆசையில்லாதபடியால்தான் மறுதளித்தேன். நீ வேறு எது சொன்னாலும் கேட்கிறேன். இராஜ்யம் ஆளும் தொல்லை மட்டும் எனக்கு வேண்டாம் ! அதைக் காட்டிலும் கடலில் படகு விட்டுக் கொண்டு எவ்வளவோ ஆனந்தமாயிருக்கலாம். கேள், அக்கா! கோடிக்கரையில் ஓடக்காரப் பெண் ஒருத்தி இருக்கிறாள்....''

இதைக் கேட்ட பூங்குழலியின் உடம்பெல்லாம் புளகாங்கித மடைந்தது. வந்தியத் தேவனுக்கோ ஆத்திரம் வந்தது. மேலே என்ன சொல்லப் போகிறாரோ என்று கேட்க இருவரும் அடங்கா ஆர்வம் கொண்டிருந்தனர். ஆனால் திடீரென்று இந்த இடத்தில் இளவரசருக்குச் சுய உணர்வு கொஞ்சம் வந்ததாகத் தோன்றியது.

சுற்றுமுற்றும் விழித்துப் பார்த்து விட்டு, ''இன்னும் கோடிக்கரை வரவில்லையா ?'' என்று ஈனசுவரத்தில் கேட்டார் இளவரசர்.

வந்தியத்தேவன், ''அதோ கரை தெரிகிறது!'' என்றான். இளவரசரிடம் யோசனை கேட்கலாமா, வேண்டாமா என்று அவன் யோசிப்பதற்குள் மீண்டும் இளவரசர் நினைவை இழந்து சுரப் பிராந்தி உலகத்துக்குப் போய்விட்டார்.

* * *

இளவரசர் கடைசியாக 'ஓடக்காரப் பெண்'ணைப் பற்றிக் கூறிய வார்த்தைகள் பூங்குழலியின் மனத்தில் எண்ண அலைகளை எழுப்பி விட்டிருந்தன. வந்தியத் தேவனையும் இளவரசரையும் பார்ப்பதற்கே அவளுக்குக் கூச்சமாயிருந்தது. ஆகையால் படகு சென்ற திசையையே பார்த்தவண்ணம் துடுப்பைப் போட்டுக் கொண்டிருந்தாள். அதுகாறும் கப்பல் நின்ற இடத்தை நோக்கிச் சென்ற படகு இப்போது திசை திரும்பித் தென் மேற்குப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தது.

இருட்டுகிற நேரத்தில் கடலிலிருந்து பூமிக்குள் குடைந்து சென்ற கால்வாயின் உள்ளே பிரவேசித்தது.

பூங்குழலி கூறியது போலவே அங்கே இருபுறமும் கரைகள் உயர்ந்த மேடாக இருந்தன. அந்த மேட்டுக் கரைகளில் மரங்கள் அடர்த்தியாகவும் உயரமாகவும் வளர்ந்திருந்தன.

படகைக் கரையோரமாக நிறுத்தி விட்டுப் பூங்குழலி மெல்லிய குரலில், ''ஐயா ! சற்றுப் படகைப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்று சொல்லி விட்டுக் கரையில் இறங்கினாள். கரையில் வளர்ந்திருந்த உயரமான ஒரு மரத்தின் மேல் ஏறிச் சுற்றுமுற்றும் பார்த்தாள். பிறகு அவசரமாக இறங்கி வந்தாள். ''நல்ல வேளை! இங்கே வந்தோம். கடற்கரையோரமாகச் சுமார் ஒரு காத தூரத்துக்கு ஆட்கள் நின்று காவல் புரிகிறார்கள். கலங்கரை விளக்கின் அருகில் ஒரே கூட்டமும் கோஷமுமாக இருக்கிறது!'' என்றாள்.

"யாராயிருக்கும் என்று ஏதாவது தெரிகிறதா?" என்று வந்தியத்தேவன் ஆவலுடன் கேட்டான்.

"நன்றாய்த் தெரியவில்லை. ஆனால் பழுவேட்டரையரின் ஆட்களாய்த்தான் இருக்க வேண்டும். வேறு யாராயிருக்க முடியும்? எப்படியிருந்தாலும், நான் சொன்ன இடத்துக்கு முதலில் போய்ச் சேருவோம். இரவு இரண்டாம் ஜாமத்துக்குள் நான் என் வீட்டுக்குப் போய் எல்லாவற்றையும் நிச்சயமாய்த் தெரிந்துகொண்டு வருகிறேன்" என்றாள்.

"பெண்ணே! உன்னை யாராவது பார்த்து விட்டால், என்ன செய்கிறது? உனக்கு ஏதேனும் இச்சமயம் நேர்ந்து விட்டால், எங்கள் கதி அதோ கதிதான்!" என்றான் வந்தியத்தேவன்.

"ஐயா! என் உயிரைப் பற்றி இத்தனை நாளும் நான் இலட்சியம் செய்ததில்லை. இன்றைக்குத்தான் கவலை பிறந்திருக்கிறது. இளவரசருக்கு அபாயம் நீங்கும் வரையில் என் உயிருக்கு ஒன்றும் வராது!" என்றாள் பூங்குழலி.

படகு கால்வாய்க்குள் மெள்ள மெள்ளச் சென்றது. சத்தம் சிறிதும் வெளியில் கேளாதபடி மிக மெதுவாகப் பூங்குழலி துடுப்பு வலித்தாள்.

கால்வாயின் இருபுறமும் இருள் சூழ்ந்திருந்தது. கரை ஓரமாக உயர்ந்து வளர்ந்திருந்த மரங்களின் கரிய நிழல்கள் கால்வாயில் விழுந்து அதன் கரிய நீரை மேலும் கரியதாக்கின.

வானத்திலிருந்து விண்மீன்கள் எட்டிப் பார்த்தன. வந்தியத்தேவனைப் போலவே நட்சத்திரங்களும் மிகுந்த கவலையுடன் அப்படகின் போக்கைக் கவனித்ததாகத் தோன்றியது.

நீரில் பிரதிபலித்த நட்சத்திரங்கள் கரையிலிருந்த மரங்கள் காற்றில் ஆடிய போது அவற்றின் நிழலும் ஆடியபடியால், அடிக்கடி சலனமடைந்து கொண்டிருந்தன. வந்தியத்தேவனுடைய உள்ளத்தின் சஞ்சலத்தை அவை சரியாகவே பிரதிபலித்தன.

ஒரு யுகம் போலத் தோன்றிய ஒரு நாழிகை நேரம் படகு கால்வாயில் சென்ற பிறகு, பூங்குழலி படகைக் கரையோரமாக நிறுத்தினாள்.

* * *

பூங்குழலி கால்வாயின் கரை மீதேறிக் காட்டு வழியில் புகுந்து சென்றாள். அதாவது அவளுடைய உடம்பு சென்று கொண்டிருந்தது. அவளுடைய உயிர் கால்வாயில் விட்டிருந்த படகிலேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அந்த முன்னிருட்டு நேரத்தில் முட்செடிகள், மேடு பள்ளங்கள், காட்டு ஜந்துக்கள் ஒன்றையும் லட்சியம் செய்யாமல் அதிவிரைவாக நடந்து சென்றாள். தடைகள் இல்லாத இடங்களில் ஓடவும் செய்தாள். நேரே கோடிக்கரைக் குழகர் கோயிலைக் குறி வைத்துக் கொண்டு போனாள். அவள் கோயில் வாயிலை அடைந்ததற்கும் குருக்கள் சுவாமி சந்நிதியின் கதவைப் பூட்டுவதற்கும் சரியாக இருந்தது.

அக்கம் பக்கம் பார்த்து வேறு யாரும் இல்லை என்று தெரிந்து கொண்டாள். கதவைப் பூட்டிவிட்டுத் திரும்பிய குருக்கள் எதிரில் போய் நின்றாள்.

குருக்கள் அவளை அந்த நேரத்தில் பார்த்துச் சிறிது வியப்படைந்தார். அவளுடைய சுபாவத்தை நன்கு அறிந்தவராயிருந்தும்கூடக் கொஞ்சம் திடுக்கிட்டுத் திகைத்துப் போய் விட்டார்.

"நீயா, பூங்குழலி! வேறு யாரோ என்று பார்த்தேன். கோடிக்கரை முழுதும்தான் ஒரே அமர்க்களப்படுகிறதே! எங்கே, அம்மா, உன்னைக் கொஞ்ச நாளாகக் காணோம்? இவ்வளவு தடபுடலிலும் உன்னைப் பற்றித் தகவல் இல்லையே என்று இன்று சாயங்காலம் கூட யோசித்தேன்" என்றார்.

"வெளியூருக்குப் போயிருந்தேன், சுவாமி! ஏதோ அமர்க்களமாயிருக்கிறதேயென்றுதான் உங்களிடம் விசாரிக்கலாம் என்று வந்தேன். கடற்கரையெல்லாம் நிற்பவர்கள் யார்?" என்று பூங்குழலி கேட்டாள்.

"உனக்கு ஒன்றுமே தெரியாதா? வீட்டுப் பக்கம் போகவில்லையா?"

"வீட்டுப் பக்கம் போனேன். அங்கே யார் யாரோ கூட்டமாயிருக்கவே திரும்பி விட்டேன். புது மனிதர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது என்றுதான் உங்களுக்குத் தெரியுமே? வந்திருப்பவர்கள் யார்?"

"பெரிய பழுவேட்டரையர் வந்திருக்கிறார். அவருடைய இளைய ராணி வந்திருக்கிறாள். அவர்களுடைய பரிவாரங்கள் வந்திருக்கிறார்கள். இன்னும் காஞ்சிபுரத்துப் பார்த்திபேந்திர பல்லவனும்! அவனும் வந்திருக்கிறான். வெறுமனே வரவில்லை. பயங்கரமான செய்தியுடன் வந்திருக்கிறான். உனக்கு அதுகூடத் தெரியாதா, பூங்குழலி?"

"அது என்ன பயங்கரமான செய்தி? எனக்கு ஒன்றுமே தெரியாதே!"

"அந்தப் பாவியினுடைய கப்பலில் இளவரசர் பொன்னியின் செல்வரும் வந்தாராம். வழியில் சுழற் காற்று அடித்ததாம். யாரையோ காப்பாற்றுவதற்காக இளவரசர் கடலில் குதித்து விட்டாராம். பிறகு அகப்படவேயில்லையாம்! ஒருவேளை இந்தக்



அரும்பும் இளம் காதலைப் போன்ற புதுமை !
ஸிகோவாவின் "பூலோன் கி பஹார்"
அணிந்துள்ள
ராக்கி பிஸ்வாஸ்
மற்றுமொரு மின்வெட்டு. ஸிகோவாவின்
"பூலோன் கி பஹார்" புதுமைச் சித்திரத் தையல்
புனைந்த செங்கடர் வண்ண வாயில் ஸிகோவா
பருத்தி, ஸாட்டின், நைலான் ஜார்ஜெட்
ஆகியவற்றிலும் கிடைக்கின்றன
ஸிகோவா எம்பிராய்டரி துணிகள்...
கிட்டாதிருக்கலாகுமோ அந்த
கட்டழகுக் கனா உமக்கே'

ஜெண்டீல்

விலையுயர்ந்த ஆடைகளை வீட்டிலேயே பத்திரமாக சலவை செய்ய!



ஒவ்வோர் ஆடைக்கும் ஆகும் செலவு 15 பைசாதான்!

புத்தம் புதிய திரவ டெடர்ஜண்ட் ஜெண்டீல், உங்கள் விலையுயர்ந்த ஆடைகள் அனைத்தையும் வீட்டிலேயே சிறப்பாக சலவை செய்வதற்காக பிரத்யேக செய்முறையின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. பட்டு, கம்பளி, நைலான், ரேயான், 'டெரீன்' முதலான துணிகளை ஜெண்டீல் மிகமிக மென்மையாகவும் மேன்மையாகவும் சலவை செய்யும். பின்னர் அத்துணிகள் புத்தம் புதியவைபோல் தோற்றமளிக்கும். உங்கள் ஜரிகைப் புடவைகளைக்கூட நீங்கள் ஜெண்டீலால் சலவை செய்யலாம்; ஜரிகை பளபளப்புடன் புது மெருகு பெற்றுத் திகழும். ஜெண்டீல் மிகவும் சிக்கனமானது!

ஒரு பாட்டில் ஜெண்டீல் சுமார் 35 ஆடைகளை சலவை செய்யப் போதுமானது! —அதாவது, ஓர் ஆடைக்கு ஆகும் செலவு 15 பைசாதான்! பத்திரமாக சலவை செய்யும் சிக்கனமான ஜெண்டீல் இன்றே உபயோகித்துப் பாருங்கள்!

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், பம்பாய்.

Shilpi SOM/6A/69 Tam

கடற்கரையில் வந்து ஒதுங்குவாரோ என்று பார்ப்பதற்காகத்தான் பழுவேட்டரையரின் ஆட்கள் கோடிக்கரையெங்கும் அலைகிறார்கள். பழுவேட்டரையரும் அலைகிறார். ஏன், அவருடைய இளைய ராணிகூட அலைகிறாள். சற்று முன்னால் இங்கேகூட அந்த அம்மாள் வந்திருந்தாள். பூங்குழலி! பழுவூர் இளைய ராணியைப் பற்றி ஜனங்கள் என்னவெல்லாமோ பேசிக் கொள்கிறார்களே, அதெல்லாம் சுத்தத் தவறு! நம் இளவரசருக்கு நேர்ந்த கதியைக் குறித்து அந்த அம்மாள் எப்படித் துடிதுடிக்கிறாள் தெரியுமா?''

''அப்படியா, குருக்கள் ஐயா? பழுவூர் ராணியின் நல்ல குணத்தைப் பற்றித் தாங்கள் சொல்வது எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது. ஆனால் இங்கே எதற்காக அந்த ராணி வந்தாளாம்?''

''இளவரசர் எப்படியாவது உயிரோடு அகப்பட வேண்டும் என்று குழகரைப் பிரார்த்தித்துக் கொள்வதற்காக வந்தாளாம். உன்னைப் போல் எல்லாரும் கல் நெஞ்சு படைத்தவர்களாயிருப்பார்களா? இளவரசரைப் பற்றிய பயங்கரச் செய்தி கேட்டுக்கூட நீ துளிக்கூடக் கலங்கவில்லையே?''

''நாம் கலங்கி என்ன பயன், சுவாமி? எல்லாம் விதியின்படி நடக்கும் என்று நீங்களே எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறீர்களே! அது போனால் போகட்டும். அவ்வளவு பெரிய மனிதர்கள் வந்திருக்கும் போது நான் என் வீட்டுக்குப் போக விரும்பவில்லை. கையிலே வைத்திருக்கும் பிரசாதத்தை என்னிடம் கொடுத்துவிட்டுப் போங்கள். நான் இங்கேயே சாப்பிட்டுவிட்டுக் கோயிலிலேயே இருந்து விடுகிறேன்.''

''நீ ஒரு தனிப் பிறவிதான் பூங்குழலி! பெரிய மனிதர்கள் வந்தால் எல்லாரும் அவர்களைப் போய்ப் பார்க்கவும் பழக்கம் செய்து கொள்ளவும் விரும்புவார்கள். உனக்கு வேற்று மனிதர்களையே பிடிப்பதில்லை. அதிலும் பெரிய மனிதர்கள் என்றால் ஒரே பயம். பெரிய மனிதர்கள் என்றால் உன்னைக் கடித்து விழுங்கி விடுவார்களா? எதற்காக இந்தக் காட்டில் தனியே இருக்க வேண்டும்?''

'' குருக்களையா! பிரஸாதத்தைக் கொடுக்க உங்களுக்கு இஷ்டமில்லாவிடில் வேண்டாம். என்னை வீணில் திட்டாதீர்கள்!''

''சிவ சிவா! உன்னை ஏன் நான் திட்டுகிறேன்? இந்தப் பிரஸாதம் உன் பசிக்குப் போதாதே என்று பார்த்தேன். தாராளமாய் வாங்கிக் கொள்!''



என்று அர்ச்சகர் துணியில் கட்டி வைத்திருந்த சுவாமிப் பிரஸாதத்தைக் கொடுத்தார்.

மூட்டையை வாங்கிப் பூங்குழலி பிரித்துப் பார்த்துவிட்டு, ''என் பசிக்கு இது போதாதுதான்! அவ்வளவு பெரிய சுவாமிக்கு இவ்வளவு குறைவாக நைவேத்தியம் வைக்கிறீர்களே! இது நியாயமா, சுவாமி! போனால் போகட்டும்! அந்தக் கெண்டியில் என்ன இருக்கிறது? குடிக்கிற ஜலமா?'' என்று கேட்டாள்.

'' இல்லை, சுவாமிக்கு அபிஷேகம் செய்த பால்! குழந்தைக்காக எடுத்துக் கொண்டு போகிறேன்.''

''இன்றைக்கு நானே உங்கள் குழந்தையாயிருக்கிறேன். அதையும் கொடுத்து விட்டுப் போங்கள். உங்களுக்குப் புண்ணியம் உண்டு.''

''நல்ல பெண் அம்மா, நீ! போகட்டும் கெண்டியையாவது பத்திரமாய் வைத்திரு!'' இவ்விதம் சொல்லிக் குருக்கள் கெண்டியையும் பூங்குழலியிடம் கொடுத்தார்.

அச்சமயத்தில் தூரத்தில் எங்கிருந்தோ ஆந்தையின் குரல் கேட்டது.

பூங்குழலி சிறிது திகைத்து, ''ஐயா! அது என்ன சத்தம்?'' என்று கேட்டாள்.

''தெரியவில்லையா, அம்மா! கோட்டான் கூவுகிறது. இந்தக் கோடிக்கரைக் காட்டில் கோட்டானுக்கா பஞ்சம்!'' என்று சொன்னார் குருக்கள்.

மறுபடியும் அந்தக் குரல் கேட்டது.

''ஆமாம்; கோட்டான் குரல் மாதிரி தான் இருக்கிறது!'' என்றாள் பூங்குழலி.

''உன்னை ஒரு கோட்டானும் ஒன்றும் செய்யாது. கோயில் பிராகாரக் கதவைத் தாளிட்டுக் கொண்டு படுத்துக் கொள் அம்மா!'' என்று சொல்லி விட்டுக் குருக்கள் நடையைக் கட்டினார்.

குருக்கள் மறைந்ததும் பூங்குழலியும் புறப்பட்டாள். பிரஸாதத்தை மடியில் கட்டிக் கொண்டு, கெண்டியைக் கையில் எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

கோட்டானின் குரல் கேட்ட திசையை நோக்கிச் சென்றாள். கொஞ்ச தூரம் போனதும் ஒரு குறுகிய வாய்க்கால் குறுக்கிட்டது. அதன் இருபுறமும் தாழம்பூப் புதர்கள் காடாக மண்டி வளர்ந்திருந்தன.

அந்த வாய்க்காலின் கரையைப் பிடித்துக் கொண்டே பூங்குழலி நடந்தாள். தாழம்பூச் செடிகளின் முட்கள் சில சமயம் அவளைக் குத்தின. அதை அவள் பொருட்படுத்த வில்லை.

தாழம்பூக்கள் வெடித்து மலர்ந்து நறுமணத்தைப் பரப்பின. அந்த மணம் மற்றவர்களைப் போதை கொள்ளச் செய்திருக்கும். ஆனால் பூங்குழலிக்கு அந்த ஞாபகம்கூட வரவில்லை.

கரையோடு காலடிச் சத்தம் கேளாத படி மெள்ள மெள்ள நடந்து போனாள். அவள் செவிகள் வெகு கவனமாக உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தன. காட்டுப் பிரதேசத்தில் இரவில் எத்தனையோ விதவிதமான சத்தங்கள் கேட்கும் அல்லவா? அவையெல்லாம் அவளுடைய கவனத்தைக் கவரவில்லை.


பின்னர், அவள் என்ன சத்தத்தைத் தான் எதிர்பார்த்தாள்! — இதோ!

இருவர் மெல்லிய குரலில் பேசும் சத்தம் கேட்டது. ஒன்று ஆண் குரல்; இன்னொன்று பெண்ணின் குரல்.

பூங்குழலி நன்றாக மறைந்து நின்று கொண்டாள். அவர்கள் பேசுவது இன்னதென்பதைக் கவனமாக உற்றுக் காது கொடுத்துக் கேட்டாள்.

'' மந்திரவாதி! இளவரசர் கடலில் விழுந்து இறந்துவிட்டதாகத்தான் உன்னைப் போல் எல்லோரும் நம்புகிறார்கள். பழுவேட்டரையரும் உருகி மாய்கிறார். ஆனால் நான் நம்பவில்லை!'' என்று அந்தப் பெண் குரல் கூறியது. **(தொடரும்)**

சோ சற்றுச் சிரிக்கட்டும்!



☐ சோ ஏன் எப்போதும் ஹாஸ்ய நாடகங்களே எழுதுகிறார்?

அவருக்கு நகைச்சுவை நாடகங்கள் எழுதத் தெரியாது! அதனால் ஹாஸ்ய நாடகங்களாகவே எழுதுகிறார்.

☐ சோவின் ஸடயருக்கும் ஷாவின் ஸடயருக்கும் என்ன வித்தியாசம்?

அது ஷா எழுதியது; இது சோ எழுதியது. அதுதான் வித்தியாசம்!

☐ சோ சினிமாவில் புகுந்தபிறகும் ஏன் நாடகத் துறையை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறார்?

சினிமாவிலிருந்து ரிடயரான பலர் நாடகத்தைத் தஞ்சமடைவதைப் பார்ப்பதால்!

☐ ஆயிரமாவது நாடகம் போட்ட பிறகு சோவின் எதிர்காலம்?

ஆயிரத்து ஓராவது நாடகம்!

☐ சோ அழுதால் எப்படி இருக்கும்?

சிரிப்பு வரும்!

☐ அவர் ஏன் தமது நாடகங்களுக்கு ஆங்கிலப் பெயர்களையே வைக்கிறார்?

அவருக்குக் கிரேக்க மொழி தெரியாது; அதனால்தான்!

☐ முகமது பின் துக்ளக் நாடகம் ரிகார்டாகி இருக்கிறதாமே?

ரிகார்ட் ஏற்படுத்திய நாடகமாயிற்றே! ரிகார்ட் ஆகாமல் இருக்குமா?

☐ நகர சபாக்கள் எல்லாம் சேர்ந்து சோவை ஆயிரம் நாடகம் போட்டதற்குப் பாராட்டினவே?

அதே விழாவில் தமது ஆயிரம் நாடகங்களைப் போட இடமளித்ததற்குச் சபாக்களைச் சோ பாராட்டியிருப்பாரே!

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

6. "வழி காட்டுவாய்!"

பராசக்தி கருணை கொண்ட சக்தியா அல்லது தீய சக்தியா? என் அறிவுக்கு அது கருணை கொண்ட சக்தியாகத்தான் தோன்றுகிறது. எவ்வளவு அழிவுக்கும் இடையே உயிர் நின்று வருகிறது. எவ்வளவு பொய்க்கும் இடையே மெய் நிலைத்து நிற்கிறது. எவ்வளவு இருள் சூழ்ந்து நின்றாலும் இருளுக்கு வெளிச்சம் தோற்றுவிடவில்லை. உயிரும் உண்மையும், ஒளியும் கடவுளே.

கடவுளே அன்பு, கடவுளே நலன்களுக்குள் மேலான நலன்.

கடவுளைக் காண்பது என்றால் பகுத்தறிவினால் முடியாது. ஐம்புலன்களைக் கொண்டு அறிய முடியாத கடவுளை ஒருவன் புலனுக்கு அப்பாற்பட்ட சக்தியால் கண்டுவிட்டால் அவன் உள்ளம் முழுவதும் மாறிவிடுகிறது. கடவுளைக் கண்ட உள்ளம் அதற்கு முன் இருந்த உள்ளம் அல்ல. முற்றிலும் வேறு தன்மை கொண்ட உள்ளம் ஆகி விடுகிறது. கடவுள் உண்மை பக்தன் ஒருவனுடைய ஒவ்வொரு சிறு காரியத்திலும் புகுந்து காட்சி தருவான். புலன்கள் வழியாக நாம் அடையும் அறிவு உண்மையைப் போல் காட்டிச் சில சமயம் பொய்யாகவும், மோகமாகவும் போகும். புலன்களைச் சார்ந்து நிற்காத அறிவு நிலையான அறிவு. அத்தகைய ஞானம் கைவந்ததற்குப் பிரமாணம், ஒருவனுடைய சீலமும் பண்புமே ஆகும். உள்ளத்தில் ஈசன் கோயில் கொண்டால் பக்தனுக்கு மேம்பட்ட சீலமும் பண்பும் தாமாக வந்து சேரும். மேலே சொன்ன பிரமாணத்தை உலகம் கண்டிருக்கிறது. எல்லா நாடுகளிலும் கடவுளைக் கண்ட ஞானிகள் தோன்றியிருக்கிறார்கள். ஒருவர் பின் ஒருவராகக் காட்சி பெற்ற மகா புருஷர்களும் ரிஷிகளும் தோன்றி மக்களுக்கு உபதேசித்தும் வழி காட்டியும் வந்திருக்கிறார்கள். எல்லாமே பொய் புரட்டு என்று தள்ளி விடுவது கண்ணை மூடிக்கொண்டு, நான் பார்க்கவில்லை, அதனால் இல்லை என்று சொன்னபடியே ஆகும்.

இந்தக் காட்சி பெறுவதற்கு முன் அசையா நிலையுடன் உள்ளத்தில் பக்தி நிறைந்து நிற்கும். யாரேனும் காட்சியடைந்து அந்தப் பேரின்பத்தை அனுபவிக்க விரும்பினால் முதலில் பக்தி பூரணமாக வேண்டும். பக்திக்கு அடையாளம் சீலம். சத்தியமும் அன்பும் வாழ்க்கையில் சர்வாதிபத்தியம் கொள்ள வேண்டும். உண்மைக்கு மாறானது எதையும் அன்புக்கு மாறானது எதையும் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று தீர்மானித்த பின்னரே பக்தியில் பயில வேண்டும். அதுவே க்ஷேம மார்க்கம். உண்மை மார்க்கத்திலும் அன்பு மார்க்கத்திலும் சேராத மார்க்கம் பக்தி மார்க்கமாகாது.

உலகத்தில் ஏன் பாபம் இருந்து வருகிறது? இது எனக்கு விளங்கவில்லை. எவ்வளவு ஆராய்ந்து பார்த்தாலும் இந்தச் சிக்கலைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. ஆண்டவனுக்குச் சமமாக ஞானம் படைத்திருந்தவர்களே தீர்க்க முடியும். என் சக்தியின் வரம்பை அறிந்து கொண்டு அடக்கத்துடன் நான் தீர்மானித்துக் கொண்டது இவ்வளவே. என்னால் ஆகக் கூடிய காரியம், என்னால் செய்ய வேண்டிய கடமை பாபத்தை வெறுப்பது ஒன்றே. ஆண்டவனுடைய பொறுமையைக் கண்டு வியந்து வருகிறேன். நமக்கு வரும் கோபம் அவனுக்கு இல்லை. ஆகா! எவ்வளவு பாபங்களை எவ்வளவு காலம் பொறுத்து வருகிறான்! ஆண்டவனைப் பாபம் தீண்டாது. அவனே அதற்கு அடி ஆயினும் அது அவனைத் தீண்டாது. இவ்வளவே நான் உணர்ந்தது.

பாபத்தோடு போர் செய்ய வேண்டியது என்னுடைய கடமை. இதையும் உணர்ந்தேன். உயிரைக் கொடுத்தும் அதர்மத்தினோடு போர் புரிய வேண்டும். இல்லாவிடில் கடவுளைக் காணும் ஆசையில் பயனில்லை. என் சிறு அனுபவத்திலிருந்தே ஒன்று கண்டு கொண்டேன். எம்மட்டும் நான் அதர்மத்தை ஒழித்து நன்னெறியில் நிற்கிறேனோ அந்த அளவுக்கு ஆண்டவனை அணுகிச் செல்கிறேன். எந்த அளவுக்குத் தருமத்தினின்று அகல்கிறேனோ அந்த அளவுக்குப் பகவானுடைய காட்சி விலகிப் போகிறது. என் பக்தியும் சிரத்தையும் தற்போது எம்மட்டு உண்மை எம்மட்டு வேஷமோ தெரியவில்லை. வேஷமாக இருப்பதை விட்டு நான் விரும்பிய அளவில் அது உண்மையான பக்தியும் சிரத்தையும் ஆகிவிட்டால் ஆண்டவன் எனக்குக் காட்சி கொடுத்தே விடுவான். அவனுடைய தரிசனத்தை அடைவேன் என்பது நிச்சயம். அசையாமல் நிற்கும் ஒரு மலையைப் போல் என்னுடைய சிரத்தை சஞ்சலம் நீங்கி நிற்க வேண்டும். இமய மலையின் கொடுமுடி மேல் கவிந்து நிற்கும் உறை பனியைப் போல் என் சிரத்தையும் பக்தியும் மாசற்ற முழு வெண்மை அடைய வேண்டும். அப்போதல்லவோ ஆண்டவனை நான் நெருங்க முடியும்!

கிறிஸ்துவ யோகியான நியூமன் தன் சுவானுபவத்தைப் பாடினார். அவருடன் நாமும் பிரார்த்திப்போமாக:

இருள் சூழ்ந்து நிற்கிறது ஆண்டவனே!
பரஞ்சுடரே வழிகாட்டுவாய்!
வெகு தூரத்தில் இருக்கிறேன்
பேரிருட்டில் அலைகிறேன்
என் அப்பனே! எப்பொழுது ஊர் போய்ச் சேருவேன்
வழி காட்டுவாய்! எந்தையே!
இருளில் வழி முழுதும் தென்படவில்லை
ஓரடி ஓரடியாகப் பிறழாமல் வைத்துச்
சென்றேனானால் போதும்
தடுமாறும் காலுக்குக் காவல் நிற்பாய்
என் பாதத்துக்கு வெளிச்சம் காட்டுவாய்
உன்னிடம் ஒப்படைத்து விட்டேன்
ஓரடி ஓரடியாகத் தடம் பிறழாது சென்றால்
போதும்
என் தளர் நடைக்கு அருள்வாய் ஆண்டவனே!

- யங் இந்தியா 11-10-28



ஆத்மாவின் கீதம்: மகாத்மாவின் வேதம்

ரா. கணபதி

பலராம மேதா மரணப் படுக்கையிலிருந்து அரற்றினர்: "நரசிம்ம மூர்த்தே! நான் எப்படியும் உலகைவிட்டுப்போகிறேன். எனக்கு இனி உலகக் கவலை இல்லை. ஆனால் நான் விட்டுச் செல்கிறேனே, இளம் பிள்ளை நரஸியை — அவனைப் பற்றி எப்படிக் கவலைப் படாதிருப்பேன்? அப்பனே நரஹரி, உன்னைப் பூஜித்துப் பூஜித்து உன் அருளால் அந்திமதசையில் புத்திர பாக்கியம் அடைந்தேன். அவனுக்கு உன் பெயரையே வைத்தேன் ஆனால் உன்னுடைய உக்ர கோபத்தையே அவன் உரித்து வைத்துக் கொள்வான் என்று நான் எண்ணவில்லையடா! புண்ணியவதி, அவள் போய் விட்டாள்; இதோ, நானும் போகிறேன். ஆனால் இந்த உலகில் குழந்தை நரஸி எப்படி முன்னுக்கு வருவான்? அவனை யாரால் வைத்துக் கொண்டு சமாளிக்க முடியும்?"

தம்மை மறந்து அவர் வாய்விட்டு முனகியதைக் கேட்டு விட்டார் தம்பி யமுனாதாஸ்.

"அண்ணா, உனக்கேன் இந்தக் கவலை? உன் மகன் என் மகன் இல்லையா? நரஸி எவ்வளவு முரடாக இருந்தால்தான் என்ன, அதற்காக நான் அவனை அநாதையாக விட்டு விடுவேனா? என்னை நம்பி நிம்மதியுடன் கண்ணை மூடு" என்றார் யமுனாதாஸ்.

"யமுனா! நீ நரஸியைக் கைவிட்டு விடுவாய் என்று நான் எண்ண வில்லை. ஆனால் அவனுடைய துடுக்குத்தனமும் துஷ்டத்தனமும் பெற்ற தந்தையான என்னாலேயே சகிக்க முடியாமலிருந்தன. உன் மனைவி இருந்தால் எனக்கு இந்தக் கவலை இராது. இளம் துடிப்பிலுள்ள உன் மருமகளால் நரஸியின் தொல்லையை எப்படித் தாங்க முடியும்?" என்றார் பலராம மேதா.

தமையன் கூறியது வாஸ்தவம்தான் எனக் கண்டார் யமுனாதாஸ். எனினும், அவருக்கு அந்திம காலத்தில் வாக்குறுதி தந்தார்.

பலராம மேதா பயந்தது மெய்யாயிற்று:

அவர் காலமானபின், தன்னைக் கண்டிக்கத் தந்தையில்லை என்ற தைரியத்திலும், தாய் தகப்பனற்ற பிள்ளை என்ற முறையில் தனக்கு ஏற்பட்டிருக்கும் அநுதாபத்தின் பலத்திலும், நரஸி முன்னிலும் முரடனாகி வந்தான். பலராம மேதா இல்லாதது யமுனாதாஸின் மருமகளுக்கும் தைரியம் தந்தது. பெரிய மாமனார் இருந்த வரையில் சொரூபத்தைக் காட்டாதிருந்த அந்த மகராசி இப்போது ஏட்டிக்குப் போட்டியாக, நரஸியைக் கொடுமைப்படுத்தலானாள்.

ஒரு நாள் யமுனாதாஸ் வீட்டில் இல்லாத சமயம். நரஸியுடைய நரசிம்ம நகத்தின் கூர்மைக்கு ஆளாகிக் கிழிந்த உடுப்புக்களுடனும், காயங்களுடன் சக மாணவர் சிலர் வந்தனர். பள்ளியில் நரஸி செய்த அட்டூழியங்களைப் பற்றி அவனது மதனியிடம் முறையிட்டுச் சென்றனர்.

சிறிது போதுக்குப் பிறகு நரஸி வந்தான்.

தாலத்தை எடுத்து வைத்துக் கொண்டு, "சோறு சோறு" என்று இரைந்தான்.

வேகமாக வந்தாள் மதனி. கரண்டியை எடுத்தாள். ஆனால் கரண்டியால் அன்னம் போடவில்லை. கரண்டியாலேயே நரஸியின் முதுகில் போடு போடு என்று போட்டாள். கை ஓய்ந்தபின்தான் அடிப்பதை நிறுத்தினாள். அப்போதும் அவளுடைய வாய் ஓயவில்லை.

"போனால் போகிறதென்று பொறுத்துப் பொறுத்துப் பார்த்தால் அழிச்சாட்டியம் அதிகமாகி வருகிறது. பெற்றவர்கள் நிம்மதியாகப் போய் விட்டார்கள். எனக்கு இந்த ஊர் இழவு வந்து வாய்த்திருக்கிறது. படிப்பது கிடையாது. இதற்குப் பள்ளிக்கூடம் வேறு ஒரு கேடு. ஊர் வம்பை எல்லாம் விலைக்கு வாங்கி வருகிறாய். சனியனே, இனி ஒழுங்காக இருப்பாயா!" என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு கூச்சலிட்டாள்:

நரஸி அவள் கையிலிருந்து திமிறிக் கொண்டு ஓடினான். ஏதோ ஓர் அமாநுஷ்ய பலத்துடன் ஓடினான்.

வீட்டை விட்டு, வீதியை விட்டு, புராதனகடம் என்ற அந்த ஊரையே விட்டு ஓடினான்.

இருள் சூழ்ந்த வனத்தில் திக்பிரமித்து நின்றான் சிறுவன் நரஸி.

முதன் முறையாக அவன் நெஞ்சில் பீதி என்ற உணர்ச்சி எழுந்தது.

சுற்று முற்றும் பார்த்தான். எட்டத்தில் ஒரு பாழடைந்த சிவாலயம் தெரிந்தது.

அதற்குள் ஓடினான். வெளியிருளைவிட ஆலயத்துள் கன்னங்கரிய இருள் கப்பிக் கிடந்தது. பூர்வ ஜன்ம சம்ஸ்காரம் பழுப்பதற்காக அவனுக்கு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை தேவைப்பட்டது. புகைப்படத்தைக் கழுவி விருத்தி செய்யத்தான் இருளறை தேவை என்பதல்ல. புகைப்படலமான வினையைக் கழுவி விருத்தி செய்யவும் ஓர் இருள் தேவைதான்!

இருளறையான கருவறைக்குள் பிரவேசித்தான் நரஸி. லிங்கத் திருமேனியைத் துழாவித் துழாவிக் கண்டு கொண்டான். துழாவிய லிங்கத்தை அப்படியே ஆரத் தழுவிக் கொண்டு சாய்ந்தான்.

'கடவுள் காப்பாற்றுவார்' என்ற நம்பிக்கை குழந்தைக்கு உறுதியாக இருந்தது. குழந்தையாக இருந்ததால், இந்த நம்பிக்கையைச் சிதற அடிக்கும் 'பகுத்தறிவு' ஐயப்பாடுகள் ஏதும் அவனுக்கு எழவில்லை.

'சிவ சிவ சிவ சிவ' என்று முணு முணுத்தபடி பசி தாகம் களைப்பு பயம் எல்லாம் மறந்து ஆழ்ந்து உறங்கி விட்டான்.

தன் கன்னத்தில் உலர்ந்துவிட்ட கண்ணீர்க் கோடுகளின் மீது ஒரு பன்னீர் ஸ்பரிசம்



காந்திஜீ விரும்பிய கீதம்

பட்டது: கரண்டியின் அடியில் தண்டித்துப் போன உடம்பில் ஒரு கற்கண்டு ஸ்பரிசம் பட்டது. சரேலென எழுந்தான் நரஸி.

கருவறையில் இப்போது எங்கிருந்தோ வெளிச்சம் வந்திருந்தது.

எங்கிருந்தோவா? இதோ நிலாக் கீற்று தெரிகிறதே! பிறைச் சந்திரனிடமிருந்து தான் மெல்லிய ஒளி வந்திருக்கிறது! பிறை எப்படி இந்த அறைக்குள் வந்தது?

பிறையை ஆராய்ந்தான் நரஸி. அதன் கீழிருந்து சரக்கொன்றை மாலை மணத்தது. அதற்கும் கீழே தொங்கும் சடைகள். சடைகளுக்கு இடையே, —

நரஸியின் நெஞ்சு துள்ளியது.
சிவபெருமானின் திருமுகம்!

'லிங்கமல்ல, விக்கிரகமல்ல, சாட்சாத் சிவபெருமானே அமர்ந்திருக்கிறார்! அபய கரத்தால் தன்னைத் தடவுகிறார்!'

நம்பிக்கையே உருவான குழந்தைக்கு அது நடக்கக் கூடாத அற்புதமாகத் தோன்ற வில்லை. சுவாதீனமாகச் சிவபெருமானிடம் ஒட்டிக் கொண்டான். தாயின் அரவணைப்பை அறிந்திராத நரஸிக்கு ஈசனின் அணைப்பு தாய்மைத் தழுவலாக இருந்தது.

கர்ப்பக் கிருகத்திலிருந்து குழந்தையின் கையைப் பிடித்து வெளியே அழைத்து வந்தான் மகாதேவன். உண்மையாகவே இன்னொரு கர்ப்பவாசம் செய்து மறு பிறப்பு எய்திய நரஸியாகப் பாலன் வெளி வந்தான்.

"உனக்கு ஒரே பசியாக இருக்குமே, என்ன உண்கிறாய்?" என்று வினவினான்

மகாதேவன். நஞ்சுண்ட அவனது கண்டத்திலிருந்து வந்த வாக்கே அமுதமாக இருந்தது.

''உனக்கு எந்த உணவு மிகவும் பிடிக்குமோ அதைக் கொடு'' என்றான் நரஸி.

''அட போக்கிரி'' என்று கூறி அவனை வன மத்திக்கு இட்டுச் சென்றான் ஈசன்.

உடற்பசி உள்ளப் பசி அனைத்தையும் போக்கும் குழலிசை கேட்டது.

இருண்ட கானகம் ஒளி மயமாயிற்று. ஒளியைப் பெருக்கியவனோ கருநிறக் கண்ணன்!

குழலை ஊதிக் கொண்டு, கோபியர் சூழத் தரிசனம் தந்தான் கண்ணன்! அவனை நரஸிக்குத் தரிசனம் செய்து வைத்தவன் சாட்சாத் முக்கண்ணன். ஈசுவரன் காசியில் மரிப்போர் காதில் ராமன் பெயரை ஓதுவதாகச் சொல்வர். அவனே நரஸிக்குக் கண்ணனின் உருவைக் காட்டிக் கொடுத்தான்.

''கிருஷ்ணா! இந்தப் பிள்ளையால் வைஷ்ணவம் தழைக்க வேண்டுமென விரும்புகிறேன். வைஷ்ணவ இலக்கணங்களுக்கெல்லாம் இவன் இலக்கியமாக வாழ அருள் புரிவாய்'' என்று கண்ணனிடம் கூறினான் சிவபெருமான்.

''நான் வரம் தருவானேன்? தங்கள் சித்தமே போதும்'' என்றான் கண்ணன்.

பிறகு நரஸியைப் பார்த்து, ''குழந்தாய், இந்தா, பசி தீர இதை உண்பாய்'' என்று கூறித் தன் திருமேனியைத் தழுவும் துழாய் மாலையிலிருந்து துளஸி தளங்களைப் பறித்து, தன் கரத்தாலேயே நரஸியின் வாயிலிட்டான்.

துளஸிச் சாற்றுடன் கவித்துவச் சாறும் நரஸிக்குள் இறங்கியது.

சௌராஷ்டிரமும் குஜராத்தும் என்றும் மறவா பக்திக்கவிப் பயிரை விளைவிக்கும் பண்ணையாளனான் நரஸி.

நரஸிக்குக் கண்ணன் தன் கையாலேயே பீதாம்பரம் அணிவித்தான். அவனது முடியில் மயிற்பீலி புனைவித்தான். தன்னை அவன் பாடிப் பரவக் கரதாளமும் அளித்தான்.

நரஸியைக் காணாமல் யமுனா துடித்தார். ''என் அண்ணனுக்கு மரண சமயத்தில் நான் தந்த வாக்குறுதியைப் பொய்யாக்கி விட்டாயே, சண்டாளி'' என்று மருமகளை ஏசினார்.

அவனுக்கு மட்டும் வருத்தம் இல்லையா? குழந்தையை அவள் கோபித்துக் கொண்டது வாஸ்தவம்தான். ஆனால் அவன் இப்படி ஊரை விட்டு ஓடுவான் என எதிர்பார்த்தாளா? ''பசி'' என்று அவன் எடுத்துவைத்துக் கொண்ட தாலத்தைக் காணக்காண அவளுடைய வயிற்றைப் பிசைந்தது.

நரஸியை எங்கெல்லாமோ தேடினார்கள்.

கடைசியில் பல நாட்களுக்குப்பின் வனத்திலே உள்ள சிவாலயத்தை அடைந்தனர்.

பீதாம்பரமும் சிகிபிஞ்சமும் மிளிரத் தன்னந்தனியனாக — அத் தனிமையையும் உணராமல் தாளமிட்டுப் பாடும் குழந்தை நரஸியைக் கண்டு உள்ளம் உருகினர். இரணியனுக்கு உக்கிரனாக இருந்த நரஸிம்மன், பிரகலாதனுக்கு வரதனாக ஆனான் அல்லவா? உக்கிர நரஸியும் மாதுரிய நரஸியாகி விட்டான்.

நரஸியை அணைத்துக் கொண்டு கண்ணீர் பெருக்கினார் யமுனாதாஸ்.

குற்ற உணர்ச்சியுடன் நின்று கொண்டிருந்த மதனியைப் பார்த்தான் பாலன். தூய வைஷ்ணவனின் பார்வை அல்லவா அது?

அந்த நிமிடத்திலிருந்தே, பிற்பாடு 'வைஷ்ணவ ஜனதோ' பாடலில் தான் குறிப்பிடப் போகும் இயல்புகளுக்கு உருவமாகத் தொடங்கினான் நரஸி. மதனியின் பாபத் துயரம் அவனுடையதாயிற்று.

''சிற்றப்பா! மதனியை மன்னித்தேன் என்று சொல்லுங்கள். அவருடைய துன்பம் என் துன்பமாகத் தெரிகிறது'' என்றான் — **ஜேபீட பராயீ ஜாணேரே.**

சிறிய தந்தை மதனியை மன்னித்ததும், ஆரா இன்பம் அடைந்தான் நரஸி. சுயத் துக்கம் ஏதும் இன்றிப் பிறர் துயரை ஏற்பதிலும் அதைத் தீர்ப்பதிலும் உள்ள ஆனந்தத்தை உணர்ந்தான். — **பர து:கே உபகார கரே தோயே.**

''மதனி! என் தவற்றுக்குரிய தண்டனையே நீ தந்தாய். ஆனால் தண்டனையே மகத்தான வெகுமதியாயிற்று. உன்னால்தான் எனக்குச் சிவபெருமானின் தரிசனமும், கண்ண பெருமானின் துளஸிப் பிரசாதமும் கிடைத்தன'' என்று கூறி நிந்தனைக்குரியவளை வந்தனை செய்தான், அகந்தை இம்மியும் இன்றி — **மன அபிமான ந ஆணேரே : ஸகல லோகமாம் ஸஹுனே வந்தே : நிந்தா நகரே கேனீரே.**

கண்ணீரில் தத்தளித்த மதனி அவனை வாரி அணைத்துக் கொண்டாள். அந்த உடலும், அவன் கூறிய வாக்கும், அதற்கு ஆதாரமான மனமும் மாறாத அன்பில் சலனமின்றி ஊன்றிவிட்ட அதிசயம் அவளுக்குத் தெற்றெனப் புரிந்தது. ''உன்னைக் கட்டிக் கொண்டு உச்சி மோந்து பெருமைப்பட உன் அம்மா இல்லை. என் காலில் உன்னைக் கட்டி விட்டுப் போனாளே என்று இத்தனை நாள் குறைப்பட்டேன். ஆனால் இன்று உன்னை வளர்த்த அன்னை என்ற பெருமை எனக்குக் கிடைத்ததே என்று பெருமைப் படுகிறேன்'' என்று நினைந்தாள் — **வாச காச மன நிச்சல ராகே தன தன ஜனனீ தேனீரே.**

'வைஷ்ணவ ஜனதோ' பாடலை நரஸி மேதா தம்மையே இழைத்து இழைத்து உருவாக்கினார். நரஸிமேதாவின் ஆன்மாவே அப்பாடலாக வெளிப்பட்டது.

'வைஷ்ணவ ஜனதோ' பாடலைக் கேட்டு மகிழ்ந்த மகாத்மா காந்தியும் அதைக் காதுக்கினிய ஒரு பாடலாக மட்டும் கருதவில்லை. வாழ்க்கை விதியை வகுக்கும் வேதமாகவே அதைக் கருதினார்.

பாட்டைப் பாடிய நரஸி மேதா போலவே, அதனைக் கேட்டு மகிழ்ந்த காந்தி மகானும் அதன் பொருளை வாழ்ந்தே காட்டினார்.

வையகம் உள்ளளவும் வைணவத்தின் வடிவமான அந்த வாழ்க்கை ஒரு வழிகாட்டியாகத் திகழும்!

அவ்வாழ்க்கைக்கு எழுச்சி தந்த 'வைஷ்ணவ ஜனதோ' பாடலும், அன்பு என்ற பண்ணில், தர்மம் என்ற தாளத்தில், சத்தியச் சாற்றில் வடித்த சொற்களாக இனிமை பரப்பும்! **(ஓவியம் : கனுதேசாய்)**



உடல் தேய...
ஒவ்வொரு நிமிடமும்
உழைப்பிலே செலவழிகிறது
அவள் உள்ளடங்கிய க்ளூகோஸ்!
களைப்பு என்றால் உங்கள் உடம்பு
க்ளூகோஸுக்காக ஏங்குகிறது என்றே
பொருள். சக்தியைக் கணநேரத்தில்
மீட்டுத் தருகிறது தூய க்ளூகோஸ்
பவுடராகிய க்ளாக்ஸோஸ்-D
நம் உடம்பிலே சக்தியைத் தோற்றுவிக்கும் 'மூலதனம்'
க்ளூகோஸ். களைப்பு மேலிடும்போது க்ளூகோஸ்
சாப்பிட்டீர்களானால் தெம்பு மீளும். பால், பழச் சாறுகள், குடிநீர்
ஆகியவற்றுடன் சேர்த்தோ, நேரடியாகவோ உண்பதற்கு
உகந்தது க்ளாக்ஸோஸ்-D. மறவாதீர்கள், யாவரும் விரும்புவது
இன்சுவையுள்ள க்ளாக்ஸோஸ்-D.
உடனடியான சக்தி பெற, ஒருசில காசுகளே செலவு!
க்ளாக்ஸோஸ்-D
க்ளாக்ஸோவின் க்ளூகோஸ் பவுடர்.
GLAXOSE-D

ƒCA-GL 4a tam



34. சூழ்ச்சியும் வீணாயிற்று!

பரதனுக்கு விஷயம் இப்போது விவரமாகத் தெரிந்தது. எவ்வளவு பெரிய அநியாயம் நடந்து விட்டது என்பதை உணர்ந்து, தாங்க முடியாத கோபமும் துக்கமும் மேலிட்டுத் தன் தாயைப் பார்த்துச் சொல்லலானான்:

''என்ன காரியம் செய்து விட்டாய்? இந்த ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளும்படி எனக்குச் சொல்லவும் உனக்குத் தோன்றிற்றே! தகப்பனையும் அண்ணனையும் இழந்து விட்ட பிறகு எனக்கு ராஜ்யாதிகாரம் என்ன வேண்டியிருக்கிறது? தந்தையை உயிர் மாள வைத்து, ராமனையும் காட்டுக்கு அனுப்பிவிட்டு என்னை அரசு புரியச் சொல்லுகிறாயே! ரண காயப்படுத்தி விட்டு அதன் மேல் உப்புப் போட்டு வேதனை செய்கிறாயே! தசரத மகா ராஜாவுக்குப் பத்தினியாக வந்து சேர்ந்தாயே! புத்தி கெட்டுப் போய் உன்னை அவர் அடைந்தார். நெருப்பை மடியில் கட்டிக் கொண்டார். என் தந்தையைக் கொன்று விட்டாயே! கௌசல்யையும் சுமத்திரையும் இறக்கத்தான் போகிறார்கள். உன்னிடம் அவ்வளவு அன்போடிருந்த ராமனை ஆஹா! நீ எப்படித்தான் வனத்துக்கு அனுப்பினாயோ! பெரிய தாயார் உன்னை உடன் பிறந்த சகோதரி போல எண்ணி நடத்தி வந்தாளே! அவளுடைய வயிற்றில் பிறந்த அருமை மகனைக் காட்டுக்கு அனுப்பிவிட உனக்கு எப்படித்தான் எண்ணம் உண்டாயிற்றோ? ராமனிடத்தில் நான் வைத்திருக்கும் அன்பு உனக்குத் தெரியாமல் போய் விட்டதா? உன் துராசை உன் மூளையை நாசம் செய்து விட்டதே. என் உயிரைப் போலுள்ள ராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு எனக்குச் சந்தோஷம் ஊட்டப் பார்த்தாயே! உன் மடமையை என்னவென்று சொல்வேன்! மகா பராக்கிரமசாலியான என் தந்தை மன்னன், ராம லக்ஷ்மணர்களைத் தாம் பெற்ற பெரும் பக்கபலமாக எண்ணி வந்தாரே! அவர்களைக் காட்டுக்குத் துரத்திவிட்டு, என்னை இந்த ராஜ்யப் பொறுப்பை ஏற்று நடத்தச் சொல்லுகிறாயே! இது என்னால் முடியுமா? முடிந்தாலும்கூட நான் ஒப்புக் கொள்வேனா? ஒரு நாளும் உன் ஆசை நிறைவேறாது. நான் நிறைவேற்றவும் மாட்டேன்! நீ இவ்வளவு பெரிய பாவச் செயல் புரிந்துவிட்ட பிறகு உன்னை என் தாயாகப் பாவிக்க முடியாது. உன்னை நான் நீக்கி விட்டேன். பரம்பரையாக ராஜகுலங்களில் வழங்கி வரும் முறையைப் புறக்கணித்து இளையவனுக்குப் பட்டம் கட்டும் எண்ணம் உனக்கு எப்படித் தோன்றிற்று என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. உலகமெல்லாம் நம்மைக் குற்றம் கூறும் என்பது உனக்குத் தெரியவில்லையே! ராஜாக்களுக்கெல்லாம் இது பொது விதி. நம்முடைய குலத்திலும் இதுவே முறை. உன் எண்ணத்தை ஒரு நாளும் நான் பூர்த்தி செய்ய மாட்டேன். வனம் போய் அண்ணனைத் திரும்பவும் அழைத்து வரப்போகிறேன். அவனுக்கே பட்டம் சூட்டி என் உள்ளம் மகிழ நான் அவனுக்கு அடிமை செய்து வருவேன். உன் எண்ணம் நிறைவேறாது.''

இவ்வாறு பரதன் தாயைப் பார்த்துக் கோபத்தினால் வாய் குளறப் பேசினான். வரவரத் துக்கம் அதிகரித்து விட்டது. இப்படிச் செய்து விட்டாளே. தனக்கு அழியாப் பழி உண்டாக்கி விட்டாளே என்ற பெரும் ஆத்திரத்தில், அவள் தாய், தான் அவள் மகன் என்ற உணர்ச்சியைத் தன் மனத்திலிருந்து முற்றிலும் அகற்றி விட்டான். அதன் காரணமாகவே துக்கமும் கோபமும் பரதனுக்கு அதி-

கரித்து விட்டன. குகையில் சிங்கம் கர்ஜிப்பது போல் கர்ஜித்து, தாயை மிகக் குரூரமான மொழிகளால் நிந்திக்கலானான். பரதனுடைய சுபாவமும், ராமனிடம் அவனுக்கு இருந்த அளவிலாத அன்பும், தந்தையை இழந்த துக்கமும், என்றும் எதிர்பாராத பெரும் பழி வந்துவிட்ட சங்கட நிலையும், — ஆகியவற்றை யெல்லாம் வைத்துப் பார்த்தால், பரதனுடைய உணர்ச்சி வேகமும் அதனின்று பிறந்த வசை மொழிகளும் நமக்குப் பொருள்படும். ஏதோ சாஸ்திரம் படித்த கல்மனப் பண்டிதர்களைப் போல் நாம் பரதன் பேசியதை அளந்து பார்க்கக் கூடாது. இம்மாதிரியான கட்டங்களிலேதான் கவியுள்ளம் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. இதை வால்மீகியிலும் பார்க்கலாம்; கம்பர் கவியிலும் பார்க்கலாம்.

பொறுக்க முடியாத கோபாவேசத்தில் எழுந்து, தாயைப் பார்த்து உரத்த குரலில் மீண்டும் பரதன் பேசலானான்:

''நீ நாட்டுக்கு உதவாதவள்; நாட்டை விட்டு வெளியேற வேண்டியவள்! கொடியவள்; கெட்ட வழியைப் பின்பற்றித் தருமத்தைக் கைவிட்டவள்! நான் உன்னைப் பொறுத்தவரை செத்தேன் என்று வைத்துக் கொள். அரசனை யமனிடமும், ராமனைக் காட்டுக்கும் அனுப்பிய உன்னை வெறுக்காதவர் யார்? கொலையாளியாய்ப் போனாய். இந்தக் குலத்தைப் பாழாக்கி விட்டாய். நீ நரகமே அடைவாய். எனது அன்புக்குரிய தந்தை சென்ற உலகத்துக்கு நீ போக மாட்டாய். கோர பாதகம் செய்த உன்னைக் காண, உன் மகனான நானே நடுங்குகிறேன். தாயுருவத்தில் வந்த என் மகா சத்துருவே! புருஷனைக் கொன்ற கொலை பாதகியே! உனக்கும் எனக்கும் இனிப் பந்தம் அறுந்து விட்டது. தர்மராஜாவான பாட்டனார்





அசுவபதி அரசனுடைய பெண்ணல்ல, நீ ஒரு அரக்கி. குலத்தைக் கெடுக்க அவர் வயிற்றில் நீ பிறந்தாய். சத்தியமும் தருமமும் மனித உருக் கொண்ட என் அண்ணனைக் காட்டுக்குத் துரத்தி விட்டாய். என் தந்தையும் உயிர் நீத்தார். இரு விதத்தில் எனக்குத் தீங்கு இழைத்தாய்.

''கௌசல்யா தேவியின் ஒரே குழந்தையான ராமனைக் காட்டுக்குப் போகச் செய்த நீ, எந்த நரகத்துக்குப் போவாயோ! தாயின் உள்ளம் உனக்குத் தெரியாமற் போயிற்றே! புத்திரன் தாயின் உடலில் ஒரு பாகம் அல்லவா? தாயின் ஒவ்வொரு அங்கத்திலும் ஒரு பகுதியைக் கொண்டு உண்டான ஜீவனுயிற்றே! தாய்க்கும் மகனுக்கும் உள்ள இந்த உயிர்த் தொடர்பு உனக்குத் தெரியாதா? உயிரின் உயிராகிய மகனைக் காட்டுக்கு அனுப்பிய தாய் உள்ளத்துக்கு நீ விளைவித்த பெருந் துக்கத்துக்கு என்ன தண்டனை கொடுத்தால் தகும்?

''காமதேனுவுக்குக் கோடிக்கணக்கில் புத்திரர்கள் இருக்க, ஏதோ இரண்டு மாடுகள் ஏருக்குக் கட்டுப்பட்டு, ஒரு மூர்க்கக் குடியானவனுல் துன்புறுத்தப்படுவதைக் கண்டு, 'ஐயோ! இந்தக் குழந்தைகள் வெயிலின் கொடுமை தாங்காமல் வயலில் கீழே விழுந்துவிட்ட போதிலும், இந்த மூர்க்கன் இன்னும் இம்சிக்கிறுனே' என்று காமதேனு கண்ணீர் சிந்தியது உனக்குத் தெரியாதா? தேவராஜன் மீது அந்தக் கண்ணீர்த் துளி விழுந்து அதன் சுவாசனையைக் கண்டு இது சுரபியின் கண்ணீராகவே இருக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டு வருந்தினனல்லவா? கோடிப் புத்திரர்களைப் படைத்த சுரபி, இரண்டு புத்திரர்களின் கஷ்டத்தைப் பொறுக்க முடியவில்லையே! கௌசல்யைக்கு நீ செய்த கொடுமை உனக்குத் தெரியவில்லையா? ஒரு மகனைப் பெற்றுள்; அந்த மகனை வனத்துக்கு அனுப்பி விட்டு, அதனுல் நீயும் நானும் சுகம் அடைவோம் என்று எண்ணினுய். அரக்கியே! நீ பெருந் துக்கம் அடைந்து சாவாய் என்பது நிச்சயம். இறந்த பின்னும் துக்கமே உன் பங்கு. தந்தைக்குச் செய்ய வேண்டிய உத்தரக் கிரியைகளை முடித்துவிட்டு, நான் வனம் சென்று, வீரன் ராமன் காலில் விழுந்து இராஜ்யத்தை ஒப்பித்து விட்டு, நீ எனக்குச் சம்பாதித்துத் தந்த பெரும் பழியைப் போக்கிக் கொள்வதற்காக ராமனுக்குப் பதில் நான் தண்டகாரண்யத்தில் விரதம் பூண்டு வாசம் செய்வேன். நீ செய்த பாவத்தின் பாரத்தை என்னுல் தாங்க முடியவில்லை. நீ உண்டாக்கிய கண்ணீர் வெள்ளத்தை என்னுல் பார்க்க முடியவில்லை. நீ என்ன பிராயச்சித்தம் செய்து தப்புவாய்? கழுத்துக்கு உறி போட்டுக் கொண்டு உயிர் துறப்பாயா? அல்லது நெருப்பில் விழுந்து உயிர் விடுவாயா? அல்லது நீயே வனவாசம் செய்து தண்டகாரண்யத்தில் ஆயுள் முழுவதும் கழிப்பாயா? எப்படியானுலும் சரி, ராமனிடம் சென்று இந்தப் பூமண்டலாதிபத்தியத்தை அவனிடம் ஒப்புவித்து எனக்கு நீ ஏற்படுத்தித் தந்த தோஷத்தைத் தீர்த்துக் கொள்ளப் போகிறேன்.''

இப்படித் தாயைக் கோபித்து மிகக் கொடிய முறையில் வசைமொழிகள் பொழிந்தான். காட்டில் புதிதாகப் பிடிக்கப்பட்ட யானையைப் போல் பெருமூச்செறிந்தான். அவன் கண்களினின்று ரத்தக் கண்ணீர் பெருகிற்று.

இன்னனம் இனையன இயம்பி யானும் இப்
பன்னரும் கொடுமனப் பாவி மா(டு)இரேன்
துன்னரும் துயர்கெடத் தூய கோசலை
பொன்னடி தொழுவன் என்(று)
எழுந்து போயினன்.

''இவள் பக்கத்தில் நிற்க முடியவில்லை. என் துக்கத்தைச் சொல்லிக் கொள்ளக் கோசலைத் தாயிடம் போகிறேன்'' என்று பெரிய அன்னையின் இல்லம் சென்றுன்.

கைகேயினுடைய மனக்கோட்டை அழிந்தது. தன்னுடைய ஆசை ஒரு விநாடியில் புதைந்து போனதைக் கண்டாள். கீழே விழுந்து பரிதபித்தாள்.


ராமாயணப் பாத்திரங்களில் பரதனைப் போன்ற ஒரு பரிசுத்த விக்கிரகம் இல்லை. வடநாட்டுக் கிராமங்களில் மக்கள் மிகவும் அநுபவிப்பது சித்திரகூடத்தில் ராமபரத சந்திப்புத்தான். ராமாயண கதையில் இதுவே முக்கியமான பாகமாக அவர்கள் கருதிப் பெரிய திருவிழாக் கொண்டாடுகிறுர்கள். யார் எத்தனை பாவச் செயல்கள் செய்யத் துணிந்தாலும், ஒரு சிலர் தருமத்தைக் காக்க இருக்கவே செய்கிறுர்கள். பேராசையும் புனைசுருட்டும் நிறைந்த உலகத்தில் பரஸ்பர நம்பிக்கையும் தைரியமும் அன்பும் உண்டாக்கித் தந்து, மக்களை அறவழியில் நிறுத்தச் சில ஆத்மாக்கள் இருந்து கொண்டே வருவார்கள். தருமத்துக்கு ஆபத்து இல்லை. **(தொடரும்)**



சிலையைத் தேடி...
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி
6
என் பொம்மை... அதை அவன் எடுத்துப் பார்க்கிறான்... ஐயோ, இப்போது என்னடா செய்வது?
ஐயா, தயவு செய்து அந்தப் பொம்மையைத் தருகிறீர்களா? அது என்னுடையது.
நான் போகிறேன்... அந்தப் பொம்மை என்னுடையது என்று கூறுகிறேன்.
உன்னுடையதா? நிச்சயமாக இது உன் பொம்மைதானா?
அப்போது அந்தப் பெண்ணின் தாயார் அங்கு வருகிறாள்......
இந்தப் பொம்மை எங்கே கிடைத்தது?
என்னுடையதுதானம்மா. ஒரு பெரியவர் எனக்குக் கொடுத்தார்.
உன்னுடைய பொம்மை எங்கே?
இந்தப் பொம்மை யாருடையது என்று எனக்குத் தெரியும். என்னிடம் இதை ஒப்படைத்தால் நான் இதை அவர்களிடம் சேர்ப்பித்து விடுவேன்.
அப்படியே செய்யுங்கள் ஐயா.
ஐயோ, இவன் ஒரு கம்யூனிஸ்ட் அதிகாரியாயிற்றே.
நான் யாரைத் தேடி அலைகிறேனோ அந்தக் குழந்தைகளுடையதுதான் இந்தப் பொம்மை. அவர்கள் இங்கு தான் மிக அருகில் இருக்க வேண்டும். எப்படியும் கண்டுபிடித்து விடுகிறேன்.
இந்தப் பொம்மையை எப்படியும் நாம் திரும்பப் பெற இவனைப் பின் தொடர்ந்து செல்வோம்.


தேசியவாதிகள் போரிட்டுப் பாழடைந்த தெருவழியே நீலாவும் ரவியும் வீயைப் பின் தொடருகிறார்கள்..
அந்தப் பெண் பாவம், தன் 'ஸ்கிப்பிங்' கயிற்றை விட்டுப் போய் விட்டாள்.
அதை காப்பாற்றி வை. பயன் படும். அவன் என்ன செய்யப் போகிறான்? நம் பொம்மையை மீட்பது எப்படி?
ரவி.. எனக்கொரு யோசனை தோன்று கிறது. இப்படி அருகே வா ஒன்று சொல்லு கிறேன்
நீலாவின் திட்டப்படி ரவி ஒரு குட்டிச் சுவர் மீது வீயின் பார்வையில் படாதபடி தவறாக நிற்கிறான். அவன் கையில்.....
என்னது..? என்ன ஆபத்து? அந்தப் பெண்..!
இந்த இடிபாடு களுக்கிடையே என் கால் சிக்கிக் கொண்டு விட்டது. விடுவித்துக் கொள்ள முடியவில்லை ஐயா!
ஐயோ...! உதவி.. உதவி...
ரவியின் குறி எப்போதுமே தவறுவதில்லை...
ஆ...வ்.. வ்..
என் ரவிக் குட்டின்னு ரவிக் குட்டிதான்! எத்தனை கச்சித மாகக் காரியத்தை முடித்து விட்டான்!
நீலா, நான் சுவரின் மீதிருக் கும் போது பார்த்தேன். ஏரா ளமான தேசிய வாதி களைக் கைதியாக்கிக் கொண்டு கம்யூனிஸ்ட் சிப்பாய்கள் இந்தப் பக்கமாக வருகிறார்கள்.

தொடரும்..





'நாஸா'வின் நாயகன்

அண்மையில் அப்போலோ — விண்வெளிக் கப்பல் மூலம் விண்வெளிப் பயணம் செய்து நிலவில் காலடி வைத்த ஆர்ம்ஸ்ட்ராங்க், ஆல்டிரின் ஆகியோர் பெயர் உலக சரித்திரத்தில் தனி இடம் பெற்று விட்டது. அமெரிக்காவுக்கும் மனித சமுதாயத்துக்கும் மாபெரும் புகழை அளித்த அந்த 'நிலவுப் பயணத்தின்' மகத்தான வெற்றிக்குக் காரணம் ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளும் லட்சக்கணக்கான பொறி இயல்துறை வல்லுநர்களும் ஆவர். இவர்களில் மிக முக்கியமானவர், அமெரிக்க நாட்டின் தேசிய விண்வெளித் துறை நிறுவனமான ''நாஸா''வின் தலைவர் வெர்னர் வான் பிரான்.

''நாஸாவின் நாயகன்'' எனக் கணக்கற்ற அமெரிக்கர்களால் அழைக்கப்படும் வான் பிரான் அமெரிக்கரல்ல; ஒரு ஜெர்மானியர்! ஐம்பத்தேழு ஆண்டுகளுக்குமுன் பிறந்தவர். அவருடைய தந்தை மாக்னஸ் வான் பிரான், ஒரு பெரும் பணக்காரர். ஹிட்லர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் ஜெர்மானிய அரசாங்கத்தில் பல முக்கிய பதவிகளை வகித்தவர்.

செல்வாக்கு நிறைந்த தந்தையின் கண்ணோட்டத்தில் வளர்ந்த இளம் வான்பிரான் பெர்லின், ஜுரிச் நகர்களிலுள்ள கல்லூரிகளில் பொறியியல் துறையை இஷ்ட பாடமாக எடுத்துக் கொண்டு 1932ம் ஆண்டில் பட்டமும் பெற்றார். பௌதிகத்தில் ஆராய்ச்சிகள் நடத்தி அவற்றைப் புத்தகமாக வெளியிட்டு 1934ம் ஆண்டில் அத்துறையில் 'டாக்டர்' பட்டமும் பெற்றார்.

இளம் வயதிலேயே வான் பிரான் 'விண் வெளி'யைப் பற்றி அதிகமாகப் படித்தார். ஜுல்ஸ் வெர்னி எழுதிய ''சந்திர மண்டல யாத்திரை'' என்ற புத்தகம் வெகுவாக அவரது மனத்தைக் கவர்ந்தது. அதனால் ஈர்க்கப்பட்ட அவர் அக்கால விண்வெளி விஞ்ஞானிகளான கோடார்ட், ஒபெர்த், வான்கார்மன், ட்ஸியோல்கோவ்ஸ்கி முதலியோர் எழுதிய புத்தகங்களைப் படித்துத் தேர்ந்தார்.


1929ம் ஆண்டில் ஜெர்மனி நாட்டில் ஒரு விசித்திரமான சங்கம் தொடங்கப்பட்டது. ''ஜெர்மானிய விண்

☐ கணக்கற்ற கம்பூட்டர்களுக்கு மத்தியில் நாஸா விஞ்ஞானிகள்.

☐ ''நாஸா''வின் தலைவர் டாக்டர் வெர்னர் வான் பிரான்.

அடுத்த பக்கம் :

☐ விண்வெளி வீரர்கள் தயாராக இருக்கிறார்கள் சந்திர மண்டல யாத்திரைக்காக.



வெளிப் பயணக் கழகம்'' என்ற பெயருடைய அதை வில்லி லே என்பவர் தொடங்கினார். வான் பிரான் அக்கழகத்தில் சேர்ந்தார். அதன் பலனாக விண்வெளி விஞ்ஞானி ஓபெர்த்தைச் சந்திக்கும் வாய்ப்பு வான் பிரானுக்குக் கிட்டியது.

வான் பிரானின் ஆசைகளை நன்கு தெரிந்து கொண்ட ஓபெர்த் அவரைத் தமது உதவியாளராக அமர்த்திக் கொண்டார். திரவத்தை எரி பொருளாகக் கொண்ட ராக்கெட்டுகளைத் தயாரிக்கும் ஆராய்ச்சியில் அவர் வான் பிரானுக்கும் பங்கு கொடுத்தார். விண்வெளி விஞ்ஞானம் குழந்தைப் பருவத்தில் இருந்த அக்காலத்தில் வான் பிரானும் ஓபெர்த்தும் அமைத்த ஒரு ராக்கெட் சுமார் ஒரு மைல் தூரம் வரை உயரே சென்றது ஓர் அதிசயமாகக் கருதப்பட்டது.

ராக்கெட் தயாரிப்பதில் வான் பிரானுக்கு இருந்த திறமையைக் கண்ட ஜெர்மானிய ராணுவம் அவரின் திறமையைப் பயன்படுத்திக் கொள்ள முன்வந்தது. இராணுவ ராக்கெட் சோதனை நிலையத்துக்குத் தலைவராக வான் பிரான் நியமிக்கப்பட்டார். அப்போது அவருக்கு வயது இருபது!

1933ம் ஆண்டு. ஜெர்மானிய மக்களும் பின்னர் உலகமும் மறக்க முடியாத அந்த ஆண்டில்தான் அடால்ப் ஹிட்லர் ஜெர்மானிய சர்வாதிகாரியானார். இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற ராக்கெட்டுகள் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்த ஹிட்லர் அவற்றைத் தயாரிக்க ஊக்கமளித்தார். வான் பிரான் சரித்திரப் புகழ்பெற்ற வி-2 ராக்கெட்டுகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார்.

1940ல் வான் பிரான் ஹிட்லரின் நாஜிக் கட்சியில் சேர்ந்தார். சில மாதங்களே அவர் அக்கட்சியில் இருக்க முடிந்தது. காரணம்? ராக்கெட் தயாரிப்புத் துறையில் ஹிட்லருக்கு இருந்த வெறியைக் கண்ட 'கெஸ்டாப்போ' என்ற பயங்கர ஒற்றர் படையின் தலைவனான ஹென்றிக் ஹிம்லர் அத்துறையைத் தன் வசப்படுத்திக் கொள்ள வான் பிரானின் உதவியை நாடினான். வான் பிரான் ஹிம்லரின் மிரட்டல்களுக்கு இணங்காது போகவே 1944ல் அவரைத் 'தேசத் துரோகக் குற்றம்' சாட்டிக் கைது செய்தான் ஹிம்லர்.

வான் பிரான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நேரத்தில் இரண்டாம் உலகப் பெரும் போர் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது. பெர்லின் நகரில் ரஷ்யப் படைகள் நாஜி இராணுவத்தை முறியடித்து உள்ளே நுழைந்தன. அந்தக் குழப்பமான நிலையைப் பயன்படுத்திக் கொண்டு வான் பிரானும் அவரது சகாக்களும் பவேரியாவுக்குத் தப்பி ஓடினர். அங்கே அவர்கள் அமெரிக்க வீரர்களிடம் சிக்கிக் கொண்டனர்.

1945ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நேச நாடுகளின் தலைமைத் தளபதி ட்வைட் ஐஸனோவர் தமது கீழிருந்த எல்லாத் தளகர்த்தர்களுக்கும் ஓர் உத்தரவு பிறப்பித்தார். அதன்படி ஜெர்மனி நாட்டில் உள்ள தொழிற்சாலைகள், விஞ்ஞானக் கருவிகள் பற்றிய குறிப்புகள் எல்லாம் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டன. விஞ்ஞானிகள், பொறியியல் வல்லுநர்கள், தொழில் வினைஞர்கள் முதலிய பலரும் அமெரிக்காவுக்குக் கப்பலேற்றப்பட்டனர். திறமையும், அறிவும் எங்கிருந்தாலும் அதை வரவேற்றுத் தனதாக்கிக் கொள்ளும் பொன்னான கொள்கையின் விளைவு இது. ஐஸன்ஹோவரின் இந்த ஆணையின்படி வான் பிரானும் அவரது சகாக்களும் 1945ம் ஆண்டு செப்டம்பர் 20ம் நாளன்று அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கே அவருக்குக் கிடைத்த முதல் வேலை அமெரிக்கச் சைன்யங்களால் போரின் போது கைப்பற்றப்பட்ட ஏராளமான விஞ்ஞான சம்பந்தமான தஸ்தாவேஜிகளை ஆராய்வதுதான். சில ஆண்டுகள் அப்பணியைச் செவ்வனே செய்து ஒழுங்குபடுத்தி முடித்த வான் பிரான், 1950ம் ஆண்டில் அமெரிக்க இராணுவத்தின் பறக்கும் குண்டுகள் தயாரிக்கும் நிலையத்துக்கு (Missiles) மாற்றப்பட்டார். வான் பிரான் அந்த நிலையத்துக்குத் திட்ட நெறியாளராக நியமிக்கப்பட்டார். அதுவரை இராணுவத்தின் கண்காணிப்பில் இருந்த அந்த நிலையம் அதே ஆண்டில் விண்வெளித் துறையின் (நாஸா) கீழ் வந்தது.

1947ம் ஆண்டில் பவேரியா நகரில் தமது முறைப் பெண்ணான மரியா லூயி வான் க்விஸ்டாப் என்ற பதினெட்டு வயது அழகியை அமெரிக்க ஒற்றர்கள் காவலிருக்கத் திருமணம் புரிந்து கொண்டார் வான் பிரான். அவர்கள் தேநிலவின்போதுகூட நூற்றுக்கணக்கான அமெரிக்க ஒற்றர்களின் கண்காணிப்பில்தான் அவர்கள் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள முடிந்தது. ஏனெனில் வான் பிரானை ரஷ்யர்கள் கடத்திக்கொண்டு போய் விடுவார்களோ என்ற அச்சம் அமெரிக்காவுக்கு இருந்தது.

எட்டு கௌரவ டாக்டர் பட்டங்களையும் கணக்கற்ற பதக்கங்களையும் பரிசாகப் பெற்ற வான் பிரானின் இன்றைய எண்ணம், ஆசை, இலட்சியம் எல்லாம் நிலவில் மனிதன் குடியேறவேண்டும் என்பதே! — அ. இராமதுரை

விபுலாநந்தர் விழா

அருள் செல்வநாயகம்



கிழக்கு இலங்கையின் தவப் புதல்வரான அருள்திரு விபுலாநந்த அடிகளார் மறைந்து ஆண்டுகள் இருபத்திரண்டு கடந்து விட்டன. இருந்தாலும் இன்று அடிகளார் தமிழகத்திலும், ஈழத்திலும் இறவாத புகழுடம்புடன் தமது தமிழ்ப் பணிகளினால் துலங்கிக் கொண்டிருக்கிறார்.

கிழக்கு இலங்கையின் காரைத் தீவு என்னும் ஊரில் சாமித் தம்பியார்க்கும், கண்ணம்மையார்க்கும் 27–3–1892 ஆண்டில் மயில்வாகனன் என்னும் புதல்வன் பிறந்தான். பாலன் மயில்வாகனன் வளர்ந்து துறவியாகி விபுலாநந்த அடிகளார் என்னும் இறவாப் பெயரைப் பெற்றார்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் முதற் தமிழ்ப் பேராசிரியராகிய அடிகளார், பிறகு இலங்கைப் பல்கலைக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்கி அங்கு முதல் தமிழ்ப் பேராசிரியரானார்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்களையும், தனஞ்சயரின் தசரூபத்தையும் மூலக் கருவாகக் கொண்டு சிலப்பதிகாரத்திலுள்ள நாடக நூல் முடிபுகளை ஓரளவு விளக்கிக் காட்டுவதற்கு ஏற்றதாக மதங்க சூளாமணி என்னும் நூலினை எழுதினார்.

அடிகளார் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட மறைந்த யாழ்களை மீண்டும் தமிழர்களுக்கு வழங்குவதற்காக ஆராய்ந்தார். பத்தாண்டுகளாக ஆராய்ந்து யாழ்நூல் என்னும் பெரும் நூலினைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்து ஆதரவில் திருக்கொள்ளம் பூதூர்த் திருக்கோயிலில் அரங்கேற்றினார்.

பி. எஸ்ஸி. பட்டதாரியான அடிகளார் ஆராய்ச்சியாளர் மட்டுமல்ல ; பேராசிரியர் மட்டுமல்ல ; பேச்சாளர் மட்டுமல்ல; எழுத்தாளர் மட்டுமல்ல; ஒப்பற்ற கவிஞருமாவார்.

தமிழுக்காக வாழ்ந்த அடிகளார் 19-7-47 அன்று நம்மை விட்டு மறைந்தார். இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், அடிகளாருக்குச் சிலை நாட்டும் முகமாகக் காரைத் தீவு கிராம சபைத் தலைவர் டாக்டர் மா. பரகுராமன் முன் நின்று உழைத்தார். அதன் பயனாகப் புல்லுமலை நல்ல ரத்தினம் சிற்பி அவர்கள் அடிகளாரின் சிலையினை உருவாக்கினர்.

அடிகளாரின் திருவுருவச் சிலை 25-9-69ம் நாள் கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பொது மக்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டது. அங்கிருந்து மங்கள முரசு ஒலிக்கச் சிலை ஊர்வலமாகக் கொழும்பிலிருந்து திரிகோணமலைக்குச் சென்று, அங்கிருந்து மட்டக் களப்பினுக்கு வழி கொண்டது. முத்தமிழ் வித்தகரான அடிகளாரின் சிலைக்கு மக்கள் ஊர்கள்தோறும் மகத்தான வரவேற்பளித்தார்கள். இறுதியாக அடிகளார் பிறந்த காரைத் தீவின் கிராம சபைக் கட்டடத்துக்கு முன்னர் சிலை நாட்டப்பெற்றது. 8-10-69ம் தேதி மாலை அடிகளாரின் சிலையினைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் திரை நீக்கம் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு முத்தமிழ் விழா காரைத் தீவில் நடைபெற்றது.

9–10–69 காலை அடிகளாரின் நூல்கள், அடிகளாரின் கையெழுத்துப் படிகள், அடிகளாரின் புகைப்படங்கள், அடிகளாரின் பாவனைப் பொருட்கள் கொண்ட பொருட்காட்சி திறந்து வைக்கப்பட்டது. அன்று மாலை புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை தலைமையில் உரையரங்கு நடைபெற்றது.

10–10–69 காலை மாதர் அரங்கு திருமதி கமலபூரணி திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. இறுதியாக நாடக அரங்குடன், விபுலாநந்தச் சிலைத் திறப்பு முத்தமிழ் விழா இனிது நிறைவேறியது.

பக்கத்து வீட்டுப் பிரமுகர்



[லால்குடி ஜெயராமன் வீட்டுக்குப் பக்கத்தில் வசிப்பவர் லூகாஸ் — டி. வி. எஸ். நிறுவனத்தில் பணியாற்றும் திரு ராமமூர்த்தி. அண்டை வீட்டிலிருந்து காற்றிலே மிதந்து வரும் கானத்தைப் பருகுவதோடல்லாமல் அந்த வீட்டுக்காரர்களைப் பற்றியும் நன்கு தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்.] ★

நான் இசையிலேயே விழித்து இசையிலேயே உறங்குபவன் என்று சொன்னால் உங்களுக்கு வேடிக்கையாக இருக்கும். ஆனால் அது முழுக்க முழுக்க உண்மை. கடந்த ஆறு வருடங்களாக லால்குடி ஜெயராமன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் வசிக்கிறேனே! நான் காலை ஏழு மணி அளவிலேயே பாடியிலுள்ள என் அலுவலகத்துக்குப் புறப்படுபவன். பக்கத்து வீட்டிலிருந்து அதற்கு வெகு நேரத்துக்கு முன்பிருந்தே வயலின் இசை பரவ ஆரம்பித்து விடும். இரவில் தினசரி சாப்பாட்டு நேரத்துக்குமுன் ஜெயராமனின் தந்தை கோபாலய்யர் அவர்கள் பூஜை அறையில் அமர்ந்து நீண்ட நேரம் திருப்புகழ் பாடுவார். பல நாட்களில் அவருடன் அவர் குடும்பத்தினரும் சேர்ந்து கொள்வார்கள். அந்த முருக நாம சங்கீர்த்தனம் எங்களை மெய்சிலிர்க்க வைக்கும்.

நான் பல ஆண்டுகளுக்குமுன் முதல் தடவையாகப் பெங்களூரில் ஜெயராமன் அவர்களின் வயலின் கச்சேரியைக் கேட்டு ரசித்தவன். பட்டினத்தில் இவர் வீட்டுக்குப் பக்கத்திலேயே வந்து வசிக்க நேரிடுமென்று நான் நினைத்துப் பார்த்திருப்பேனா?

அநேகமாக மாதத்தில் பாதி நாள் வெளியூர்க் கச்சேரிகளுக்காகப் பிரயாணம் போய் விடுவார். ஊரில் இருக்கும் நாட்களில் தினம் காலையில் பக்தி சிரத்தையுடன் சாதகம் செய்வார். முற்பகலில் கடிதங்களுக்குப் பதில் எழுதுவார். பிற்பகலில் சங்கீதத் துறை சம்பந்தப்பட்ட நண்பர்கள் சிலர் வருவார்கள். அவர்களுடன் சங்கீத விஷயமாகப் பேசிக் கொண்டிருப்பார். அவகாசம் கிடைக்கும்போது பத்திரிகைகள், புத்தகங்கள் வாசிப்பார். அல்லது காரம்போர்ட் விளையாடுவார். ஊரில் இருக்கும் நாட்களில் வெள்ளிக்கிழமை மாலையில் ஸ்வாமி படத்தின் முன் அமர்ந்து ஆத்மார்த்தமாக வயலின் வாசிப்பார். இது அவருடைய வெகு நாளைய வழக்கம்.

இதேபோல் ஒவ்வோர் ஆண்டிலும் விநாயக சதுர்த்தி தினத்தன்று சொந்த ஊரான லால்குடிக்கு அருகிலுள்ள வெள்ளைப் பிள்ளையாருக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யப் போய்விடுவார்.

ஜெயராமனுக்கு இயற்கையாகவே ரொம்ப அடக்கமான சுபாவம். அவர் தம் வீட்டில் இரைந்து பேசி நான் கேட்டதில்லை. புதிதாகச் சந்திப்பவர்களுக்கு அவர் ஒரு சங்கோஜி போலத் தோற்றமளிப்பார். ஆனால் பழகிய நண்பர்களுடன் ரொம்பக் கலகலப்பாகப் பேசுவார். இவருடைய அடக்கத்துக்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. இவருடைய குருநாதர் எப்போதும் இவர் பக்கத்திலேயே இருக்கிறார். ஆம்! ஜெயராமனுக்கு அவர் தந்தையேதான் குரு. பிள்ளையைத் தயாரித்து இசை உலகுக்கு அளித்த பாணியிலேயே இப்போது பேரக் குழந்தைகளையும் தயார்ப்படுத்தி வருகிறார். பேத்தி விஜிக்கு மூன்று வயது. அதன் கைக்கு ஏற்றவாறு தாத்தாவே ஒரு வயலின் செய்து கொடுத்து அந்தக் குழந்தையின் உள்ளத்திலும் கலை ஆர்வத்துக்கு வித்திட்டுக் கொண்டு வருகிறார்.

ஜெயராமன் சில சந்தர்ப்பங்களில் வீட்டில் புல்லாங்குழல் வாசித்தும் கேட்டிருக்கிறேன். அந்த நாத இன்பம் என் மனத்தில் ஒரு புது ஜெயராமனைக் கற்பனை செய்து கொள்ளத் தூண்டும். கீழ் ஸ்தாயியில் வாய்ப்பாட்டையும் ஜன்னல் வழியாகக் கேட்டிருக்கிறேன். இவை எல்லாவற்றையுமே அவர் தந்தைதான் போதித்திருக்கிறார். ஜெயராமனின் மூன்று சகோதரிகளுக்கும் அவர்தான் குரு. இருவருக்கு வயலினிலும் ஒரு பெண்ணுக்கு வீணையிலும் நல்ல பயிற்சி அளித்திருக்கிறார். தியாகையருக்குச் சிஷ்ய



ராமமூர்த்தி — ஜெயராமன்

ரான லால்குடி ராமையரின் நேர் பரம்பரை அல்லவா ?

எனக்குத் தெரிந்து இவரிடம் ஆறு அல்லது ஏழு வயலின் வாத்தியங்கள் இருக்கின்றன. இத்தனை வயலின்கள் தேவைதானா என்று ஒரு சமயம் பாமரத்தனமாகக் கேட்டேன். பொறுமையாக அதற்குப் பதில் சொன்னார். தனிக் கச்சேரிக்கு ஒரு ரக வயலின். சகோதரி ஸ்ரீமதியுடன் இணைந்து வாசிக்கும் போது ஒரு வயலின், மற்றும் பிரபல பாடகர்களுக்குப் பக்கவாத்தியமாக வாசிக்கும்போது அவர்கள் சுருதிகளுக்கு ஏற்ற வயலின்கள் என்ற பாகுபாடு செய்து வைத்துக் "கொண்டிருக்கிறாராம் ! எல்லா வயலின்களுமே வெளி நாடுகளிலிருந்து வந்தவைதாம். வயதான வயலின்களுக்குத் தான் மதிப்பும் நாத இனிமையும் அதிகம் என்று அவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஒவ்வொரு வயலினிலும் அது தயாரிக்கப் பட்ட வருஷத்தைக் குறிக்கும் சீட்டு ஒன்று தொங்கும். 1840 என்று ஒரு சீட்டில் பார்த்த நினைவு இருக்கிறது.

சில வருஷங்களுக்குமுன் இவர் எடின்பரோ கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இங்கிலாந்துக்குப் போயிருந்தார். அப்போது லண்டன் நகரிலிருந்த யஹூதி மெனுஹின் ஜெயராமனைச் சந்தித்துப் பேசுவதில் ஆர்வம் தெரிவித்தார். ஆகவே, ஜெயராமனும் அவர் நண்பர்களும் மெனுஹின் இருப்பிடத்துக்குக் கிளம்பினார்கள்.

"நீங்கள் மாத்திரம்தான் வந்திருக்கிறீர்களா? உங்களுடைய வயலினை எடுத்து வரவில்லையா?" என்று கேட்டபடியே மெனுஹின் இவரை வரவேற்றார். இவருடைய இசை ஞானத்தைத் தனிமையில் ரசிக்க அவருக்கு அத்தனை ஆர்வம். தம்முடைய இத்தாலிய வயலின் ஒன்றை எடுத்து ஜெயராமனிடம் கொடுத்துக் கர்நாடக ராகங்கள் பலவற்றை இசைக்கச் சொல்லிக் கேட்டார். ஒவ்வொரு ராகத்துக்கும் என்ன என்ன விதமான உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கும் தன்மை உண்டு என்பதையும் விளக்கச் சொல்லிக் கேட்டார்: மெனுஹின், அந்த விளக்கங்களையும், ராக ஆலாபனைகளையும் அப்படியே தமது டேப் ரிகார்டரில் ஒலிப்பதிவு செய்து கொண்டார் என்பது ஜெயராமனுக்குப் பின்புதான் தெரிந்தது !

ஜெயராமன் தம் கையிலிருந்த மெனுஹினின் வயலின் வாத்தியத்தில் மனத்தைப் பறிகொடுத்தார். அதைப் போன்ற வாத்தியம் தமக்குத் தேவை என்று நினைத்தார். "இது போன்ற வயலின் எங்கு கிடைக்கும்?" என்று மெனுஹினிடம் கேட்டும் விட்டார்.

அந்த வயலின் இத்தாலி நாட்டிலுள்ள ஒருவரால் மெனுஹினுக்காகப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டது. மெனுஹின் கொஞ்சம்கூடத் தயங்கவில்லை. அந்தக் கணத்திலேயே இத்தாலி நாட்டிலுள்ள வயலின் தயாரிப்பாளருடன் டெலிபோன் மூலம் தொடர்பு கொண்டார். ஆனால் அந்த இத்தாலி நாட்டவர் அதே ரக வாத்தியம் தயாரிக்க ஒரு மாத கால அவகாசம் தேவை என்றதும் மெனுஹின் 'சரி' என்று சொல்லி, அதைச் செய்து தமக்கு அனுப்பச் சொல்லி விட்டார்.

ஜெயராமனோ உடனடியாகத் தாய்நாடு திரும்ப வேண்டும். ஒரு மாத காலம் கழித்து வயலின் தனியாக வரும்போது, சுங்கக் கட்டுப்பாடுகளும் சிவப்பு நாடாக்களும் குறுக்கிடும் என்று அஞ்சி, தம் ஆசையை வாபஸ் வாங்கிக் கொள்ளக் கூடத் தயாரானார். ஆனால் மெனுஹின் விடவில்லை. "உங்களுக்கு நீங்கள் விரும்பிய வயலின் எந்த வித இடைஞ்சலும் இல்லாமல் வந்து சேரும்" என்று சொல்லி விட்டார். அதே போல் சில நாட்கள் கழித்து அந்த விலை உயர்ந்த வயலினைத் தமது அன்பளிப்பாகவே எந்த விதச் சிவப்பு நாடாக்களும் குறுக்கிட வழி இல்லாமல் அனுப்பி வைத்துவிட்டார்.

ஜெயராமன் பாரதப் பண்பாட்டுக்கு ஏற்பப் பதிலுக்குத் தம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டாமா? சமீபத்தில் மெனுஹின் பம்பாய்க்கு வந்திருந்த போது, தந்தத்தினால் தயாரிக்கப்பட்ட பெரிய நடராஜர் சிலையை மெனுஹினுக்கு வழங்கினார். மெனுஹினுக்கு ஒரே ஆனந்தம்.

ஜெயராமன் எடின்பரோவிலிருந்தபோது, தொழிற் பயிற்சிக்காக இங்கிலாந்துக்குச் சென்றிருந்த என் சகோதரர் சந்திரசேகரன் மான்செஸ்டர் நகரில் தங்கி யிருந்தார். அவருக்கு எடின்பரோ கச்சேரிக்குப் போய் நேரில் கேட்க ஒரே ஆர்வம். ஆனால் கடைசி நேரத்தில் அவரால் போக இயலவில்லை. அவருடைய நண்பர்கள் சிலர் போய் அந்தக் கச்சேரியை ஒலிப்பதிவு செய்து கொண்டு வந்தார்கள். அதைத் தான் அவரால் கேட்க முடிந்தது.

இப்போது நான் நினைத்தபோதெல்லாம் அவருடைய இசையைப் பருகிக் கொண்டிருக்கிறேன். என் சகோதரர் இந்த விஷயத்தில் என்மீது பொறாமைகூடப் படலாம்!

இவர் வீட்டு முன் திண்ணையைக் கவனித்தீர்களா? சம்பிரதாயப்படி இரண்டு விளக்குப் பிறைகள் கதவுக்கு இரண்டு பக்கத்திலும் இருக்கின்றன அல்லவா? அந்த இரண்டு பிறைகளும் வயலின் போலவே அமைக்கப் பட்டிருக்கின்றன!

பள்ளிக்கூடம் போய் வரும் தன் பேரனுக்கு இசைப் பயிற்சிக்கு அதிக நேரம் ஒதுக்க முடியவில்லையே என்று ஜெயராமன் தந்தைக்குக் கொஞ்சம் மனத்தாங்கல்தான். அந்தக் காலத்தில் தம் குழந்தைகளுக்கு இசையுடன் கல்வியையும் வீட்டிலேயே புகுத்தியவர் அவர்.

அமைதியும் சாந்தமும் நிறைந்த அண்டை வீட்டுக்காரர் நண்பர் லால்குடி ஜெயராமன். இந்தக் குணங்கள் அவருக்கு மாத்திரம் சொந்தமல்ல. இவை அவருடைய குடும்பச் சொத்து. பரம்பரையே அப்படித்தான்!

பேட்டி: **கோமதி சுவாமிநாதன்**

அத்தியாயம் 7

முக்காலத்துக்கும் முதல்வர் ; மாயையால் மறைப்பவர் !

டென்னிஸ் ஆடி விட்டுத் திரும்பிய சாருலதா புதிய உற்சாகத்துடன் குளித்துப் புத்தாடை அணிந்து காலை உணவுக்காக மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தாள். திருவிழாக் கோலாகலத்தினிடையில் அவுட் வைத்தால் அது உயரே, உயரே சென்று வானின் கரிய பெரிய பின்னணியில் பளிச் பளிச்சென்று ஒளிரும் வண்ண வண்ணப் பூக்களைச் சொரியுமே, அதே போன்ற தோற்றத்துடன் கூடிய ஒரு புடவையை அணிந்து ஜொலித்தாள் அவள். மாடிப் படிகளில் அவள் இறங்கி வந்தபோது அவள் உடலில் ஏற்பட்ட சிற்றலைகளைப் போன்ற சிறிய சிறிய அசைவுகள் அவள் அழகை நாலாபுறமும் மின்னி மறையும் நட்சத்திரப் பூக்களாகத் தெளித்தன.

விசாலமான சாப்பாட்டு அறையிலிருந்த நீளமான டைனிங் டேபிளின் ஒரு மூலையில் அவளுக்காகத் தட்டு தயாராக வைக்கப்பட்டிருந்தது. அவளுக்குப் பக்கத்திலேயே அவள் அப்பா பெருமாள் அமர்ந்திருந்தார். மேஜையின் மறுமுனையில் சாருலதாவுக்கு எதிரே, அவள் ,தம்பி குணசிலன் உட்கார்ந்திருந்தான். தூசி விழாதிருக்கக் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த தட்டைச் சாருலதா நிமிர்த்திக் கொண்டதும் ஆவி பறக்கும் இட்டிலிகளை அதில் வைத்தான் முத்து. பக்கத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த தினசரிகளை ஒரு விரலால் அலைந்து ஆராய்ந்த சாருலதா, ''முத்து ! ஹிந்து பேப்பர் எங்கே ?'' என்று கேட்டாள்.

சமையல்காரன் பதில் சொல்லவில்லை. ஆனால் சாரு கேட்ட கேள்வி அவள் தம்பி குணசிலன் காதில் விழுந்ததா என்று மட்டும் கவனித்துக் கொண்டான். பேப்பர் படித்துக் கொண்டிருந்த குணசிலன் தன் முகத்தை மறைத்த ஹிந்துவை இரண்டாகவும் பிறகு நாலாகவும் மடித்து மேஜையின் மீது வைத்து ஒரு தள்ளுத் தள்ளினான்.

நன்கு பாலிஷ் ஏறியிருந்த டைனிங் டேபிள்மீது அந்தத் தினசரி வழுக்கிக் கொண்டே பயணம் செய்து சாருலதாவின் அருகே வந்து சேர்ந்தது. அது தட்டில் தட்டி விடாமல் ஒரு விரலால் தடுத்து நிறுத்திய சாருலதா அப்போதுதான் தனக்கும் தன் தம்பிக்கும் உள்ள இடைவெளியின் தூரத்தை அளந்தவள் போல, ''முத்து ! ஏன் குணுவுக்கு அவ்வளவு தொலைவில் தட்டு வைத்தாய்?'' என்று கேட்டாள்.

''அவன் பக்கத்தில்தான் வைத்திருந்தான். நான்தான் அதைத் தூக்கிக் கொண்டு எட்ட வந்துவிட்டேன்'' என்றான் குணசிலன்.

''உள்ளது மூன்று பேர், சேர்ந்து இருக்கக் கூடாதா ?''



சாருலதா

கி.ராஜேந்திரன்

பெருமாளின் வாய் விஷ்ணு சகஸ்ரநாமத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அவர் தலை நரைத்திருந்தாலும் வயதால் அவரைத் தொண்டு கிழவர் என்று மதிக்கும்படி அவரது சருமத்தில் சுருக்கங்களையோ கண்களில் முதுமையின் சாயலையோ பார்க்க

முடியவில்லை. எனினும், உடலாலும் உள்ளத்தாலும் அவர் களைத்துச் சோர்ந்து பலவீனமுற்றிருந்தார்; கிழடு தட்டிப் போயிருந்தார் என்பதையும் அவர் தோற்றம் உணர்த்தியது.

''இதைவிடத் தொலைவில் இந்த வீட்டை விட்டேதான் போய்விட நினைக்கிறேன். அப்பாவின் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து இந்தமட்டோடு நிறுத்திக் கொண்டிருக்கிறேன்'' என்ருன் குணசீலன்.

''அப்பாவை எதற்கு இதிலே இழுக்கறே? அவர்தான் கிருஷ்ணு, ராமாவைத் தவிர வேறு எதையும் சொல்றதில்லேன்னு விரதம் எடுத்துக் கொண்டிருக்கிருரே?''

''அதை யாருக்காக ஜபித்துக் கொண்டிருக்கிருர் சாரு? தனக்காகவா அல்லது நமக்காகவா? பக்கத்தில் இருக்கிறவரை ஒதுக்கி விடறே. எட்டப் போக நினைக்கிறவனை வம்புக்கு இழுக்கறே.''

''இங்கே உனக்கு என்ன குறைச்சல்? போயிடறேன், போயிடறேன்னு தினம் நாலு தடவை பயமுறுத்துகிருயே?''

''இந்தச் சூழ்நிலை எனக்குப் பிடிக்கவில்லை.''

''கல்யாணத்தைச் செய்து கொண்டு மாமனுர் வீட்டில் ஐக்கியமாகிவிடு. அப்போ 'அட்மோஸ்பியர்' பிடிக்கும். அப்புறம் தீபாவளிக்குத் தீபாவளி பிறந்த வீட்டுக்கு வந்தால் போதும்!''

''இந்த வீட்டிலே மரியாதை கெட்டு வாழறதைவிட மாமனுர் வீட்டிலே மதிப்போடு என்னுல் வாழ முடியும்,



சாரு! ஆனால் இங்கே இத்தனை நாட்கள் சோறு தின்றும்கூடத் தன்மானத்தை நான் அடியோடு இழந்துவிடவில்லை. கல்யாணம்னு செய்து கொண்டாலும் தனிக் குடித்தனம்தான் நடத்துவேன்.''

ஹிந்துப் பேப்பரில் சுவாரசியமில்லாத பெரிய செய்தித் தலைப்புக்களைக் கண்ணோட்டம் விட்டு விட்டு, சிறிய தலைப்புக்களில் சுவையான செய்திகள் ஏதேனும் அகப்படுமா என்று பார்த்துக் கொண்டிருந்தாள் சாருலதா.

இவர்களுடைய தர்க்கத்தைக் கேட்டு அலுத்துவிட்ட பாவனையிலும் தனக்குச் சம்பந்தமில்லாத விஷயம் என்ற நினைப்பிலும் முத்து, காப்பி டிரேயைக் கொணர்ந்து சாருலதா அருகே வைத்தான். ஒரு கப் காப்பி நிரப்பிக் கொண்டு போய்க் குணசீலனுக்குக் கொடுத்தான். ஒரு வெள்ளி மணியைச் சாருலதாவுக்கும் பெருமாளுக்கும் இடையில் வைத்தான், ஏதாவது காரியம் ஆகவேண்டுமானால் மணி அடித்துத் தன்னை அழைக்கலாம் என்ற அர்த்தத்தில். பிறகு சமையலறைக்குப் போய் 'விட்டான்.

''தன்மானங்கிறது ஓட்டைக் கூரையிலும், ஒண்டுக் குடித்தனத்திலும் தான் இருக்கா? இருநூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் கல்யாணம், தனிக் குடித்தனம் என்றெல்லாம் பேசறியே. எங்கே ஜாகை? எட்டு எருமை மாடுகள் உழலும் சந்தில் பத்துக் குடித்தனங்கள் உள்ள வீட்டில் புறாக் கூண்டு போன்ற அறை கிடைக்கும் உனக்கு.''

''இருக்கட்டுமே! என் ஏழைமை நிலைமையைக் குத்திக் காட்டுபவர் யாரும் இல்லாத இடமானால் அதுவே சொர்க்கம் எனக்கு.''

''ஏழைமை நிலைமை நீயே வரவழைத்துக் கொள்கிறதுதானே! நாலு கார் வாசலில் நிற்கிறது. என்றாலும்,




ஒளிவீசுவோரின் மதிப்பு—
ஸன்லைட் தரும் சிறப்பு
ஸன்லைட் சலவையின்
ஒளியே ஒளி. மற்ற சோப்புக்களைவிட
தூய்மையிற் சிறந்தது ஸன்லைட்
SUNLIGHT
Soap

பஸ்ஸில்தான் போவேன் என்று அடம் பிடிக்கிறாய்.....''

'நைட் கிளப் ஒன்றில் போலீஸார் படையெடுத்து மூன்று பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள். காலஞ் சென்ற கேசவ்லாலின் வாரிசுகள் எஸ்டேட் ட்யூட்டி தவறாகக் கணிக்கப்பட்டதாக ஹைகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள். மூன்று சினிமா நட்சத்திரங்கள் வீட்டில் 'ரெய்ட்' நடத்தியதில் கறுப்புப் பணம் பல லட்சங்களும் அவற்றுக்குரிய சாட்சியமாகச் சில கடிதங்களும் கிடைத்திருக்கின்றன' — எலீட் கிளப்பின் பெர்மிட் ரூமில் இன்று மாலை பேசுவதற்கு இந்த விஷயங்கள் போதும். சாருலதா மனத்தின் ஒரு மூலையில் இந்தச் செய்திகளைப் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

''குமாஸ்தா வேலை பார்க்கிறவன் அம்பாஸிடர் காரில்தான் போய் இறங்க வேண்டுமா?'' என்றான் குணசீலன்.

''நல்ல உத்தியோகம் தருகிறேன் என்றால் அதை வேண்டாம் என்று உதறித் தள்ளுகிறவனும் நீதானே? இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடவில்லை. தோல் பதனிடப் புதுசா ஒரு ஃபாக்டரி ஆரம்பிக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். அதில் உன்னை மானேஜராகப் போடறேன்.''

''எனக்கு அநுபவமில்லை. உன் தம்பி என்பதால் எனக்கு ஓர் உயர் பதவி கொடுத்து விட்டுப் பிறகு என் திறமைக் குறைவினால் நஷ்டம் ஏற்பட்டால்?''

''நஷ்டம் ஏற்படாது. அதையெல்லாம் கவனித்து லாபகரமாக நடத்த ஆட்கள் இருக்கிறார்கள். நீ கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாலே போதும். காரியங்கள் நடந்துகொண்டு போகும்.''

''அப்படின்னா என்னைப் பொம்மை மாதிரி உட்கார வைத்து ஒரு பெரிய தொகையைத் தண்டச் சம்பளமாகக் கொடுக்கிறேன் என்கிறாய்.''

''சரி, வேணும். எனக்குக் கீழே வேலை செய்ய உனக்குப் பிடிக்காது. உன் பேரிலேயே ஒரு கம்பெனியைப் புதுசா ஆரம்பிச்சுத் தரேன். எனக்குக் கிடைக்கிற இம்போர்ட் லைசென்சுகளை உன் பேருக்கு மாற்றித் தரேன். நேரடியா என் கம்பெனிகள் இறக்குமதி செய்கிறதைவிட உன் கம்பெனி இறக்குமதி செய்து பிறகு எனக்கு நீ விற்று லாபம் அடையலாம். இன்கம் டாக்ஸுக்குக் கொடுக்கிறதை உனக்குக் கொடுப்பதிலே எனக்குச் சிரமமில்லை.''

''எனக்கு இந்தப் பிஸினஸ் தகிடுதத்தங்கள் எல்லாம் புரியாது அக்கா. நஷ்டப்பட்டுக் கையைச் சுட்டுக் கொள்வேன். அல்லது சட்டத்தின் பிடியில் அகப்பட்டுக் கொள்வேன்.''

''அப்படிப் பயமாயிருந்தால் என்னையும் பார்ட்னராகச் சேர்த்துக் கொள். நஷ்டம் வந்தாலும் கவலை இல்லை. எட்டு கம்பெனிகள் லாபத்தில் நடக்கும் போது ஒண்ணு நஷ்டப்பட்டால் அதிலும் எனக்குச் சில வசதிகள் உண்டு.''

''ஆகக்கூடி உதவாக்கரை ஒருவன் தேவை என்பதற்காகத்தான் என்னைத் தேர்ந்தெடுக்கிறாய்!''

மணியை அடித்து, முத்து வந்ததும் சிவப்புப் பென்சில் கொண்டு வரச் சொன்னாள் சாருலதா. பங்கு மார்க்கெட் நிலவரங்களில் குறிப்பிட்ட ஒரு கம்பெனியின் ஷேர் விலையைச் சிவப்புப் பென்சிலால் அடிக் கோடிட்டாள். 'விலை சரிந்திருக்கிறது. என்ன காரணமோ விசாரித்து இந்தச் சமயத்தில் ஐம்பத்தொரு சத விகிதத்தைக் 'கார்னர்' பண்ணலாமா என்று யோசிக்க வேண்டும்.' இப்படி அவள் மனத்துக்குள் முடிவு செய்தாள்.

''எப்படிப் போனாலும் நீ வழிக்கு வரலைன்னா நான் என்ன செய்யறது?'' என்று கேட்டாள் தம்பியிடம்.

''நான் எதற்காக உன் வழிக்கு வரணும் சாரு? சுதந்திரமான நாடு தானே இது? என் வழியில் நான் போக விட்டுவிடு என்றுதானே கேட்கிறேன்?''

''உனக்கு என்ன கோளாறு தெரியுமா? 'இன்ஃபீரியாரிடி காம்ப்ளெக்ஸ்' அதை மறைத்துக் கொண்டு தன் மானம், தன்மானம் என்று வேஷம் போட்டுச் சவடாலாகப் பேசுகிறாய்!''

''அக்கா! நான் இன்ஃபீரியர் என்பதால் எனக்கு இன்ஃபீரியாரிடி காம்ப்ளெக்ஸ்; நீ சுபீரியர் என்பதால் உனக்கு 'சுபீரியாரிடி காம்ப்ளெக்ஸ்' என்று அத்தனை சுலபமாக அந்த நோய்கள் வந்து விடுவதில்லை. உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்கும் தாழ்வு மனப்பான்மை ஏற்படும்; மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களும் தங்களை மிக உயர்ந்தவராகக் கருதிக் கொள்ள முடியும். இப்படியெல்லாம் அந்த மன நோய்கள் குளறுபடி செய்து மனோதத்துவ நிபுணர்களையே குழப்பத்தில் ஆழ்த்தும். சந்தேகமானால் டாக்டர் வேணுகோபாலைக் கேட்டுப் பார்.''

ரோட்டரி கிளப்பில் கிலால் சுந்த் பேசியிருந்ததன் சுருக்கம் எக்ஸ்பிரஸில் வெளியாகியிருப்பதைப் பார்த்தாள், சாருலதா. ''டெவலப்பிங் எகானமி இன்



யாருடைய சிலே இது? எங்கே இருக்கிறது? மாலே அணிவிப்பவர் எவர்? (45ம் பக்கம் பார்க்க)

ஏன் அன்டெவலப்ட் கண்ட்ரி'' என்ற தலைப்பில் பேசியிருந்தான். 'அடப் பாவி! இவனுக்கு எகனுமிக்ஸ் பற்றி என்ன தெரியும்? யார் எழுதிக் கொடுத்ததை எழுத்துக் கூட்டிப் படித் தானே? நல்ல வேளை, நான் ஊட்டி யில் இருந்தேன். இல்லாவிட்டால் இரண்டு மணி நேரம் போர் அடிக்கும் பேச்சைக் கேட்டுத் தொலைக்க நேர்ந் திருக்கும். இப்போ சுலபமாக ஃபோன் போட்டு கன்கிராஜுலேட் பண்ணிவிட லாம். ஐஸ் வைத்தால் பின்னல் சௌகரியமாயிருக்கும்.'

''நீ சொல்லிக் காட்டுவது போல் எனக்குத் தாழ்வு மனப்பான்மை இருக் கிறது என்றே வைத்துக் கொள்ளலாம், குணு! ஆனல் அந்தத் தாழ்வு மனப் பான்மையோடு நான் சாதித்திருப் பவை என்ன, பார்த்தியா? ஐந்து கம்பெனிகள் எனக்கே சொந்தம். வேறு பத்து கம்பெனிகளில் கண்ட்-ரோலிங் இன்டரெஸ்ட். இன்னும் பல வற்றில் இன்வெஸ்ட்மெண்ட். உன்னு டைய மிக உயர்ந்த மனப்பான்மையின் சாதனை என்ன? பூஜ்யம்!''

பெருமானின் விஷ்ணு சகஸ்ரநாம உச்சாடனம் கொஞ்சம் உரக்கவே இருந் தது இப்போது. ''பூத பவ்ய பவந் நாத: பவன: பாவனே நல: காமஹாகாமக்ருத்காந்த: காம : காமப்ரத: ப்ரபு: ''

''சாரு! மனிதர்கள் எல் லாருமே சாதனைகளைப் புரியப் பிறந்தவர்கள் இல்லை. ஒருவன் உயரே செல்ல ஆயிரம் பேர் ஏணிப் படிகளாக வேண்டி யதுதான்'' என்றான் குண சிலன்.

''ஆயிரம் பேர் இருந்து விட்டுப் போகட்டும். ஆயி ரத்து ஒன்ருக நீ ஒருத்தன் எதற்கு? அதுதான் இப்போ பிரச்னை. நீ இப்படி இருப்பது எனக்கு அகௌரவம் என்பது உனக்கு ஏன் புரியவில்லை? உன்னைத் தெரிந்தவர்கள் எல் லோரும் என்ன கேட்பார்கள், நினைப்பார்கள்? 'இவனுக்கு ஒரு நல்ல உத்தியோகம் போட்டுக்கொடுக்கக்கூடாதா, சாருலாதா?' என்றுதானே?''

''உன்னை யாராவது தவரு கப் புரிந்துகொண்டு விடக் கூடாதே என்பதற்காக நான் என் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக் கொள்ள முடியுமா என்ன?''

''முன்னுக்கு வர வாய்ப்பில்லாத வனைப் பார்த்துப் பரிதாபப்படலாம். ஆனல் முன்னுக்கு வர வாய்ப்பிருந்தும் அதை நழுவ விடுகிறவன் முட்டாள்!''

''நீ என்னை முன்னுக்கு வரச் சொல்ல வில்லை. அழுக்கில் புரளச் சொல் கிருய்!''

''பொருமையால் நீ என்ன பேசு கிருேம் என்றே புரியாமல் உளறு கிருய்!''

''உண்மை கசந்தால் உளறலாகி விடுவது சகஜம். எனக்குப் பொருமை யில்லை, உன்னிடம். அனுதாபம்தான்!''


''அது எனக்குத் தேவையில்லை!''

''உனக்குத் தேவையில்லை என்ப தால் என்னிடம் உணர்ச்சிகள் செத்து விடுமா? சகோதர பாசம் இல்லாமல் போய் விடுமா?''

''முத்து! இந்த ஹிந்துப் பேப்பரை நான் ஆபீசுக்கு எடுத்துப் போகும் என் பிரீப் கேஸில் வை!'' என்ற சாரு, தம்பி குணசீலனைக் கண்கொட்டாமல் பார்த்தாள். ''நான் பெண்பிள்ளைதான். ஆனல் நூற்றுக் கணக்கான ஆண்கள் அதைப் பொருட்படுத்துவதில்லை. என் திறமைக்கு மதிப்புக் கொடுத்துச் சொல்

துள்ளும் குழந்தைகள் நன்கு வளர்ந்திட

ருசித்துப் பருகட்டும் போர்ன்விடா!



ஓடி விளையாடும் குழந்தைகளுக்கு தினசரி உணவிலிருந்து கிடைக்கும் சக்தி போதுவதில்லை. எவ்வளவு சீக்கிரம் அவர்களுக்கு சக்தி கிடைக்கிறதோ அதே வேகத்தில் அது பள்ளிக்கூடத்திலும், விளையாடும் போதும் செலவழிந்து விடுகிறது. இழக்கும் சக்தியை மீட்டுத் தந்து குழந்தைகளைத் துள்ளும் ஆரோக்கியத்துடன் வளர்க்க, தினமும் ஒரு கப் போர்ன்விடா கொடுங்கள். தம் மக்கள் நலம் கருதும் தாய்மார்கள் அனைவரும் இதை ஆமோதிப்பார்களே!

பால், சர்க்கரை, மால்ட், கோகோ இவையாவும் திட்டமாகக் கலக்கப்பட்டதும், போஷாக்குச் சத்து நிறைந்ததுமான ஒரு இனிய பானம் போர்ன்விடா. ஆம், இது ஒரு காட்பரிஸ் தயாரிப்பு!




சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும்

காட்பரிஸ் போர்ன்விடா.

Bensons/0391/TAM

கிறபடி கேட்கிறார்கள். உனக்கு மட்டும் என்ன வந்து விட்டது?''

''நீ சம்பந்தமில்லாத விஷயங்களைத் தர்க்கத்தில் இழுக்கிறாய், சாரு. என்னுடைய ஆண்மைக்கு ஏதோ இழுக்கு வந்துவிடும் என்பதால் நீ சொல்வதற்கெல்லாம் நான் மறுப்புத் தெரிவித்துக்கொண்டிருக்கவில்லை. அடிப்படையில் பார்த்தால் இதில் பிரச்னையே ஒன்றுமில்லை. என் வழியில் நான் போக அனுமதித்தால் போதும். பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும் என்பது பழமொழி. ஆனால் உனக்கு ஏற்பட்ட சில அநுபவங்களை அருகிலிருந்து பார்த்த பிறகு எனக்குப் பணம் என்றாலே வெறுப்பாக இருக்கிறது. எனக்குப் பணம் பண்ணத் தெரியாது. உன் போன்ற சிலர் பணம் பண்ணக் கையாளும் முறைகள் எனக்குப் பிடிக்கவும் இல்லை. இருநூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் நான் சந்தோஷமாக வாழ முடியும் என்பதை நீ நம்பவும் ஒப்புக்கொள்ளவும் மறுக்கிறாய். அதைவிட ஏழைமையான நிலையை நாம் கண்டதில்லையா என்ன?''



லண்டன் டாவிஸ்டாக் சதுக்கத்தில் உள்ள அண்ணல் காந்தி அடிகளின் சிலைக்குக் காந்தி நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் போது மலர் மாலை அணிவித்தவர் இந்தியாவின் கடைசி பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் லார்ட் மவுண்ட்பாட்டன். அந்தப் படத்தைத் நான் 42ம் பக்கத்தில் பார்த்தீர்கள். இங்கு பிரிட்டிஷ் வைஸ்ராய் தம்பதியுடன் மகாத்மா - புதுடில்லியில் '47ல் எடுத்த படம்.

''அது அந்தக் காலம் குணா! கமலாவை வேணுமானால் கலந்தாலோசித்துக் கொண்டு வந்து சொல்லு. கல்யாணமான பிறகு கஷ்டப்படாதே!''

''கல்யாணமா? அது எங்கே நடக்கப்போகிறது?''

''ஐயய்யோ! அப்படிச் சொல்லாதே! அந்தப் பெண்ணின் எதிர்காலம் என்னவாகிறது?''

''இந்தக் கல்யாணம் நடக்கவே நடக்காது என்பது கமலாவுக்கும் தெரியும். தெரிந்தும்தான் என்னைக் காதலிக்கிறாள். எதிர்காலம் என்று ஒன்று எங்கள் இருவருக்குமே இல்லை.'' குணசீலன் சிரமப்பட்டுக் கண்ணீருக்கு அணை போட்டான்.

''இது என்ன பைத்தியக்காரத்தனம்? கல்யாணம் ஏன் நடக்காது?''

''அது உனக்கே தெரியுமே, சாரு! நான் வாய் விட்டுச் சொல்ல வேண்டுமா அதை? அதுவும் உன்னிடம்?''

'' கரணம் காரணம் கர்த்தா விகர்த்தா கஹநோ குஹ:'' என்று பகவன் நாமாவை உச்சரித்துக் கொண்டிருந்தார் பெருமாள். சாருலதா பதில் பேசாமல் மௌனத்தில் ஆழ்ந்ததால் இந்த வரி தெளிவாகக் கேட்டது.

குணசீலன் தன் இருப்பிடத்திலிருந்து எழுந்து சாருலதாவுக்கு அருகில் வந்தான். தன் பையிலிருந்து சில நோட்டுக்களை எடுத்து எண்ணி எண்பது ரூபாயை மேஜை மேல் வைத்தான்.

''என்ன இது?'' என்றாள் சாருலதா.

''இந்த வீட்டில் என் அறைக்கு வாடகை இருபது ரூபாய்; சாப்பாட்டுச் செலவு அறுபது ரூபாய். ஆக மொத்தம் எண்பது ரூபாய் உனக்குச் சேர வேண்டியது'' என்றான் குணசீலன்.

''இனி ஒவ்வொரு மாதமுமே இப்படிக் கணக்குத் தீர்த்துவிட உத்தேசித்திருக்கிறேன்'' என்று கூறியபடியே திரும்பி நடந்தான்.

அந்தப் பணத்தைச் சாருலதா வெறித்துப் பார்த்தபோது அவள் முகம் அழகாக இருக்கவில்லை. பெருமாள் சகஸ்ரநாமத்தைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டே மெல்ல எழுந்து தள்ளாடி நடந்து பூஜை அறையை நோக்கிச் சென்றார்.

சில விநாடிகளில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போல் சாருலதா பணத்தை எடுத்துக் கொண்டாள். கைக்கடிகாரத்தை ஒரு தடவை நோக்கியவள் காரியாலயத்துக்குப் புறப்படத் தயாரானாள். **(தொடரும்)**



பொறுமை அதிகாரம்

'உமாசந்திரன்'

ஒரு முக்கியமான பைலைப் பார்த்து உடனடியாக முடிவெடுத்து மேலிடத்துக்கு அனுப்ப வேண்டிய வேலையிருந்ததால் சற்று முன்னதாகவே காரியாலயத்துக்கு வந்து விட்ட நான், ஆரம்பத்திலிருந்து பைலைப் பார்த்து அதில் நான் எழுத வேண்டிய குறிப்புக்களை எழுதி முடித்ததும் தலைமைக் குமாஸ்தாவிடம் அதை எடுத்துப் போகச் சொல்வதற்காக ஆபீஸ் 'பையனை'க் கூப்பிடும் 'பஸ்ஸரை' அழுத்தி விட்டு இன்னொரு பைலை எடுத்து வைத்துக் கொண்டு அதில் என் பார்வையை ஓட்ட ஆரம்பித்தேன்.

''மார்னிங் சார்!'' — பெண் குரலைப் போன்ற புதுக் குரல் ஒலிக்கவே, நான் வியப்புடன் நிமிர்ந்து பார்த்தேன்.

எதிரே நின்ற அந்த உருவத்தைக் கண்டதும் எனக்கு வியப்பு மட்டுமல்ல; சிரிப்பும் கூடவே வெடித்து விடும் போலிருந்தது.

அது பெண் அல்ல. மேஜை மட்டத்துக்கு மேல் ஒரு சிறு பையனின் முகம் மட்டும்தான் முதலில் என் கண்களுக்குப் புலனாயிற்று. அது சிறு பையனும் இல்லை என்பதை அடுத்த கணமே உணர்ந்து கொண்டேன். எடுப்பாக முறுக்கி விடப்பட்ட அந்த மீசை மட்டுமல்ல; அந்த முகத்திலிருந்த முதிர்ந்த களையும் சேர்ந்து அந்த முகத்துக்குடையவனுக்கு நாற்பத்தைந்து வயதுக்குக் குறைவு இருக்காது என்பதை எடுத்துக் காட்டியது.

''நான் ஆபீஸ் பையன் ஆல்பர்ட் ஸார்!'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, ''இரண்டு மாச லீவிலே இருந்தேன். இன்னிக்குத்தான் மறுபடியும் டியூட்டியிலே சேர்ந்திருக்கேன்!'' என்றான் அவன்.

''ஓ! உனக்கு இங்கேதான் டியூட்டியா?'' என்று பெரிய மனித தோரணையை விட்டுக் கொடுக்காமல் கூறிய நான், ''இந்த பைலை ஹெட்கிளார்க்கிட்டே எடுத்துப் போ!'' என்றேன்.

''ஏன் சார், கபாலி நம்பளைப் பத்தி ஐயாவுக்குச் சொல்லலியா?'' என்றான் ஆல்பர்ட்.

''சொல்லலையே!''

''என்ன மோசமான உலகம் பார்த்திங்களா, சார்! கபாலிப் பயலுக்குக் கை காட்டி விட்டு அவனை இந்த வேலையிலே கொண்டு சேர்த்ததே நான்தான்! அந்த விசுவாசம் கொஞ்சமாவது இருக்கா அவனுக்கு! பொறுமை சார்! பொறுமை! ஆனால் பொறுமைப்பட்டு என்ன பிரயோசனம்? ஆல்பர்ட் பெரிய ஐயாவுக்குப் பியூனா இருக்கான்னு அந்தப் பதவி சும்மா வந்திடலியே! இருபது வருஷங்கள் உயிரைக் குடுத்து உழைச்சுச் சம்பாதிச்ச பதவி சார் இது! ஆமாம்!''

''அப்படியா! இருபது வருஷ சர்வீஸ் ஆகியிருக்கா உனக்கு.''

''ஆமாம், சார். இத்தனூண்டுப் பையனா இருந்த போதே இந்த ஆபிஸிலே வந்து சேர்ந்திட்டேன். யேக புண்ணியத்திலே இது வரைக்கும் நம்ம ரிப்போர்ட்டிலே அப்பழுக்குச் சொல்லமுடியாது சார்! எல்லா அதிகாரி கிட்டேயிருந்தும் பிரமாதமா சர்டிபிகேட் வாங்கி வச்சிருக்கேன்.''

''ஐயா புதுசானதினாலே இவ்வளவு தூரம் பேசிட்டேன். மொதல்லே வேலை, அப்புறம் தான் பேச்சு. அதுதான் ஆல்பர்ட்டோட திட்டம்!'' என்று கூறியவாறு மிடுக்காக நடந்து வெளியே சென்று விட்டான் அவன்.

இப்படிப்பட்ட, ஒரு மனிதனின் சொந்த வாழ்க்கை எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்த போது எனக்குச் சிரிப்பு வந்தது. அவனுக்கு மணமாகி யிருந்தால் அவனுடைய மனைவியும் உருவத்தில் அவனைப் போல் இருந்தால்தானே பொருத்தமாயிருக்கும்! ஒரு வேளை அந்தக் காரணத்தினாலேயே அவன் தனிக் கட்டையாகக் காலம் கழித்துக் கொண்டிருக்கிறானோ என்னவோ!

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் என்னுடைய அந்தச் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தான் ஆல்பர்ட். நான் கையெழுத்துச் செய்த இன்னும் இரண்டு மூன்று பைல்களை எடுத்துப் போகும் சாக்கில் உள்ளே வந்த அவன் உடனே போய் விடாமல் நின்றான்.

''ரெண்டு மாச லீவு நான் எப்பவுமே எடுத்தது கிடையாது சார்! இப்போ எடுக்கும்படி நேர்ந்து போச்சு. மச்சினிப்

பொண்ணு கலியாணத்துக்கு நின்னுக்கிட்டிருந்திச்சு. என் சம்சாரத்தையும் என்னேயும் விட்டா அதுக்கு வேறே யாரும் கிடையாது சார்! எங்க வகுப்பிலேயும்தான் இப்போ ஜாதி இந்துக்கள் மாதிரி மாப்பிள்ளே தேடறது மகாத் தொல்லேயாப் போச்சே! பொழுதன்னிக்கும் 'டியூட்டி' 'டியூட்டி'ன்னு மாய்ஞ்சுக்கிட்டிருந்தா எப்படி மாப்பிள்ளே தேட முடியும்? அதனுலே தான் இரண்டு மாச லீவு எடுத்துக்கிட்டுப் போயிட்டேன். மச்சினிப் பொண்ணுக்குத் தகுந்த மாப்பிள்ளே பார்த்துக் கலியாணம் செய்து வச்ச பிறகுதான் மனசு நிம்மதி யாச்சு!''

''உனக்குக் குழந்தை குட்டி ஏதாவது...''

''ஒரே ஒரு மகன் இருக்கான் சார். எட்டாவதுவரை படிச்சிருக்கான். அதுக்கு மேலே படிப்பு ஏறல்லே. நானும் எவ்வளவோ அதட்டி உருட்டி அடிச்சுக்கூடப் பார்த்திட்டேன். ஊஹூம்! அவன் மூளேயிலே படிப்பு ஏறிணுத்தானே! அறிவுக்கு அம்மாவைக் கொண்டு பொறந்திருக்கானே, என்ன செய்யறது!''

ஆல்பர்ட்டின் அந்தச் சிறிய உருவத்திலிருந்து வெளிப்பட்ட அந்தப் பெரிய பேச்சைக் கேட்டு எனக்குச் சிரிப்பு வந்தது.

அடுத்த இரண்டு நாட்களுக்குள்ளாகவே ஆல்பர்ட்டின் குடும்பத்தைச் சந்திக்கப்போகிறேனென்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லே. அன்று ஞாயிற்றுக்கிழமை. காலேயில் காலாறக் கடற்கரையில் நடந்து விட்டு நான் திரும்பி வந்து கொண்டிருந்தபோது அது நிகழ்ந்தது. மாதா கோயிலுக்கருகே ரஸ்தாவைக் கடப்பதற்காக நான் தயங்கி நின்ற சமயத்தில்...


''மார்னிங் சார்!''

பழக்கமான கீச்சுக் குரலேக் கேட்டு நான் திரும்பினேன். ஆல்பர்ட் நின்று கொண்டிருந்தான். மாதா கோயிலில் பிரார்த்தனே முடிந்து திரும்பி யிருந்தானென்று அவனேப் பார்த்தாலே தெரிந்தது. கச்சிதமாக அளவெடுத்துத் தைத்திருந்த 'ஹனுவா' சூட்டும் பட்டுப் பூச்சி டையும், பெல்ட் ஹாட்டும் அணிந்து ஏதோ திருவிழாவுக்குச் செல்லும் சிறு பையனேப்போல் காட்சி யளித்தான்.

என்னேக் கண்டதும் . மரியாதைக்காக ஹாட்டை ஒரு முறை கழற்றிவிட்டு மீண்டும் அணிந்து கொண்டான்.

''ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாதா கோவிலுக்கு வருவதுண்டா ஆல்பர்ட்?'' என்று கேட்டேன்.

''எது தவறிணுலும் அது தவறாது சார்! குடும்பத்தோட வந்திடுவேன்! அந்த விஷயத்திலே நம்பன் ரொம்பக் கண்டிப்பு!''



என்று கூறிய ஆல்பர்ட் திடீரென்று பொறுமை இழந்தவனைப் போன்ற கடுகடுப்புடன் பின்னால் திரும்பிப் பார்த்தான்.

''இந்த ரெண்டு பேரும் எங்கே நின்னுட்டாங்க! ஐயாவுக்கு அறிமுகம் செய்து வைக்கலாம்னு பார்த்தா....'' என்று சுற்று முற்றும் பார்வையை ஓட்டிய ஆல்பர்ட் சட்டென்று முகமலர்ச்சியுடன் ''அதோ வந்திட்டாங்க!'' என்று கிறீச்சிட்டான்.

நானும் அந்தத் திசையில் பார்த்தேன். நாற்பது வயது மதிக்கத் தகுந்த வாட்டசாட்டமான அந்தப் பெண்மணியையும் சாயலில் அந்தப் பெண்மணியையே கொண்டிருந்த அந்த வாலிபப் பையனையும் பார்த்து என் வியப்புக்கு எல்லையே இல்லை. ஆல்பர்ட்டின் மனைவியும் மகனுமா இவர்கள்!

''சார், இது என் சம்சாரம் ரோஸி. இவன் என் மகன் விக்டர்'' என்று அறிமுகப்படுத்திய ஆல்பர்ட் சட்டென்று கண்களில் கோபம் பறக்க அவ்விருவரையும் அண்ணாந்து பார்த்து, ''என் மண் பொம்மை மாதிரி நிக்கறீங்க ரெண்டு பேரும்? இவங்க நம்ம ஆபீஸ் பெரிய 'பாஸ்'. எல்லாருக்கும் 'பாஸ்'. தோத்திரம் சொல்ல வாய் வரலியா இன்னும்?'' என்றான் அதட்டல் தொனிக்கும் கீச்சுக் குரலில்.

''தோத்திரம் சார்!'' என்று கைகூப்பினார்கள் அவ்விருவரும். நானும் பதிலுக்கு வணக்கம் தெரிவித்தேன்.

ஆல்பர்ட்டிடம் அவர்கள் காட்டிய அச்சம் நிறைந்த பணிவு என்னைப் பிரமிக்க வைத்தது. பார்க்கப் போனால் அவ்விருவருக்கும் மத்தியில் ஆல்பர்ட் ஒரு பொம்மைப் பையனைப் போலத்தான் காட்சியளித்தான். ஆனால் அவன் தன் கடுகடுப்பைக் காட்டியவாறு கண்களை உருட்டி அவர்களை நோக்கி விழித்த தோரணையே அவர்கள்மீது தன்னுடைய அதிகாரத்தை எவ்வளவு தூரம் நிலைநாட்டிக் கொண்டிருக்கிறான் என்பதை எடுத்துக் காட்டியது.

ஆல்பர்ட்டின் மகன் அனாயாசமாக ஆறடி உயரத்துக்கு வளர்ந்திருந்தான். ஆல்பர்ட்டை அலட்சியமாக ஒற்றைக் கையால் தூக்கக் கூடிய வலிவு அவனுக்கு இருந்ததை அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் அந்தப் பொம்மைத் தகப்பனின் கோபப் பார்வையை நேருக்கு நேர் சந்திப்பதற்குக்கூடத் துணிவில்லாமல் அவன் பதற்றத்துடன் வேறு எங்கெங்கோ பார்த்தவாறு நிலை கொள்ளாமல் தவித்த தவிப்பு எனக்கு விந்தையாக இருந்தது. ஆல்பர்ட்டின் மனைவியும் அப்படித்தான். இரட்டைக் கதுப்புக் கன்னங்களுடன் அசாதாரணமாகப் புடைத்துப் பரந்திருந்த அவள் முகத்தில் கணவன் இன்னும் எதைப் பற்றிக் கோபித்துக் கொண்டு விடுவானோ என்ற திகில் தாண்டவமாடியதை நான் கண்டேன்.


அவ்விருவருடைய அந்த நடுக்கம் ஆல்பர்ட்டுக்குத் திருப்தி அளித்திருக்க வேண்டும். அவன் முகம் மலர்ந்தது.

''ரொம்ப நன்றி ஸார். நாங்க வரோம். தோத்திரம்'' என்று தொப்பியை ஸ்டைலாகத் தொட்டு வணக்கம் தெரிவித்துவிட்டு ஆல்பர்ட் நடக்க ஆரம்பித்ததும் மற்ற இருவரும் மரியாதையுடன் என்னைப் பார்த்துத் தலையைத் தாழ்த்தி வணங்கியவாறு அவனைத் தொடர்ந்து சென்றனர்.

ரஸ்தாவைக் கடந்து எதிர் நடைபாதையை அவர்கள் நெருங்கிய சமயத்தில் ஒரு கார் வேகமாகத் திரும்பி ஆல்பர்ட்டின் மேல் மோதுவது போல் வந்தது. சட்டென்று விக்டர் தன் தகப்பனை அலாக்காகத் தூக்கிக் கொண்டு நடைபாதைக்குத் தாவியிராவிட்டால் என்ன ஆகியிருக்குமோ சொல்ல முடியாது. ஆனால் ஆல்பர்ட் மகனுடைய அந்தச் சமயோசிதச் செயலை ஆமோதித்ததாகத் தெரியவில்லை. ஆங்காரத்துடன் ஏதோ சொல்லிக் கொண்டு அவன் தன் இரண்டு சிறிய கைகளாலும் விக்டரை ஓங்கி ஓங்கி அறைவதைப் பார்த்தேன். அவன் ஆத்திரத்துடன் கூறிய வார்த்தைகள் என் காதில் விழவில்லை. என் கண்ணெதிரே மகன் தன்னை அவ்விதம் தூக்கிவிட்டதை அவமானமாக நினைத்தானா? அல்லது தன்னைக் காத்துக் கொள்ளும் தன்னம்பிக்கையும் ஆற்றலும் தனக்கு ஏராளமாக இருக்கிறது என்று நிரூபிக்க நினைத்தானா ஒருவேளை? சிறிது பலவீனத்தைக் காட்டிக் கொண்டாலும் மற்றவர்கள் தன்னை மதிக்காமல் அலட்சியப்படுத்தி விடுவார்கள் என்ற அச்சம்தான் காரணமா?

காரியாலயத்திலும் ஆல்பர்ட் மற்ற எல்லாப் பியூன்களுக்கும் தானே தலைவன் என்ற தோரணையில்தான் ஒவ்வொருவரையும் தனது கீச்சுக் குரலில் அதட்டி உருட்டி அதிகாரம் செய்து கொண்டிருந்தான். ஒவ்வொரு வாரமும் எந்தெந்தப் பியூன் எங்கெங்கே டியூட்டி பார்க்க வேண்டும் என்ற பட்டியலைத் தயாரிக்கும் பொறுப்பு ஆல்பர்ட்டிடமே விடப்பட்டிருந்தது. அவரவருக்குப் பிடித்தமான, சுலபமான





டியூட்டி கிடைக்க வேண்டும் என்பதற்காக ஒருவர் பாக்கி யில்லாமல் அவ்வளவு பியூன்களும் ஆல்பர்ட்டிடம் அலாதிப் பணிவுடன் அவனுடைய அதிகாரத்துக்கு அடங்கியே நடந்து வந்தார்கள். காரணம் அவ்வப்போது தேவைப்படுகிறவர்களுக்கு ஐந்தோ பத்தோ கடனாகக் கொடுத்துக் கணிசமான வட்டியுடன் கண்டிப்பாகத் திருப்பி வாங்கிக் கொள்ளும் சாமர்த்தியமும் அவனிடம் இருந்தது. காரியாலயத்தில் பியூன்கள் மட்டுமல்ல, மற்ற நிலைகளில் உள்ள சிப்பந்திகள் கூட ஆல்பர்ட்டை நடமாடும் பாங்கியாகவே கருதி வறட்சிச் சமயங்களில் அவனுடைய உதவியை நாடி வந்தார்கள்.

அடுத்த சில நாட்களில் இந்த விவரங்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் கேட்டறிந்த எனக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் உதித்தது. ஆல்பர்ட்டிடம் இருக்கும் அந்த ரொக்கப் பணத்துக்காகத்தான் அவன் மனைவியும் மகனும் கூட அவ்வளவு தூரம் அவனுக்கு அடங்கி ஒடுங்கி நடந்துகொள்கிறார்களோ?

ஆனால் மறுநாளே என் சந்தேகம் தீர்ந்துவிட்டது. அன்று ஆல்பர்ட் டியூட்டிக்கு வரவில்லை. அவனுக்குப் பதில் அவனுக்கு நேர் மாறான தோற்றமுடைய கபாலியே என் பஸ்ஸருக்குப் பதில் அளித்தவாறு என் அறைக்குள் வந்தான்.

''ஆல்பர்ட் ஆபீஸுக்கு வரவில்லையா?''

''திடீர்னு மட்டம்போட்டுட்டான் சார்!''

''அவன் உடம்புக்கு ஏதாவது...''

''அந்த உடம்புக்கு வியாதி எங்கேயிருந்து சார் வரும்? எல்லாம் அவனா இழுத்து விட்டுக்கிடறதுதான்!''

''அப்படியென்றால்?''

''வேண்டாம் சார். அதைப் பத்தியெல்லாம் நான் உங்களுக்குச் சொன்னேன்னு தெரிஞ்சா ஆல்பர்ட் என்னைச் சும்மா விடமாட்டான்!'' என்று பட்டும் படாமலும் கூறிவிட்டு அங்கிருந்து நகர முயன்றான் கபாலி.

''நீ என்ன சொல்கிறாய்?''

''நேற்று டியூட்டி முடிஞ்சு ஆல்பர்ட் வீட்டுக்கே போகலியாம்! இன்னிக்கும் வரலியாம்! அவனுடைய சம்சாரமே அவனைத் தேடிக்கிட்டு இங்கே வந்திருச்சு!''

''அப்படியா? எனக்கு ஏன் சொல்லவில்லை?''

''இதை யெல்லாம் உங்க காதிலே போட்டா நல்லா இருக்குமா சார்? பாவம்! அவனோட சம்சாரம் ஒரேயடியாத் தவிக்கப்போகுது. நாங்க எல்லாருமாச் சேர்ந்து ஒரு விதமாச் சமாதானம் செய்து அனுப்பிச்சு வச்சோம்!''

வீட்டுக்குப் போகாமல், ஆபீசுக்கும் வராமல் ஆல்பர்ட் எங்கே மறைந்திருப்பான்? அந்தக் குழப்பம் எனக்கு அவசியமில்லைதான்! இருந்தாலும் என்னால் அதைத் தவிர்க்க முடியவில்லை. ஆபீஸ் சிப்பந்திகளின் வீட்டு விலாசங்கள் அடங்கிய குறிப்பேட்டிலிருந்து ஆல்பர்ட் மாதா கோவிலை அடுத்த ஒரு பேட்டையில்தான் குடியிருக்கிறான் என்று நான் தெரிந்து கொண்டேன். மாலையில் காரியாலயத்திலிருந்து புறப்பட்டதும் நேரே அங்குதான் என் காரை ஓட்டிக் கொண்டு சென்றேன்.

அப்போதும் ஆல்பர்ட் வீட்டுக்குத் திரும்பியிருக்கவில்லை. அவன் மனைவி என்னைக் கண்டதும் பரபரப்புடன் என் கார் அருகே விரைந்து வந்தாள்.

''ஆல்பர்ட் இன்னும் வீட்டுக்கு வரவில்லையா?''

''இல்லே சார், அதைக் கேக்கறதுக்காக எங்க குடிசையைத் தேடியே வந்துட்டீங்களே! எவ்வளவு நல்ல மனசு உங்களுக்கு! வாங்க சார்! என் மகன் இப்பத்தான் கடைவரைக்கும் போயிருக்கான். ரெண்டே நிமிஷத்திலே திரும்பி வந்திடுவான்!''

அவளுடைய அழைப்பைப் புறக்கணிக்க மனமில்லாமல் அந்தச் சிறிய வீட்டுக்குள் சென்று அங்கிருந்த ஒரு சிறிய மரக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டேன். அது ஆல்பர்ட் உபயோகிக்கும் கட்டில் என்று பார்த்தாலே தெரிந்தது. அதேபோல் ஆல்பர்ட்டின் உபயோகத்துக்கே ஏற்றதான குட்டி நாற்காலி, குட்டி மேஜை, அவன் உயரத்துக்குத் தகுந்தாற்போல் தணிவாக மாட்டப்பட்டிருந்த 'கோட் ஸ்டாண்ட்' — இப்படி எல்லாமே பொம்மைக் கோலமாகத் தோன்றிய அந்த அறையில் ரோஸியின் வாட்ட சாட்டமான வடிவம் பொருத்தமில்லாமல்தான் தோன்றியது.

கோட் ஸ்டாண்டின் அருகே ஒரு புகைப்படம் மாட்டப் பட்டிருந்தது. ஆல்பர்ட்டின் படம்தான்! அவன் சிறு வயதில் எடுத்ததாயிருக்க வேண்டும். ஆனால் ஆல்பர்ட்டின் விஷயத்தில் வயதுக் கணக்குக்கு அர்த்தம் ஏது? அந்தப் புகைப்படத்தில் ஆல்பர்ட் மீசையை வளைவாக முறுக்கி விட்டுக் கொண்டு எடுப்பான வெல்வெட் நிஜாரும்

கோட்டும் அணிந்து அதற்கு மேல் வரிசையாகப் பதக்கங்களையும் அணிந்து கொண்டு சர்க்கஸ் வீரனைப் போல் காட்சியளித்தான்.

''ஆல்பர்ட் முன்னால் சர்க்கஸில் இருந்தவண்டா?'' என்று வியப்புடன் கேட்டேன்.

''ஆமாம் சார். அதே சர்க்கஸ்லேதான் நானும் சேர்ந்திருந்தேன். ரெண்டு பேருக்கும் பழக்கம் ஏற்பட்டதே அங்கேதான். சர்க்கஸ் காரங்க ஜனங்களைச் சிரிக்க வைக்கிறதுக்காக அவரோட சின்ன உருவத்தைப் பயன்படுத்திக்கிட்டதைப் பார்த்து எனக்கு மனசு பொறுக்கல்லே. அவருக்கும் அது பிடிக்கல்லே. ரெண்டு பேரும் கலியாணம் பண்ணிக்கத் தீர்மானிச்சதும், சர்க்கஸ் வேலையை விட்டுவிட்டு வெளியே வந்திட்டோம். அதுக்கப்புறம்தான் அவருக்கு உங்க ஆபீஸிலே வேலை கிடைச்சது. சர்க்கஸ் வேலையைத்தான் விட்டாரே தவிர சர்க்கஸ்காரங்க சகவாசத்லெ அவர் இன்னும் மறக்கலே சார்! நம்ம ஊருக்கு எப்ப சர்க்கஸ் வந்தாலும் எனக்கு நடுக்கம்தான். தன் சகாக்களோடு குடிச்சுக் கும்மாளம் போடப் போயிடுவாரு. இப்பவும் அப்படித்தான்!''

''அப்படியா சமாசாரம்? இப்பப் புரியுது! ஒரு வாரமா ஒரு சர்க்கஸ் கம்பெனி இங்கே டேரா அடிச்சிருக்கே!''

''அதிலே அவரோட பழைய சகாக்கள் நிறையப் பேர் இருக்காங்க. அந்தக் கம்பெனி இங்கேருந்து டேரா தூக்கற வரையிலே இவருக்கு எங்கேயும் கால் தரிக்காது. கையிலே இருக்கிற காசையெல்லாம் கரைச்சிட்டு வந்திடப் போறாரு.''

''ஆல்பர்ட் காசு விஷயத்திலே கெட்டி என்று நினைத்தேனே!''

''பார்க்கிறவங்களுக்கு அப்படித்தான் தோணும் சார். ஆனால் உண்மையிலே அப்படி இல்லே. ஆபீஸ் சம்பளத்திலே கால் காசு கூட அவரு மிச்சம் வைக்கிறது கிடையாது.''

''ஆனா ஆபீஸிலே மத்தவங்க கேட்கும் போதெல்லாம் கடன் குடுத்து வாங்கறதைப் பாத்தா....''

''அதெல்லாம் நான் சேர்த்துக் குடுக்கிற பணம் சார்! பக்கத்திலே சொந்தத்திலே ஒரு பெட்டிக் கடை வச்சிருக்கேனுங்க. அது இல்லாட்டி வீட்டுச் செலவுக்கே திண்டாட்டமாப் போயிடும். அதிலேருந்துதான் அஞ்சு பத்து அவருகிட்டக் குடுத்து வச்சு ஆபீஸிலே லேவா தேவி செய்யச் சொல்லியிருக்கேன். அது இல்லேன்னா ஆபீஸிலே அவரை யாராவது மதிப்பாங்களா சார்?'' — இந்தச் சொல்லும்போதே அவள் கண்களில் நீர் கட்டி நின்றது.

''இதோ வந்திட்டேன் சார்!'' என்று கூறி உள்ளே சென்றாள்.

அப்போதுதான் ஒரு பெரிய உண்மை எனக்குப் புலப்பட்டது. ஆல்பர்ட்டின் மனத்தில் தாழ்வு மனப்பான்மை தலைதூக்கக் கூடாது என்பதற்காக அவள் எப்படியெல்லாம் பாடுபட்டு வருகிறாள்!

சில நிமிடங்கள் பொறுத்து ரோஸி ஒரு தட்டில் கேக் துண்டங்களும் ஒரு கோப்பையில் தேநீரும் டிரேயில் வைத்து எடுத்து வந்து என் எதிரே வைத்தாள். அதே சமயம் விக்டர் ஆர்ப்பாட்டமாகக் கத்திக்கொண்டே உள்ளே வந்தான்.

''அம்மா! இன்னும் எத்தனை நாளைக்குத்தான் என் கையைக் கட்டிப் போட்டிருக்கப் போறே? சரின்னு ஒரு வார்த்தை சொல்லு, அம்மா! 'டாடி'யை ஒத்தைக் கையாலே அங்கேயிருந்து தூக்கிட்டு வந்திடறேன்!''

''விக்டர்!'' என்று கத்தினாள் ரோஸி.

நான் அங்கே உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் விக்டர் சட்டென்று வாயடைத்து நின்றான். சில கணங்களில் தன் பதற்றத்தைச் சமாளித்துக் கொண்டு அவன் கூறினான்: ''ஸாரி சார்! ஆனா 'டாடி'யோட அதிகாரமும் அடக்குமுறையும் நாளுக்கு நாள் பொறுக்க முடியாமப் போயிட்டிருக்கு சார்! எனக்கு மட்டும் சுதந்திரம் இருந்தா....ஆனா அம்மா என் கையை மட்டும் கட்டிப் போடலே! எனக்கு வாய்ப்பூட்டும் போட்டு வைச்சிருக்காளே! எனக்கு இவ்வளவு பெரிய உருவம் இருந்தும் என்ன சார் பிரயோசனம்? அந்தச் சின்ன மனுசரோட அதட்டல் உருட்டலுக்குப் பணிஞ்சு பணிஞ்சு...''

''பணிஞ்சுதான் ஆகணும்! மத்தவங்க கண்ணுக்கு அவர் எவ்வளவு சின்ன மனுஷராகத் தோணினாலும் சரி, நம்ம ரெண்டு பேருக்கும் அவர்தான் எல்லாம்! அவர் தன்னம்பிக்கையோட தலை நிமிர்ந்து நின்னாத்தான் நமக்குப் பெருமை!'' — ரோஸி இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும்போதே ஆல்பர்ட்டின் பொம்மை உருவம் குடி வெறியில் தள்ளாடியவாறே உள்ளே வந்தது.

நான் அங்கே உட்கார்ந்திருந்ததை ஆல்பர்ட் கவனிக்கவில்லை. வந்ததும் வராததுமாக மனைவியின் மீதுதான் பாய்ந்தான்.

''ஏய் ரோஸி, யாரைக் கேட்டு நீ ஆபீசுக்குப் போய் என்னைப் பத்தி விசாரிச்சே? அந்தக் கபாலிப் பய சொன்னானே! என்னோட நல்ல பேரைக் கெடுக்கப் பாக்கறியா?'' என்று கத்தினான் கீச்சுக் குரலில்.

ரோஸி வாயடைத்து நின்றாள்.

ஆல்பர்ட்டின் பார்வை கோட் ஸ்டாண்டில் தொங்கிய கோட்டின் மீது விழுந்தது. உருட்டிய விழிகளை மகன் பக்கம் திருப்பினான்.



ஐ. நா. பொதுச் சபையின் 24வது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் லைபீரியாவைச் சேர்ந்த ஸ்ரீமதி ஆங்கி ப்ருக்ஸ் அவர்களுக்கு 21 குழந்தைகள்!— இரண்டு சொந்தம். 19 வளர்ப்பு.

ஆதாரம்: 'டைம்' - தகவல்: பாபு

''டேய் விக்டர்! இந்தக் கோட்டை இஸ்திரி போட்டு வைக்கச்சொன்னேனு இல்லையா? ஏன் செய்யலே? நாளைக்கு நான் ஆபீசுக்குப் போகணுமா? வேண்டாமா? வாட்ட சாட்டமா மரம் மாதிரி வளர்ந்திருக்கியே! மண்டையிலே மூளை கிளை கொஞ்சமாவது இருக்கா உனக்கு?''

விக்டர் உதட்டைக் கடித்துக் கொண்டு தலைகுனிந்து நின்றான்.

''கேக்கறேன், பதில் பேசாம நிக்கறியா? அத்தனை திமிரா உனக்கு? இடியட்!'' என்று கத்தியவாறு விக்டரை நோக்கித் தாவிய ஆல்பர்ட் தன் சிறிய கைகளால் அவன் விலாவிலும் வயிற்றிலும் மனம் கொண்ட மட்டும் மொத்தினான்.

அவ்வளவையும் தாங்கிக் கொண்டு விக்டர் அசையாது நின்றான். ஒரு கணம் அவன் விழிகளில் அடக்க முடியாத ஆத்திரத்தின் சாயல் தோன்றியது. ஆனால் ரோஸி அவனைத் தீனமாகப் பார்த்த பார்வையில் அது அப்படியே அடங்கி விட்டது.

கை களைத்துப் போய்த் தள்ளாடியவாறே தன் சாய்வு நாற்காலியில் சாய்ந்த ஆல்பர்ட் எதிரே இருந்த குட்டி ஸ்டூலில் கால்களை நீட்டிக் கொண்டான்.

''டேய், ஃபூல்! டாடி களைச்சுப் போய் வந்திருக்கிறது தெரியலே! கையையும் காலையும் பிடிச்சு விடுடா ராஸ்கல்!'', என்று அதட்டினான்.

விக்டர் ஒருமுறை தாயின் பக்கம் தீனமாகப் பார்த்தான். தாயின் விழிகள் அவனுக்கு ஆணையிட்டன. தன் பெரிய உருவத்தைக் குறுக்கிக் கொண்டு அடக்க ஒடுக்கமாகப் பணிந்து நின்ற விக்டர் அந்தப் பொம்மைத் தகப்பனின் கை கால்களைப் பிடிக்க ஆரம்பித்தான்.

நான் ரோஸிக்கு மனத்துக்குள்ளாகவே அஞ்சலி செலுத்தியவாறு மௌனமாக அங்கிருந்து நகர்ந்தேன்.

◇◇



(வீட்டிலே பாம்பு வளர்க்க ஆசையா? அப்படியானால் முதலில் இதைப் படியுங்கள் :)

பாம்புகள் மிகவும் அதிகமான வெப்பத்தையும், மிகவும் குறைவான குளிரையும் தாங்காது. அவை பிரகாசமான சூரிய ஒளியில் கண் கூசும்படியாக இருக்க விரும்புவதில்லை. சுருட்டை விரியன் போன்ற சில இனங்களைத் தவிரப் பெரும்பாலான பாம்புகள் தாங்கக்கூடிய காற்றில் ஈரப் பதனத்தைவிரும்புகின்றன. இறுதியாக, பாம்புகள் சந்தடியற்ற அமைதியான இடத்தை நாடுகின்றன.

இச்சூழ்நிலையில் பாம்புகளை வளர்க்கலாம். அதற்குக் குளிர்ந்த சுத்தமான குடி தண்ணீர் வைக்கவேண்டும். வாரத்துக்கு இருமுறை சில உயிருள்ள பிராணிகளை இரையாகக் கொடுத்தால் போதுமானது. சிறு சுண்டெலிகளையும் தவளைகளையும் அல்லது அரணைகளையும் உணவாகக் கொடுக்கலாம். மலைப் பாம்புக்கு ஒரு முயல், ஒரு புறா அல்லது ஒரு கோழியைப் பதினைந்து நாட்களுக்கொரு தரம் கொடுக்க வேண்டும். சுருட்டை விரியன் (Echis) போன்ற சிறிய பாம்புகளுக்குப் பூச்சிகளைக் கொடுத்தே வளர்க்கலாம். பல பாம்புகளை வெகு சுலபமாகவே கையாண்டு, கொத்திய இறைச்சியுடன் வைட்டமின் பி—யைக் கலந்து உணவாக ஊட்டலாம். பால் கொடுக்க வேண்டுமென்றால் அடித்த முட்டையையும் அதனுடன் சேர்த்துப் புனல் மூலம் வாய்க்குள் ஊற்றலாம். அவ்வாறு பாலூட்டும் போது புனலின் தண்டு உணவுக் குழலைக் காயப்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். செல்லப் பிராணியாக வளர்ப்புக்கேற்ற சில பாம்புகளாவன :

1. தண்ணீர்ப் பாம்புகள்; 2. குருட்டுப் பாம்பு; 3. மண்ணுணிப் பாம்பு; 4. மலைப் பாம்பு; 5. சாரைப் பாம்பு

பாம்பை வளர்க்கும் கூண்டு அல்லது கண்ணாடிச் சுவர் பெட்டி அது போடும் மலத்தை அகற்ற ஏற்றவாறு அமைந்திருக்க வேண்டும். மூன்று மாதங்களுக்கொரு முறை புழுக்களை நீக்கும் மருந்துகள் கொடுப்பது மிகவும் நல்லது. வாயில் தொற்றுநோய் ஏற்படாமலும், அரைகுறையாகத் தோல் உரியாமலும் பார்த்துக் கொள்வது ஒரு பெரிய வியாதி நிவாரணியாகும்.

பாம்புகளை வெகு சுலபமாகப் பழக்கலாம். நாகம் போன்ற பாம்புகளை அதாவது குழாயமைப்புடைய விஷப் பற்களைப் பெற்றுள்ளவைகளை, தலையை எட்டி வைத்துக் கொண்டு, வாலைப் பிடித்துத் தூக்கலாம். தலையைக் கெட்டியாகக் கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையில் பிடித்துக் கொண்டும் பாம்பை எளிதில் பிடிக்கலாம். பெரிய விஷப் பற்களுடைய கண்ணாடி விரியனையும் தலையில் கட்டை விரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் இடையில் பிடித்துத் தூக்கலாம். கொத்தாகப் பிடித்து அப்படியே சீக்கிரம் கூண்டினுள் வீசி எறிந்து விட்டு உடனே அந்தக் கூண்டை மூடிவிட வேண்டும்.

பி. ஜே. தேவரஸ் எழுதிய ''இந்தியப் பாம்புகள்'' என்ற நூலிலிருந்து. பிரசுரம்: நேஷனல் புக் டிரஸ்ட். இந்தியா, புது தில்லி. விலை ரூ. 6-50.


செயலாற்றலின்
சிகரத்தில்
இந்தியா
ரூப்பர்
உன்னதமான நவீன, கார் டயர்
இந்தியா டயர் அண்ட் ரப்பர் கம்பெனி (இந்தியா) ப்ரைவேட் லிமிடெட



பயிர்களுக்குப் பாதுகாப்பு... உங்களுக்கு நிச்சய லாபம்

இவை இரண்டையுமே அளிக்கிறது, எஸ்ஸோவின் புதிய பயிர் பாதுகாப்புத் திட்டம்.

இப்பொழுது ஒவ்வொரு பயிருக்கும்...தனிப்பட்ட பாதுகாப்புத் திட்டம்.

உங்கள் பயிர்களைப் பாழடிக்கும் பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய கவலைகளை இனி விட்டொழியுங்கள். எஸ்ஸோவின் புதிய பயிர் பாதுகாப்புத் திட்டங்களைக் கையாண்டு லாபமடையுங்கள்! எல்லா வகைப் பூச்சிகளிலிருந்து உங்கள் பயிர்களுக்கு முழுப் பாதுகாப்பும் அளிப்பதற்கென்றே இத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உங்கள் பயிர், அதாவது நெல், பருத்தி, கரும்பு, நிலக்கடலை, புகையிலை, காய்கறிகள் ஆகிய எதுவானாலும், உங்கள் பயிருக்கு நேரும் தொல்லை எதுவானாலும், அதற்கான பரிகாரம் எஸ்ஸோவிடம் உள்ளது.

நினைவிருக்கட்டும், உங்கள் பயிர்களைப் பாதுகாக்க எஸ்ஸோ எத்தனையோ பூச்சிக்கொல்லிகளை வழங்குகிறது—மலேதியான், லிண்டேன், DDT, BHC, தரைதியான், என்டிரின், ஸிரம், ஸிநேப், காப்பர் ஆக்ஸிக்ளோரைடு, எஸ்ஸோ பூசணங்கொல்லி 406 (காப்டான்), கரைக்கும் கந்தகம். இன்னும் எத்தனையோ பூச்சிக்கொல்லிகள் பல்வேறு உருவங்களில், அதாவது தூவக்கூடிய பொடியாகவும், தெளிக்கக்கூடிய திரவமாகவும் கிடைக்கின்றன.

யாவும் உங்களுக்கே...மேலும் பல நலன்களையும் அளிக்கிறது எஸ்ஸோ! தனது தொழில் நுட்ப செய்திறனையும், முதிர்ந்த அனுபவத்தையும் ஒவ்வொரு கிராமத்திற்கும் கொண்டு செல்கிறது எஸ்ஸோ.

ஒவ்வொரு பயிர் பாதுகாப்புத் திட்டம் பற்றிய விவரங்களையும் உங்கள் எஸ்ஸோ பூச்சிக்கொல்லி வியாபாரியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இன்றே!

அல்லது, எங்களுக்கு எழுதி, இலவசப் பிரசுரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். எழுத வேண்டிய முகவரி:

எஸ்ஸோ ஸ்டாண்டர்டு ஈஸ்டர்ன் இன்க்.
தபால் பெட்டி 355, பம்பாய் 1. அல்லது தபால் பெட்டி 146, கல்கத்தா 1. அல்லது தபால் பெட்டி 115, சென்னை 1 அல்லது தபால் பெட்டி 255, புது டெல்லி 1.

எஸ்ஸோ ஸ்டாண்டர்டு ஈஸ்டர்ன், இன்க்.
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடையதாக யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது.)
பம்பாய் . கல்கத்தா . சென்னை . புது டெல்லி

CME-3D-TAM

சிற்பம் என்பது ஒவ்வொரு கல்லிலும் உள்ளது. கல்லில் சில பகுதிகளைக் குடைந்து எடுத்துவிட்டால் அற்புத சிற்பம் ஏற்படுகிறது. மனித மனம் என்ற கல்லிலும் நாம் அழகிய சிற்பத்தைக் காணலாம். அந்தக் கல்லில் செதுக்குபவன் சிற்பி. மனத்தைச் செதுக்குவது கல்வி.

- கன்ஃபூஷியஸ். அனுப்பியவர்: எம்.எஸ்.வி





□ நீங்கள் ஒருமுறைகூடச் சிரிக்காமல் இருந்த நாள்தான் வீணாய்ப் போன நாள்!

- சாம்ஃபர்ட்

□ நிலத்தை உழுது பண்படுத்திய பின் விதைக்காமல் இருக்கலாமா? அறிவைப் பெறுவதோடு நில்லாதே; வாழ்விலும் அதைக் கடைப்பிடி. - இமாம் சாஅதி

□ சமாதானத்தைக் காப்பதற்கான வழி, போருக்கு ஆயத்தமா யிருப்பதுதான்.

- வாஷிங்டன்

தொகுப்பு: மூணர் பி. எம். ரஹீம்

"எங்கள் வீட்டில் 'ஸ்டீரியோ போனிக்' வசதி உண்டு."


"எப்படி?"



"இடதுபுறமிருந்து மனைவி சப்தம் போடுவாள். வலதுபுறமிருந்து மாமியார் சப்தம் போடுவாள்."

"பேஜண்ட்" - பாபு.

மேற்கு ஜெர்மனியில் கார் ஓட்ட லைசென்ஸ் பெற விரும்பினால், அதற்கு முன்னதாக முதலுதவிச் சிகிச்சை அளிக்கப் பயின்று நற்சான்றிதழ் பெற வேண்டும். கார் ஓட்ட விரும்பும் நபர் முதலுதவிச் சிகிச்சைப் பயிற்சியின்போது கற்றுக் கொள்ளும் சில விஷயங்களாவன:



1. ரத்தப் பெருக்கைத் தடுப்பது எப்படி?
2. அதிர்ச்சி அடைந்தவருக்கு எவ்வாறு வைத்தியம் செய்வது?
3. செயற்கை முறையில் சுவாசிக்க வைக்கும் பயிற்சி.
4. நெருப்புச் சுட்ட காயங்களுக்குச் சிகிச்சை.

- ஜெர்மன் இன்டர்நேஷனல்.

அடேயப்பா!

புடவைக் கடையில் நுழைந்து எல்லாப் புடவைகளையும் எடுத்துப் போட்டுக் கடை பரப்பி, கடைசியாக ஒரு புடவையை எடுத்தாள் மனைவி. இதைக் கண்ட கணவன் 'கடன் பட்டார் நெஞ்சம் போல்' அந்தப் புடவையின் விலையைக் கேட்டார் கடைக்



காரரிடம். கடைக்காரர் விலையைச் சொன்னதும், "அடேயப்பா!" என்று பெருமூச்சு விட்டார்.

பிறகு மற்றொரு புடவையைச் சுட்டிக் காட்டி, "இது என்ன விலை?" என்று கேட்கக் கடைக்காரர் நிதானமாகச் சொன்னார்:

"'இரண்டு அடேயப்பா!' "

- வி. சம்பத்குமார்

மார்க்ட்வைன் மொழிகள்

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் ஒரே ஒருமுறை அதிர்ஷ்டம் வந்து அவன் கதவைத் தட்டுகிறது. ஆனால் அந்தச் சமயத்தில் அவன் அடுத்த வீட்டில் இருப்பதால், கதவு தட்டப்படும் சப்தம் அவனுக்குக் கேட்பதில்லை!

நம் நாட்டில் அதி அருமையான மூன்று விஷயங்களை நாம் வைத்திருக்கிறோம். அவை: 1. பேச்சுச் சுதந்திரம், 2. மனச் சாட்சிச் சுதந்திரம், 3. இவ்விரண்டில் எதையும் நடைமுறையில் பயிலாத புத்திசாலித்தனம்!

- மார்க் ட்வைன்

- வி. எஸ்.

"மூன்றாவது உலகப்போர் ஒன்று வந்தால் அது எவ்வளவு நாள் நடக்கும்?"

"நாளா? இருபது நிமிடம், இருபது வினாடிக்குள் முடிந்து விடும்."

தகவல்: 'முத்து'

ஆதாரம்: 'காரவான்'




இரவிலே கடுமையாகும் இருமலை நிறுத்த அதிகச் சக்தி வாய்ந்த மருந்து!



இருமலைக் கட்டுப்படுத்தும் கேந்திரம் சிலிர்க்கிறது.



ஃபார்முலா 44 இருமலைக் கட்டுப்படுத்தும் கேந்திரத்திற்கு இதமளிக்கிறது.



இருமல் தொடங்கும் கட்டுப்பாட்டுக் கேந்திரத்திலேயே உடனடியாகவும், அதிகச் சக்தியுடனும் செயல் புரிகிறது விக்ஸ் ஃபார்முலா 44. எனவே உங்கள் இருமல் நின்று விடுகிறது.

அதேசமயம், இந்த நவீன இருமல் மிக்சரில் சேர்ந்துள்ள மருந்துப்பொருள்கள் உள்ளே ஊடுருவி, சுவாசக் குழாய்களின் அடைப்பை நீக்குகின்றன. வலிமிகுந்த மார்புச் சளியை அகற்றி தொண்டை எரிச்சலுக்கும் இதமளிக்கின்றன.

அதிகச் சக்தி வாய்ந்த விக்ஸ் ஃபார்முலா 44 அருந்தி இரவில் கடுமையாகும் இருமலிலிருந்து விரைவிலே நிச்சயமான நிவாரணம் பெறுங்கள். அயர்ந்த உறக்கமும் உங்களுக்குக் கிடைக்கும்.

விக்ஸ் பார்முலா 44 காஃப் மிக்சர்



ரயில்வே ஸ்டேஷனில் கூட்டம் அதிகமாக இருந்தது. சோமு அவசரமாக நெருக்கியடித்துக் கொண்டு உள்ளே போக முயன்றான். டிக்கெட் பரிசோதகர், "எங்கே ஐயா, டிக்கெட்?" என்று கேட்டார்.

"டிக்கெட்டா?" என்று பதிலுக்குக் கேட்டுவிட்டுச் சோமு அந்த டிக்கெட் பரிசோதகரை ஒரு தடவை தலை முதல் அவர் காலில் அணிந்திருந்த கான்பூர் பூட்ஸ் வரை நிதானமாகப் பார்த்தான். வீரம் பொருந்திய முக பாவத்துடன் சோமு அப்படி ஒரு கேள்வி கேட்டபின் அவரால் அதற்குச் சரியான பதில் சொல்ல முடியவில்லை. சோமு அதுதான் சாக்கென்று வெரு அலட்சியமாகப் பிளாட்பாரத்துக்குள் நுழையப் போனான். ஆனால் டிக்கெட் பரிசோதகர் அதற்குள் சமாளித்துக் கொண்டு விட்டார். "இங்கே வாய்யா! என்னமோ உங்க விட்டுக்குள்ளே போகிற மாதிரி போறயே? எந்த ஊருக்குப் போறே? டிக்கெட் எங்கே?" என்று கேட்டார்.

"நான் எதுக்காக ஐயா ஊருக்குப் போகனும்? ஊருக்குப் போறது என் இஷ்டமா? உங்க இஷ்டமா?" என்று சோமு திருப்பிக் கேட்டான்.

"சரி, பின்னே பிளாட்பாரம் டிக்கெட்டாவது வாங்கியிருக்காயா?"

"நீங்க ஆள் புதுசு போலிருக்கு! வேதாசலம் இருந்தாரே அவரு எங்கே? அவரைக் கேட்டாத் தெரியும், என்னைப் பத்தி."

"அவரை ஏன் ஐயா, கேட்கனும்? அவர் மாத்திப் போயிட்டாரு. அவருக்குப் பதில் நான் வந்திருக்கிறேன்."

"நான் பிளாட்பாரம் டிக்கெட் வாங்குகிற பழக்கமில்லே. இந்த ஸ்டேஷன்னு எனக்கு ஊடு மாதிரி. எங்க வேணுமானாலும் போவேன். எங்க வேணுமானாலும் வருவேன். நீ யாரையா கேட்கிறதற்கு?"

"அந்தக் கதையெல்லாம் என்கிட்டே வேண்டாம். டிக்கெட் இல்லாமெ உள்ளே போகக் கூடாது. வா, இப்படி வெளியே! பிரயாணிகளுக்கு இடைஞ்சல் பண்ணுதே!" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார், பரிசோதகர்.

சோமுவுக்கு அவமானமாகி விட்டது. டக்கென்று வெளியே வந்தான். டிக்கெட் கொடுக்குமிடத்துக்குப் போனான். மறுபடியும் திரும்பி வந்தான். "இந்தா ஐயா, டிக்கெட்! ஒரு டிக்கெட்டுக்கு இரண்டு டிக்கெட் வாங்கி வந்திருக்கிறேன். போதுமா?" என்று கேட்டு இரண்டு டிக்கெட்டுக்களைக் காட்டினான். டிக்கெட் பரிசோதகர், "சரி, சரி! போங்கள்:" என்று சொல்லி விட்டு அலட்சியமாக வேறு பக்கம் திரும்பிக் கொண்டார். சோமு பிளாட்பாரத்துக்குள் நுழைந்து விட்டான்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஒரு ரயில் வந்தது. இறங்கி வந்த ஜனங்கள் வரிசையாக டிக்கெட்டுக்களைக் கொடுத்துக் கொண்டே வெளியில் போய்க் கொண்டிருந்தனர். கூட்டத்துக்கு நடுவில் சோமுவும் வந்தான். டிக்கெட் பரிசோதகரை வெற்றிகரமாகத் தலைநிமிர்ந்து பார்த்தான். பக்கத்தில் இருந்த போலீஸ்காரரைப் பார்த்து, "இவர்தான் நான் சொன்ன ஆசாமி!" என்றார், டிக்கட் பரிசோதகர்.

சோமுவின் முகத்தில் கொஞ்ச நேரத்துக்கு முன்னிருந்த வீரக் களை சொல்லிக் கொள்ளாமல் மறைந்து விட்டது. போலீஸ்காரர் சோமுவின் கைகளைப் பிடித்துக் கொண்டு வெளியே வந்தார். மிரள மிரள விழித்து, "என்னை ஏன் பிடிக்கிறீங்க?" என்று கேட்டான் சோமு.

"அதுவா? அப்புறம் சொல்கிறேன். முதல்லே பையிலே கையை விட்டு எல்லாத்தையும் வெளியிலே எடு!" என்றார் போலீஸ்காரர்.

"பையிலே ஒண்ணுமில்லையே!"

"ஒண்ணுமில்லையா? ஓசிப் பயணமா?"

"மடியிலே கனமிருந்தால்லே பயப்படனும், சோமு! இருக்கிற இரண்டு பிளாட்பாரம் டிக்கெட்டையும் எடுத்துக் காட்டுங்களேன்!" என்றார் கூட வந்தவர்.

"நானும் அதைத்தானே எடுங்கறேன். எனக்கு வேண்டியதும் அதுதானே! டிக்கெட் பரிசோதகர் சொன்னது சரியாய்த்தான் போச்சு. தினம் இரண்டு பிளாட்பாரம் டிக்கெட் வாங்கிக்கிட்டு ஸ்டேஷனுக்குள்ளே நுழைந்து, டிக்கெட் இல்லாமெ தினசரி வண்டியிலே வருகிற ஓர் ஆசாமியை அழைச்சுக்கிட்டு நீ வெளியிலே வருகிறயாமே! இந்த மாதிரி மாறுதல் ரொம்ப நாளாகவே நடக்குதாமே! அவர்தான் இதைக் கவனிச்சு வைச்சு உன்னை இன்னிக்குப் பிடிக்கச் சொன்னாரு! இன்னிக்கு டிக்கெட் பரிசோதகரா நிற்பவர் ஃப்ளையிங் ஸ்க்வார்டு தெரியுமில்லே!"

சோமு டிக்கெட் பரிசோதகரைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டே போலீஸ்காரருடன் நடந்தான்.

"நீ ஏன் ஐயா, நிக்கிறே? வா, ஐயா; நீயும் பின்னோடு ஸ்டேஷனுக்கு!" என்று போலீஸ்காரர் ஓர் அதட்டுப் போடவே சோமுவோடு கூட வந்தவரும் தேள் கொட்டிய திருடரானார்.



ஹிமாலயா புக்கேயின் புதுக் கோலங்கள்...
உங்களுக்கே சொந்தம்
ஐவகை நறுமணங்களின் ஆனந்தம்!
SANDALWOOD
HIMALAYA
BOUQUET
TALC
SPRING
HIMALAYA
BOUQUET
TALC
ROSE
HIMALAYA
BOUQUET
TALC
JASMINE
TALC
CARNATION
HIMALAYA
BOUQUET
TALC

அதற்கும் ஒரு லைசென்ஸ்!

'புஷ்பா'

மேற்குப் பாகிஸ்தானில் பிச்சை எடுப்பதற்கு 'லைசென்ஸ்' பெற்றாக வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்களாம். இதேமாதிரி நம் நாட்டிலும் ஒரு 'பிச்சை லைசென்ஸ்' முறையை அமுலுக்குக் கொண்டு வந்தோமானால் என்ன நடக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்த்ததன் விளைவு இது!



காட்சி – 1

(லோக் சபாவில் ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார்.)

உறுப்பினர்: பிச்சைக்காரர்களுக்கு லைசென்ஸ் வழங்கும் திட்டம் எந்த அளவில் இருக்கிறது என்று சமுதாய நல அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதில் கூறுவாரா?

அமைச்சர்: இந்தத் திட்டம் அரசாங்கத்தின் தீவிரப் பரிசிலனையில் இருந்து வருகிறது. எப்படியும் இதை நிறைவேற்றியே தீருவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. லைசென்ஸ் முறையை அமுல் செய்து ஒழுங்குபடுத்துவதற்கு முன்னால் இப்போது இருக்கும் பிச்சைக்காரர்கள் பற்றிய விரிவான புள்ளி விவரங்களைத் தயாரிப்பது அவசியம் என்று சர்க்கார் கருதியபடியால், அந்தப் பணி இப்போது மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.




உறுப்பினர்: அதாவது பிச்சைக்காரர்கள் ஸென்ஸஸ்?

அமைச்சர்: ஆமாம். ராஜ்யவாரியாக அந்த ஸென்ஸஸ் தற்சமயம் எடுக்கப்பட்டு வருகிறது.

உறுப்பினர்: மேற்படி சென்ஸஸ் பற்றிய இன்னும் சில தகவல்களைக் கொடுக்க முடியுமா?

அமைச்சர்: பேஷாக!...பிச்சைக்காரர்கள் சென்ஸஸ் ராஜ்யவாரியாக எடுக்கப்பட்டாலும் மொழிவாரியாக— அதாவது அவர்கள் பிச்சை கேட்கும் மொழிப்படி— பிரித்தும் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் இந்தி பேசுகிற பிச்சைக்காரர்களே அதிகமாக இருக்கிறார்கள். எனவே....



உறுப்பினர்: இனி பிச்சை எடுப்பதுகூட இந்தி மொழியில்தான் இருந்தாக வேண்டும் என்று சட்டம் போடப் போகிறீர்களாக்கும்? இந்தி மொழி தெரிந்தவர்களுக்கு லைசென்ஸ் வழங்குவதில் சலுகையும் முதன்மையும் வழங்கப்படும் என்று சொல்லுங்கள்!

அமைச்சர்: கனம் உறுப்பினர் பதற்றப்படக்கூடாது. பெரும்பான்மையின்படி நடப்பதுதானே ஜனநாயகப் பண்பு? அதைக் காப்பாற்றுவதற்காகவே இந்தியைப் 'பிச்சை மொழி' ஆக்கப் போகிறோம்.

உறுப்பினர்களில் ஒரு பகுதி: இது அநீதி, அக்கிரமம்! இதை நாங்கள் ஆதரிக்கவே மாட்டோம்.

சபாநாயகர்: அமைதி! அமைதி!

அமைச்சர்: பொறுங்கள், பொறுங்கள். நான் சொல்ல வந்ததைச் சொல்லி முடித்து விடுகிறேன். இந்தியுடன்கூட இதர பதினான்கு மொழிகளையும்கூடப் பிச்சையெடுக்கப் பயன்படுத்தலாம். ஆனால் 1985க்குள் முற்றிலும் இந்திக்கே மாறியாக வேண்டும்!

(சபையில் ஒரு பகுதியினர் ஆட்சேபக் குரல் எழுப்பிய வண்ணம் எழுந்து வெளி நடப்புச் செய்கின்றனர்.)



காட்சி – 2

(ஒரு கட்டடத்தின் முன்பு பெரியதொரு 'க்யூ' வரிசை நிற்கிறது. அத்தனை பேரும் பிச்சைக்காரர்கள். ஒரு பிச்சைக்காரர் உள்ளே நுழைந்து அதிகாரியின் முன் போய் நிற்கிறார்.)

அதிகாரி: உன் பெயர் என்னப்பா?

பிச்சைக்காரர்: தொரைங்க!

அதிகாரி: என்ன தொரை!

பிச்சை: தருமதொரை!

அதிகாரி: தொழில்?



'' மாப்பிள்ளே ! உங்களுக்குச் சர்க்கரை வியாதி என்று சொன்ன டாக்டருக்குப் பாராட்டுரை அனுப்பனும். விஸாசம் சொல்றீங்களா ?''

பிச்சை: உங்களுக்குத் தெரியாதுங்களா ? ('க்யூ'வில் நிற்கும் இதர பிச்சைக்காரர்கள் இதைக் கேட்டுக் 'கொல்'லென்று சிரிக்கிருர்கள்.)

அதிகாரி: உஸ் ! சைலன்ஸ்! அதில்லேப்பா, எப்படிப் பிச்சை எடுக்கிருய் என்று கேட்டேன்.

பிச்சை: பஸ் ஸ்டாண்டிலே நொண்டி வேசம் போடுவேனுங்க.... ரயில்லே பாட்டுப் பாடிக்கிட்டுப் போவேன்.... புரட்டாசி மாசத்திலே கையிலே செம்பை எடுத்துக்கிட்டுக் 'கோயிந்தா' போடறதும் உண்டு!

அதிகாரி: அதாவது, ஒரு நிலேயான வேஷத்தில் பிச்சை எடுப்பதில்லே என்கிருய்?

பிச்சை : ஆமாமுங்க....

அதிகாரி : அப்படியாளுல் இந்தப் பச்சை நிற மனுவைப் பூர்த்தி செய்து கொடு !

(பத்திரிகை நிருபர் உள்ளே வருகிருர்.)

நிருபர்: ஒவ்வொரு ரகப் பிச்சைக்காரர்களுக்கும் ஒவ்வொரு தனி ஃபாரம் என்று சொல்லுங்கள் !

அதிகாரி: ஆமாம்... பச்சை நிற மனுவை எதற்குப் பயன்படுத்துவது என்று தெரிந்து கொண்டிருப்பீர்கள்.... அங்கஹீனர்களாக நடிப்பவர்களுக்குச் சிவப்பு ஃபாரம்.... குடுகுடுப்பைக்காரன், பெருமான்மாட்டுக்காரர், கழைக்கூத்தாடி — இப்படி ஒரு தொழிலே வைத்துப் பிச்சை எடுப்பவர்களுக்கு வெள்ளை நிற மனு. இடம் விட்டு இடம் மாருமல் பஸ் — ஸ்டாண்ட், • ரயில்வே ஸ்டேஷன் இவற்றில் நிரந்தரமாகப் பிச்சை எடுப்பவர்களுக்கு நீல நிற மனு....

நிருபர்: இந்த ஃபாரங்களைப் பூர்த்தி செய்து என்ன பண்ண வேண்டும் ?

அதிகாரி: அரசாங்க டிரெஷரி அல்லது ரிசர்வ் பாங்கில் பத்து ரூபாய் இருபத்தேழு பைசா கட்டி 'சலான்' வாங்கி, அதை மனுவுடன் இணைத்துப் ' பிச்சை லேசென்ஸ் போர்டு'க்கு அனுப்ப வேண்டும்.

நிருபர்: உடனே லேசென்ஸ் கொடுத்து விடுவீர்களா ?

அதிகாரி: அதெப்படி ? ஒரு கமிட்டி இந்த மனுக்களையெல்லாம் பரிசீலனை செய்யும். அப்புறம் ஊர் ஊராகப் போய் மனுதாரர்களைப் பேட்டி கண்டு, அதன் பிறகே லேசென்ஸ் கொடுப்பதற்குச் சிபாரிசு செய்யும்.

நிருபர்: லேசென்ஸ் இல்லாமல் பிச்சை எடுப்பது என்பது....

அதிகாரி: 'பிச்சைக்காரர்கள் கண்ட்ரோல் அண்ட் ரெகுலேஷன்ஸ் ஆக்ட், 1969 செக்ஷன் 318 உட்பிரிவு (பி)படி அது ஒரு குற்றம். அதற்கு அதிகபட்சம் ஐம்பது ரூபாய் அபராதமோ, ஆறு மாதக் கடுங்காவலோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம்.....

காட்சி – 3

(பாராளு மன்றத்தில்.)

ஓர் உறுப்பினர் : 'பிச்சைக்காரர்கள் லேசென்ஸ் கமிட்டி' நியமிக்கப்பட்டுப் பதினெட்டு மாதங்களாகின்றன. இது வரையில் அது சாதித்தது என்ன என்பதைச் சம்பந்தப்பட்ட அமைச்சர் விளக்குவாரா ?

அமைச்சர் : லேசென்ஸுக்கென வந்து குவிந்த மனுக்களை மேற்படி கமிட்டி தீவிரமாகப் பரிசீலனை செய்தது. லேசென்ஸ் வழங்குவதற்கு முன்பு மனுதாரர்களின் தகுதியை நிர்ணயிக்க நாட்டின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்தது...

உறுப்பினர் : அதற்கெல்லாம் செலவு எவ்வளவு ஆயிற்று ?

அமைச்சர்: முப்பத்தேழு லட்சத்து இருபத்தெட்டாயிரத்து நானூற்று எட்டு ரூபாய் நாற்பத்தேழு பைசா....

உறுப்பினர்: எத்தனே பேருக்கு இதுவரை லேசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது என்று ராஜ்யவாரியாக — தகவல் தர முடியுமா ?

அமைச்சர்: உத்தரப் பிரதேசம் 18,426, பீகார் 24,252, பஞ்சாப் 13,260 தமிழ்நாடு 4,833.....

உறுப்பினர் : தமிழகத்தில் நிறையப் பேருக்கு லேசென்ஸ் வழங்க வாய்ப்பிருந்தும் மிகக் குறைந்த அளவிலேயே லேசென்ஸ் வழங்கப்பட்டிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது? தமிழகத்தின் நியாயமான கோரிக்கை இதிலும் புறக்கணிக்கப்படுகிறது என்பதைத் தானே ?

அமைச்சர்: உறுப்பினர் ஆத்திரப்படக்கூடாது. லேசென்ஸ்கள் தமிழ்நாட்டில் குறைவாக வழங்கப்பட்டிருந்தால் அதற்கு என்ன அர்த்தம் ? அங்கு சுபிட்சம் நிலவுகிறது என்றுதானே?

உறுப்பினர் (ஆவேசத்துடன்) : அமைச்சர் இப்படிப் பேசுவது வெறும் கண் துடைப்பு வேலே. லேசென்ஸ் குழு என்பதெல்லாமே சுத்த மோசடி.... அந்தக் குழு பாரபட்ச மற்றுச் செயல்படவில்லே என்று அடித்துக் கூறுகிறேன்.... அதை என்னுல் நிரூபிக்க முடியும்....

சபாநாயகர் : எதை வைத்துக் கொண்டு இப்படிச் சொல்கிறீர்கள் ?

(உறுப்பினர் தம் கைப் பையிலிருந்து ஒரு கற்றைக் காகிதங்களை எடுத்துக் காட்டுகிருர்.)

சென்னை மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

271, அங்கப்ப நாயக் தெரு, சென்னை -1

தந்தி விலாசம்: ''அர்பாங்க்'' — தொலை பேசி எண்: 22766, 22767, 24589
தபால் பெட்டி எண்: 226

எங்கள் வங்கியில் நீங்கள் போடும் டெபாசிட்டுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும் விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

சேவிங்ஸ் டிபாசிட்: ரூ. 1,000ம் அதற்கு மேலும் (வருடத்திற்கு)

15 நாட்கள் முதல்	45 நாட்கள் வரை	1.25%
46 நாட்கள் முதல்	90 நாட்கள் வரை	2.50%

பிக்சட் டிபாசிட்: ரூ. 1,00ம் அதற்கு மேலும்

91 நாட்களும்	அதற்கு மேலும்	6 மாதங்களுக்குள்ளாக	4.50%
6 மாதங்களும்	,,	12 ,,	5.00%
12 மாதங்களும்	,,	2 வருடங்களுக்குள்ளாக	5.75%
2 வருடங்களும்	,,	3 ,,	6.00%
3 வருடங்களும்	,,	5 ,,	6.25%
5 வருடங்களும் அதற்கு மேலும்			6.75%

கரெண்ட் அகௌண்ட்: (ரூ. 25000 வரை தினசரி நிலுவையின்பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது.) ½%

சேவிங்ஸ் பாங்க் அகௌண்ட்: (5 தேதி முதல் மாதம் முடிய குறைந்த பட்ச நிலுவையின்பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது.) 3%

ரெக்கரிங் டிபாசிட்: தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்:

மாதத் தவணை	12	24	36	48	60	72	84
ரூ. 5ம் அதன் மடங்குகளும்	62	128	198.50	273	355	442	535

இதர விபரங்களை வங்கியின் கீழ்க்கண்ட அலுவலகங்களிலிருந்தும் பெறலாம்

கிளை அலுவலகம் பெயர்	முகவரி	தொலை பேசி எண்
மயிலாப்பூர்:	32-A, லஸ் சர்ச் ரோடு, சென்னை-4	71262
எழும்பூர்:	68, எழும்பூர் ஹைரோடு, சென்னை-8	86510
திருவல்லிக்கேணி:	111, பெரிய தெரு, சென்னை-5	84692
தியாகராயநகர்:	19, பாண்டி பசார், சென்னை-17	442852
காந்தி நகர்:	78, இரண்டாவது மெயின் ரோடு, சென்னை-20	71132
ஷெனாய் நகர்:	8/1, செங்குந்த முதலித் தெரு, சென்னை-30	64834
கெல்லீஸ்:	2, மாதவாக்கம் டாங்க் ரோடு, சென்னை-10	64105
மயிலாப்பூர் டாங்க்:	10, தெற்கு மாட வீதி, சென்னை-4	73158
சாந்தோம்:	79, சாந்தோம் ஹைரோடு, சென்னை-28	74300
கிரீன்வேஸ் ரோடு:	14, கேசவபெருமாள்புரம், சென்னை-28	74215
மவுண்ட் ரோடு:	109, டி.-ஈ. மவுண்ட் ரோடு, சென்னை-18 (காமதேனு கூட்டுறவு சிறப்பு அங்காடி)	440292
சாஸ்திரி நகர்:	பி. 10, சாஸ்திரி நகர், சென்னை-20	76418

ஆர். கனகசபை, எம்.எல்.ஏ.
தலைவர்

டி. வர்த்தமானன்
காரியதரிசி

உறுப்பினர்: இதோ இருக்கிறது ஆதாரம். இந்த லைசென்ஸ்தாரர்கள் அத்தனை பேரும் ஒவ்வொரு அமைச்சரின் வீட்டு வேலையாட்களுக்கும் வேண்டியவர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே இவர்களுக்கெல்லாம் லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஓரிரு அமைச்சர்கள் கொடுத்த சிபாரிசுக் கடிதங்களின் நகல்களும் என்னிடம் இருக்கின்றன. நான் சொல்வது பொய் என்று நிரூபிக்கப்பட்டால் என் அங்கத்தினர் பதவியை ராஜிநாமாச் செய்யத் தயாராக இருக்கிறேன்!....

சபாநாயகர்: அங்கத்தினர் கூற்றில் உண்மை இருக்கும் போலத் தோன்றுகிறது. அவருடைய குற்றச்சாட்டுகளைப் பரிசீலிக்க பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் மூவர் கொண்ட ஒரு குழுவை இப்போதே நியமிக்கிறேன்.

காட்சி – 4

(நீதிமன்றம். அரசாங்கத்தரப்பு வக்கீல் வாதாடிக் கொண்டிருக்கிறார்.)

அ. வக்கீல்: கனம் கோர்ட்டார் அவர்களே! இதோ கூண்டில் நிற்கிறாரே முனிரத்தினம், இவர் மீது லைசென்ஸ் துஷ்பிரயோகக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.....

நீதிபதி: என்ன லைசென்ஸ்? இண்டஸ்ட்ரியல் லைசென்ஸா?

அ. வக்கீல்: இல்லை, மை லார்ட்! பிச்சை லைசென்ஸ். இவர் சென்ற மார்ச் மாதம் 18ம் தேதி மத்திய அரசின் பிச்சை லைசென்ஸ் குழுவுக்கு விண்ணப்பித்துக் கொண்டு லைசென்ஸ் ஒன்று பெற்றார். அதைத் தாம் உபயோகப்படுத்தாமல் மறு மாதமே கன்னியப்பன் என்கிறவருக்குக் கொடுத்து, அவர் உபயோகப்படுத்தும்படி செய்தார். இது, சம்பந்தப்பட்ட சட்டத்தின் 180வது பிரிவின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

நீதிபதி (குற்றவாளியிடம்): இவர் சொல்வதெல்லாம் உண்மைதானா?

குற்றவாளி: உண்மைதாங்க.... அந்தக் கன்னியப்பன் வேறு யாருமில்லீங்க, என் சொந்த மருமகப்பிள்ளை. போன மாசம் தான் கல்யாணமாச்சு. உடனே அவனுக்கு வேலை போயிட்டதனாலே, நான் என் லைசென்ஸைக் கொடுத்து, அதை வைச்சுப் பிழைக்கச் சொன்னேனுங்க....

அ. வக்கீல்: எது எப்படியிருந்தாலும் குற்றம் குற்றமே! அதற்குத் தகுந்த தண்டனையை அடைந்தே ஆக வேண்டும்!

நீதிபதி: குற்றவாளியே குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டதாலும், குற்றவாளியின் பரிதாபகரமான நிலையை உத்தேசித்தும் லைசென்ஸை ஆறு மாத காலத்துக்குப் பறிமுதல் செய்ய மட்டும் உத்தரவிடுகிறேன்.

காட்சி – 5

பிச்சைக்காரர்களில் 'செல்வாக்கு' உள்ளவர்களில் சிலர் வெவ்வேறு பெயர்களில் ஊருக்கு ஊர் லைசென்ஸ் வாங்கி வைத்துக் கொண்டு



மாப்பிள்ளை: ஸ்கூட்டர் வாங்கிக் கொடுத்தால் மட்டும் போதுமா? பெட்ரோல் செலவுக்கு மாதாமாதம் நூறு ரூபாய் அனுப்பி வையுங்கள்!

'செயின் லைசென்ஸ்தாரர்' களாக இருப்பதும், தங்களுக்குக் கீழே பலரை வைத்துப் பிச்சையெடுக்கச் சொல்லிப் பிழைப்பதும், 'கொள்ளை லாபம்' அடிப்பதும் அரசாங்கத்துக்குத் தெரியவரவே ஏகபோகப் பிச்சையெடுப்பைத் தடை செய்ய ஒரு விசேஷக் குழுவும், 'உழைக்கும் பிச்சைக்காரர்'களுக்கான ஊதிய போர்டு ஒன்றும் நியமிக்கப்படுகின்றன. ஊதிய போர்டின் சிபாரிசுகளைப் பத்திரிகைகளில் பார்த்து விட்டு ஓர் 'உழைக்கும் பிச்சைக்காரர்' சொல்கிறார்:

பிச்சைக்காரர்: பரவாயில்லையே! மெட்ராஸ் சிட்டியிலே டியர்னெஸ் அலவன்ஸ் மாசத்துக்கு முப்பது ரூபாய் கொடுக்கணும்னு போட்டிருக்காங்களே!''

இன்னொரு 'உ.பி.': நீ ஒண்ணு! அத்தனையும் கோல்மால்! அறுபது ரூபாய் தரணும்னு முதல்லே சிபாரிசு பண்ணினாங்களாம். சில பிச்சைப் பண மூட்டைங்க குறுக்கே புகுந்து அநியாயமா கெடுத்துட்டதுங்க!....

காட்சி – 6

(பிரதமர், நீதிமந்திரி சகிதம் வெளிநாடு போவதற்கான ஆயத்தங்களில் மூழ்கியிருக்கிறார். அப்போது 'தபால்' என்று ஒரு குரல் கேட்கிறது. பிரதமரின் செயலாளர் தபால்காரர் கொடுத்து விட்டுச் செல்லும் ஓர் உறையைப் பிரதமரிடம் கொண்டு வந்து தருகிறார். பிரதமர் அதைப் பிரித்து, உள்ளே இருக்கும் ஒரு காகிதத்தைப் பார்த்து விட்டு, நீதி மந்திரியிடம் கொடுக்கிறார்.)

நீதிமந்திரி: என்ன இது?

பிரதமர்: லைசென்ஸ்!

நீதிமந்திரி: எதற்கு இது?

பிரதமர்: ஓடேந்திப் பிச்சை கேட்பதற்காக அயல்நாடுகளுக்கு நாம் அடிக்கடி போகிறோம் அல்லவா? அதற்காக ஐ.நா.விலிருந்து நமக்கு லைசென்ஸ் அனுப்பியிருக்கிறார்கள்! பத்திரமாக வையுங்கள்!

கோயில் கோபுரத்தை நான் அண்ணாந்து பார்த்தபோது, அது எத்தனை அழகாய் இருக்கிறது என்று பொதுவாக எண்ணினாலும் —

எனது குழந்தை—மூன்று வயதுக் கண்ணன்—என்மேல் சவாரி செய்தபடி வருபவன் அந்தக் கோபுரத்தைப் பார்க்கும்போது, ''அம்மாடி! எத்தனை பொம்மை! ... ஒண்ணு, ரெண்டு, மூணு.... பத்து!'' என்று எண்ணிக்கொண்டு வந்தவன், அந்தப் 'பத்து' என்ற வார்த்தையில் மிருந்த அழுத்தம் கொடுத்தான். அதாவது அதற்கு மேல் இலக்கம் சொல்லக் குழந்தைக்குத் தெரியா விட்டாலும், அந்த அழுத்தத்தால் கோபுரத்தில் உள்ள ஆயிரமாயிரம் சிற்பங்களையும் அவற்றின் 'அழகு'களையும் குழந்தை அளந்து விட்டான்.

நமக்கும் குழந்தைக்கும் இதுதான் வித்தியாசம். வார்த்தையால் வர்ணிக்க முடியவில்லையே என்று நாம் திண்டாடுகிற உணர்வைக் குழந்தை தன் மழலையால் மிகச் சுலபமாகச் சொல்லி விடுகிறது.

கண்ணனுடன் கோபுர வாயிலில் உட்கார்ந்திருந்தேன். கையில் பிரித்திருந்த பிஸ்கட் பொட்டலத்திலிருந்து ஒன்றை எடுத்து அவனிடம் கொடுத்தேன்.

கண்ணன் அதை வாங்கிக் கொண்டே, ''ஊருக்கு எப்போப்பா புறப்படுவோம்?'' என்று கேட்டான்.

''இன்னிக்குச் சாயந்திரம் ஆபீசர் வந்து விடுவார், கண்ணு. அவரைப் பார்த்துவிட்டு உடனே புறப்பட்டு விடுவோம்'' என்றேன்.

புரிந்ததோ புரியவில்லையோ கண்ணன் இருப்தி அடைந்தவனாக அழகாகத் தலையை ஆட்டினான்.

கண்ணனை அவன் அம்மாவிடமிருந்து நான் பிரித்து மூன்று நாட்கள் ஆகின்றன. மூன்று வருஷங்களாகக் குழந்தை தாயைப் பிரிந்ததில்லை.

மதுரைக்கு எனது உயர் அலுவலக அதிகாரி 'காம்ப்'பில் வருகிறார் என்று கேள்விப்பட்டதும், அவரை நேரில் சந்தித்து என் 'குறை'யைச் சொல்லி வேலையில் பதவி உயர்வு கோர வேண்டும் என்ற விருப்பத்தில்—

மதுரைக்குப் புறப்பட்டவன் கடைசி நிமிஷத்தில் 'நானும் வருவேன்' என்று கண்ணன் ஒரேயடியாக முரண்டு பிடித்தான்.

''அழைத்துக் கொண்டுதான் போங்களேன். இரண்டு நாட்கள்தானே? அப்பாவும் பிள்ளையும் வீட்டில் இறைவதைக் கொஞ்சம் வெளியிலும்தான் இறைத்துவிட்டு வாருங்களேன்'' என்றாள் சரோஜாவும்.

கண்ணனுக்கு ஒரே குஷி. புறப்பட்டுவிட்டான். என்னோடு இப்போது மதுரைக்கு வந்து இரண்டு நாட்கள் முடிந்து இன்று மூன்றாவது நாள். ஆபீசர் இன்று மாலைதான் வருவதாக இருப்பதாகவும் அறிந்தேன்.

நியாயப்படி எனக்குக் கிடைக்கவேண்டிய பிராஞ்சு மானேஜர் பதவி அந்த முறையும் என்னிடமிருந்து நழுவி வேறொருவர் கைக்குப் போய்விடாமலிருக்கவே இந்தப் படையெடுப்பை மேற்கொண்டிருக்கிறேன் நான். எல்லாப் பிராஞ்சுகளுக்கும் உயர் அலுவலரும் ஜெனரல் மானேஜருமான சுந்தரம் சிப்பந்திகளின் குறைகளை நேரே கேட்டறிந்து தக்க தீர்ப்பு வழங்குவதில் தீவிரமாயிருந்தவர் என்பது எங்களுக்கெல்லாம் பிரசித்தமா யிருந்தது.

கண்ணனுடன் நான் தங்கியிருந்த 'லாட்ஜி'லிருந்து சரியாக மாலை ஐந்து மணிக்குப் புறப்பட்டேன். மதுரையில் ஒரு பிரபல ஹோட்டலில் சுந்தரம் தங்குவது வழக்கம்.

'காலிங் பட்டனை' அழுத்தினேன். என் மனம் 'திக் திக்' கென்று அடித்துக்கொண்டிருந்தது. மிக உயரிய அலுவலரைப் பார்க்க இருக்கிறேன் என்றால் மனம் கொஞ்சமாவது பதற்றப்படாமல் இருக்க முடியுமா?


அறைக் கதவைத் திறந்தது ஒரு பெண் மணி. அவள் மிஸஸ். சுந்தரமாகத்தான் இருக்க வேண்டும்.

'' யார் நீங்கள் ?'' என்று என்னைக் கேட்ட அதே விநாடியில் அந்தப் பெண் மணியின் கண்கள் என் அருகில் நின்றுகொண்டிருந்த கண்ணன் மேல் சென்றன.

''வாட் எ லவ்லி சைல்ட் !''

''ஜி. எம். இருக்கிறாரா?'' என்று கேட்டேன் நான்.

'' உள்ளே வாருங்கள்.... அவர் குளித்துக் கொண்டிருக்கிறார்... மை டியர் பாய் ! நீயும் உள்ளே வா.''



நான் சோபாவில் அமர்ந்தபோது, அந்தப் பெண்மணி கண்ணனின் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். என்னைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே போன கண்ணனை, — ''பரவாயில்லை, கண்ணு.... போய் வா..'' என்றேன் நான்.

குழந்தைப் பேறு இல்லாத சுந்தரத்துக்கு மட்டுமின்றி, அவரது மனைவிக்கு அவரை விடவும் குழந்தைகள் என்றால் உயிர் போலிருக்கிறது.

'ஜி. எம்.' குளித்துவிட்டு எந்த நிமிடமும் வரலாம்.... பத்து நிமிடங்களாகி விட்டன. உள்ளே கண்ணனும் அந்தப் பெண் மணியும் சேர்ந்து சிரிக்கும் சிரிப்பலைகள் கேட்டன. என் மனத்துக்குள் ஒரு சிறு மகிழ்ச்சி: கண்ணனைக் கொண்டே எனக்குக் காரிய சாதனையாகி விடுமோ ?

''வாருங்கோ, என்ன வேண்டும்?'' என்று கேட்டுக் கொண்டே, பூத்துவாலையால் உடம்பைப் போர்த்திக் கொண்டே வந்தார் சுந்தரம்.

நான் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினேன். அவர் என்னை உடனே அடையாளம் கண்டு கொண்டது மட்டுமின்றி — அடுத்த படியாக முதலில் அவர் கேட்டது —

''இஸ் ஹி யுவர் ஸன் ?''

''ஆமாம், சார் !....''

''நைஸ் பாய்... சாரதாவுக்குக் கொஞ்சம் பொழுது போகிறது.... நீங்கள் லீவில் இருக்கிறீர்களா ?''

'ஜி. எம்.' நிலைக் கண்ணாடியில் தலை வாரிக் கொண்டே கேட்டார். அவர் பனியன் போட்டுக் கொண்டு, சட்டை போட்டுக் கொண்டு, மறுபடியும் தலை வாரிக் கொண்டு தமது மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு சோபாவில் உட்காருவதற்குள், ''ஆமாம்:'' என்று சொல்லிக்கொண்டே வர- ஐந்தே நிமிடங்களில் நான் என்னுடைய கோரிக்கையை அவரிடம் சமர்ப்பித்தேன்.

சுந்தரம் சோபாவில் அமர்ந்து கொண்டார். ''மிஸ்டர் ராமு! கடந்த இரண்டு, மூன்று முறையாக உங்களுக்குப் பிராஞ்சு மானேஜர் பதவி தரவில்லை. அப்படித் தானே ?''

இயற்கைக்கே சொந்தம்

க. பஞ்சாபகேசன்

''ஆமாம் சார்....'' என்றேன் நான் கொஞ்சம் அழுத்தமாகவே.

''பதற்றப்படாமல் நான் சொல்வதைக் கவனிக்க வேண்டும், மிஸ்டர் ராமு ! நீங்கள் பணி புரிகிற பிராஞ்சுக்கு நான் அதிகம் வந்தவனில்லைதான். ஆனாலும் அங்கு வேலை செய்யும் ஒவ்வொருவரைப் பற்றியும் எனக்கு நன்றாகத் தெரியும்; உங்களையும் சேர்த்துத்தான் !''

சுந்தரம் இப்படிச் சொல்லிக் கொண்டே இருந்த போது 'காலிங் பெல்' சத்தம் கேட்டது.


உள்ளே வந்தது ஹோட்டல் பையன். கைத் தட்டத்தில் நான்கு கூல் டிரிங்குகளை ஏந்தியிருந்தான்.

''இரண்டை உள்ளே கொண்டு போய்க் கொடு...இரண்டை இங்கே கொடு'' என்றார் சுந்தரம்.

நான் கொஞ்சம் சங்கோசத்துடனேயே அந்தப் பானத்தைப் பருகினேன்.

''பீ ஃப்ரீ, ராமு!'' என்றார் சுந்தரம்.

இருவரும் குளிர் பானத்தைக் குடித்து முடித்தோம்.



சுந்தரம் சொன்னார் : ''போன தடவை அந்தப் 'போஸ்டை' உங்களுக்குத் தரச் சொல்லிச் சில சிபாரிசுகள் வந்தன. ஆனாலும் தரவில்லை. ஏன் தெரியுமா?''

நான் அவரையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

''உங்களுக்கு 'ட்ரைவ்' இல்லை என்று நான் கூற வரவில்லை. இன்னும் இந்த மானேஜ்மெண்ட் பதவிகளுக்குத் தேவையான 'இனிஷியேடிவ் புஷ்' என்ற தேவைகள் எல்லாம்கூட உங்களுக்கில்லை என்று நான் கூற வரவில்லை...., ஆனால் உங்களிடம் ஒரு 'அடாச்மெண்ட்' குணம் இருப்பதை முதலிலிருந்தே நான் கவனித்து வருகிறேன். 'டெஸிஷென் மேக்கிங்' என்று சொல்கிறார்களே — அதாவது தக்க தருணத்தில் தக்க முடிவு எடுத்தல் என்பது — அந்தத் தேவை உங்களிடம் மிகக் குறைவு மிஸ்டர் ராமு ! அதனால்தான் இந்த முக்கியமான 'போஸ்டில்' உங்களை 'ஃபிக்ஸ்' பண்ணுவதில் தயக்கம் விளைகிறது.....''

பிறகு அவர் ஒரு பொறுப்பு வாய்ந்த மேலதிகாரிக்குத் தேவையான அடிப்படை இலட்சணங்களைப் பற்றிச் சிறிது நேரத்துக்கு ஒரு சொற்பொழிவே ஆற்றினார்.

மணி ஏழு ஆகிவிட்டது. எட்டு மணிக்கு ஒரு பஸ் உண்டு. அதில் கண்ணனுடன் நான் புறப்பட்டால் ஊருக்கு இரவு பத்தரை மணிக்கெல்லாம் சென்று விடலாம். முக பாவங்களைக் கொண்டு மனித குணங்களை எடை போடும் திறமை சுந்தரத்துக்கு இருந்தது. எனது உள் பரபரப்பை அகர் உணர்ந்தவராய் — ''சாரதா'' என்று சற்று உரக்க — ஆயினும் பரிவு கலந்தொலிக்க — கூப்பிட்டார். அடுத்த விநாடி, ''கமிங்...'' என்று உள்ளேயிருந்து குரல் கேட்டது. சில நிமிடங்களில் அந்தப் பெண்மணி கண்ணனைத் தூக்கிக்கொண்டு அங்கே வந்தாள்.

நான் ஆச்சரியப்பட்டேன். கண்ணன் மாற்றுடையில் — சீவியிருந்த கிராப்புத் தலையுடன் — முன்னைவிடவும் அழகாகத் தெரிந்தான். என்னைக் கண்டதும் அந்த மாதரசியிடமிருந்து இறங்கியவனாய், குரலில் தயங்கியவனாய், ''எம்ப்பா... இந்த மாமி இதெல்லாம் கொடுத்தாங்க....உன்னைக் கேட்காமப் போட்டுக்கிட்டதுக்குக் கோபமா?'' என்றான்.

''அதெல்லாம் இல்லை, கண்ணா...'' என்று நான் முடிப்பதற்குள், குழந்தை தொடர்ந்து சொன்னான்:

''பழைய சட்டை, டிராயரைக்கூடப் பத்திரமா எடுத்து வைச்சிருக்கேம்ப்பா....''

சுந்தரத்தின் 'ஆகிருதியான' சிரிப்பொலி கேட்டது. ''மிஸ்டர் ராமு ! இந்தப் பையன் — உங்க பிள்ளை — ரொம்பக் கெட்டிக்காரன் !'' அவர் அப்படிக் கூறியதால் என் பிள்ளை என்னைவிட அந்த மாதிரியான உயர் குணங்களான 'புஷ்', 'டிரைவ்', 'அட்ராக்ஷன்' நிறைந்தவனாக இருக்கிறானோ ?

இப்போது மிஸஸ். சுந்தரத்தின் — சாரதாவின் — குரல் கேட்டது, கணவனை நோக்கி : ''இந்தப் பையனை இவர் இன்றைக்கே அழைத்துக் கொண்டு போக வேண்டுமா ?''

சுந்தரம் என்னைப் பார்த்தார். நான் அவரையும் கண்ணனையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டேயிருந்தபோது சாரதா கண்ணனுடன் பேச்சைத் தொடர்ந்தாள் :

''இந்த ஊர் கோயிலுக்குப் போனாயோ ?''

''போனேனே.... அப்பா அழைச்சிட்டுப் போனார்..... ரெண்டு, மூணு தடவை போனேனும்.... அப்பா விழுந்து விழுந்து கும்பிட்டார்.... எம்ப்பா, அப்படித்தானே?''

''என்கிட்டே பதில் சொல்லணும், கண்ணா !....'' என்று சாரதா கூறி மேலும் கண்ணனைக் கேட்டாள் : ''என்னையும் கோயிலுக்குக் கூட்டிக்கிட்டுப் போயேன், கண்ணா....''

கண்ணன் என்னைப் பார்த்தான்; நான் சுந்தரத்தைப் பார்த்தேன். சில விநாடிகள் தயக்கத்துக்குப் பிறகோ, அல்லது சிந்தனைக்குப் பிறகோ சுந்தரம் சொன்னார் : ''ராமு! உங்களுக்கு ஆட்சேபமில்லையானால் குழந்தையும் எங்களுடன் கோயிலுக்கு வரட்டும். இவள் ஒரு பித்து. இப்படிப் பித்தாக இருக்கிறதால்தான் தாய்மையை விடவும் ஒரு சிறந்த தன்மை இவளிடம் இருப்பதை நான் பார்க்கிறேன்..... நீங்கள்தான் வேடிக்கையைப் பார்க்கிறீர்களே, ராமு ! நான்கு வயதிலிருந்து பத்து வயது வரையில் குழந்தைகளின் அளவுகளுக்கு — அவை ஆணாகட்டும் அல்லது பெண்ணாகட்டும் — விதம் விதமாக டிராயர்கள், சட்டைகள், பாவாடைகள் என்று 'ரெடிமேடாய்'த் தைத்து வைத்திருக்கிறாள். உங்கள் பையனுக்கும் ஒன்றை எடுத்து மாட்டி விட்டாளே?....'' என்று சொல்லிக் கொண்டே வந்த போது அவருடைய கூர்மையான கண்களில் படரத் தொடங்கிய கண்ணீர்த் திரட்சியைச் சமாளித்தவராக மேலும் கூறினார் : ''குழந்தையுடன் கோயிலுக்குப் போக வேண்டும் என்றும் ஆசைப்படுகிறாள்...உங்களுக்கு ஆட்சேபணை யில்லையே? கார் இருக்கிறது. ஒரே மணி நேரத்தில் வந்து விடலாம்....''

இதற்கு முன்பு சாரதா மீனாட்சியம்மன் கோயிலுக்குப் பல முறை சென்றிருக்கிறாள். ஆனால் கண்ணனுக்கோ அவளைத் தானே முதல் முறையாகக் கோயிலுக்கு அழைத்துப் போவதாக ஓர் எண்ணம். அந்தப் பெருமை அவன் சாரதாவுடன் பேசிய பேச்சில் அழகிட்டது.

''பெ... ரீ...ய... கோயில், மாமி !''

'' அப்படியா ?''

''கொம்பு உடைஞ்சு போன பிள்ளையார் கூட இருக்காரு. ரொம்பப் பெரிய பிள்ளையாரு. நான் இருபத்தி அஞ்சு தோப்புக் கரணம் போட்டேன்....''

'' எல்லாரும் பிள்ளையாருக்கு நூத்தியெட்டுத் தோப்புக்கரணமில்லே போடு வாங்க.... ''

''ஐயே!.... மாமிக்குத் தெரியலையே. கோயில்லே திரும்பின இடமெல்லாம் பிள்ளையாரு இருக்காரு. ஒவ்வொரு பிள்ளையாருக்கும் தோப்புக்கரணம் போட்டு இது வரை ஆயிரம் போட்டிருக்கேனுக்கும் !''

சாரதா சிரித்ததைத் தொடர்ந்து, சுந்தரமும் சிரித்தார். 'ஸ்டியரிங்கில்' அழுத்தமாகத் தமது கைகளைப் பதித்தவாறே, ''தி ஹேஸ் எ க்விக் ஆன்சர்....'' என்றார்,

என் பிள்ளை எதற்கும் 'டக் டக்' என்று ஒரு பதில் சொல்வதைப் பாராட்டி, மானேஜ்மெண்ட் தகுதிகளுக்கு இதுவும் ஒன்று என்று எனக்கு மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிருரோ ?

அம்பாள் சந்நிதியில் இரவு எட்டு மணிக்கு மேலாகி விட்டதால், கூட்டமில்லாதிருந்தது. மீனாட்சித் தாயார் அமைதிக் கோலத்தில் தரிசனமளித்துக் கொண்டிருந்ததை அந்த மாதரசி சாரதா சில நிமிடங்கள் கண் மூடி மெய் மறந்து தரிசனம் செய்து கொண்டிருந்தாள்.

அந்தச் சில நிமிடங்கள் கண்ணனுக்கு மிக நீண்ட காலமாகத் தோன்றவே, ''மாமி...'' என்ருன் அவன்.

நீரால் கண்கள் பனிக்கக் கண்களைத் திறந்திருந்த சாரதா, கண்ணனின் சுருள் கேசத்தைக் கோதியபடியே, ''என்ன கண்ணு?'' என்று கேட்டாள்.

''வரம் கேட்டேளா மாமி ?''

''..............'' பதில் சொல்ல முடியாதுடன், திடுக்கிட்டுப் போன முக பாவத்தில் நின்ருள் அந்தப் பெண்மணி.

''ஏன் மாமி பதில் சொல்லலே? கோவிலுக்கு வரவாளெல்லாம் சுவாமியிடம் வரம் கேட்கத்தானே வரா ? எங்கப்பாகூட நேத்து இங்கே ரெண்டு முறை வந்த போது....''

''ஏய் கண்ணு! பேசாமல் இருக்கமாட்டே?'' என்று அவனை நான் அடக்க முனைந்தேன். அதைத் தடுத்து — ''சொல்லு, கண்ணு! உங்கப்பா என்ன வேண்டிக்கிட்டாங்க ?'' என்று கேட்டாள் சாரதா சிரித்துக் கொண்டே.

''....அம்மா, தாயே ! மதுரைக்கு நான் வந்திருக்கிற காரியம் நிறைவேறணும், தாயே ! அப்படின்னு வேண்டிக்கிட்டாங்க ! நீங்க என்ன மாமி வேண்டிக்கிட்டீங்க ?'' என்று கண்ணன் கேட்டு முடிப்பதற்குள் குருக்கள் தட்டத்தில் கற்பூர ஆரத்தியுடன் வந்ததால் பேச்சு தடைப்பட்டு விட்டது. எனக்கும் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டாற் போல் இருந்தது.

ஆலயத்தை விட்டு வெளியே வந்தோம். எனக்கு இரவு ஒன்பது மணிக்கும் ஒரு பஸ் இருந்ததால், சுந்தரம் லாட்ஜுக்குச் சென்றதும் எனக்கு விடை கொடுத்தார்.

தாயார் தன் மகனைப் பிரிவதைப்போலவே அந்த மாதரசி கண்ணனுக்குப் பிரியாவிடை கொடுத்தாள்.

ஒன்பது மணி பஸ்ஸில் ஏறி நானும் கண்ணனும் எங்களூர் அடைந்த போது இரவு பதினென்றரைக்கு மேலாகி விட்டது. சரோஜா — கண்ணனின் தாயார் — வீட்டு வாசலிலேயே தன்னுடைய செல்வத்தை எதிர்பார்த்து வழி மேல் விழி வைத்திருந்தாள். குழந்தையைக் கண்டதும் வாரி அணைத்தவளாய், ''என் கண்ணு ! மூணு நாட்களாய் உன்னைப் பார்க்காம என் கண்ணெல்லாம் பூத்திட்டுதடா ! உன் அப்பாவுக்கு உத்தியோக உயர்வுதான் பெரிசு ; அதுக்காக அவர் வேணுமானு ஊர் ஊராய்ச் சுத்தட்டும்.... ஆனு எனக்கு நீதான் பெரிசு;



''நானுபேர் முன்னால் வாளியில் நெய் கொண்டு வந்திருக்கிறேன் என்று ஜம்பமாகச் சொன்னுரே.... இதுதான் வாளியில் வந்த நெய்யா?''

இனிமேல் உன்னை நான் பிரியவே மாட்டேன்'' என்ருள் சரோஜா. தாய்மை அங்கே அப்போது உலகில் எல்லாப் பொருள்களை விடவும் உயர்ந்ததாகவே தோன்றியது.

ஆனல் —

ஐந்தாறு மாதங்களுக்குப் பிறகு எனக்குப் பிராஞ்ச் மானேஜர் பதவிக்கான 'ஆர்டர்' வந்தபோது, அலுவலகத்தில் என்னை எல்லோரும் வாழ்த்தி, தேநீர் விருந்து அப்படி இப்படி என்று மகிழ்ந்தபோது —

சுந்தரம் தனிப்பட்ட முறையில் எனக்கு எழுதியிருந்த சொந்தக் கடிதத்திலுள்ள ஒரு முக்கியமான பகுதி —

''....கண்ணன் எப்படி இருக்கிருன்? என் மனைவி அந்தக் குழந்தையைப் பற்றிப் பேசாத நாளே இல்லை. வளர்ந்துவிட்ட அறிவின் விசாலத்தில் நாம் ஒருவரையொருவர் சார்புபடுத்திக் கொண்டு என்னவெல்லாமோ செயலாற்றுகிறோம்.... குழந்தைகள் அப்படியில்லை. நீரோ, நானே அல்லது என் மனைவியோ அன்று மீனாட்சித் தாயிடம் வேண்டிக் கொண்டது ஒரு பக்கம் இருக்கட்டும்..... உங்கள் சிறுவன் ஓர் அதிர்ஷ்டசாலிகூட..... கோயிலுக்குள்ளே தாயின் அருளை என் மனைவிக்குச் சிபாரிசு செய்திருக்கிறது அந்தக் குழந்தை உள்ளம். ஆனு, பெண்ணு — விரைவில் நாங்கள் அடையப் போகும் அந்தச் செல்வத்துடன் மதுரைக்கு வரப் போகும்போது உங்களுக்கு எழுதுகிறேன். கண்ணனுடன் அவசியம் அப்போது வரவும்....''

கோரிக்கை, அதன் மூலம் வரும் பதவி உயர்வு ஆகியவை எல்லாவற்றுக்கும் மேலே நித்தியமாய் நின்று பிரகாசிக்கக் கூடிய இயற்கைக்கே சொந்தமான அருள் உணர்வுகளையே இந்த வார்த்தைகள் சுட்டிக் காட்டின;

□ வட்டமேஜை

★ இக்குறிப்பிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

கல்கி 12—10—69 இதழ் பல்சுவைப் பகுதியில் அரிஸ்டாட்டில் ஸாக்ரடீஸ் ஒனாஸிஸ் 30 கோடி பவுண்டுகளுக்கு அதிபதி என்று சொல்லிவிட்டுப் பின் குறிப்பாக ஒரு பவுண்டு பதினேழு ரூபாய் என்றும் வெளியாகியிருக்கிறது. ஒரு பவுண்டின் இன்றைய சரியான மதிப்பு பதினேழு ரூபாய் எண்பது பைசா ஆகும். இந்த எண்பது பைசா வித்தியாசம் ஒனாஸிஸின் சொத்து மதிப்பை 24 கோடி ரூபாய் வரை குறைந்து போகச் செய்யுமே! அந்த அளவுக்கு நஷ்டப்பட அவர் தயாராக இருப்பாரா என்ன?

சேலம்—7
14—10—69 எஸ். கிருஷ்ணன்

★ஒரு தலைமுறைக்குப் பின்னால் வரும் மக்கள் இந்திய வரலாற்றுப் பின்னணியில் புதிதாக உருவான ஒரு சொல்லைக் கண்டு திகைப்படைவார்கள். 'ரபாத்' என்ற சொல்லுக்கு 'மூக்கறுபடுதல்' என்று பொருளைக் கண்டு பிறகு சமாதானம் செய்து கொள்வார்கள்.

சிந்திரி,
13—10—69 சிந்திரி நாராயணன்

இந்தோனேஷியாவில் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் அனுப்பி உதவ வேண்டும் என்று வி. நித்தியானந்தன் விடுத்துள்ள வேண்டுகோள் கண்டேன்.

இங்கே எனது விலாசத்தில் சேர்ப்பிக்கப்படும் நூல்களையும் பாடப் புத்தகங்களையும் இந்தோனேஷியாவுக்கு அனுப்பும் செலவையும் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். நேரே அனுப்பக் கூடியவர்கள் அனுப்பட்டும். நேரே பதிவு அஞ்சலில் இந்தோனேஷியாவுக்கு அனுப்ப இயலாதவர்கள் எனக்கு அனுப்பி, அதன் மூலம் இந்தோனேஷியாவுக்கு அனுப்பிய புண்ணியம் சம்பாதித்துக் கொள்ளலாம்.

திரு நித்தியானந்தன் முக்கியமாகக் கோருவது புதிதோ, பழையதோ அரிச்சுவடி முதல் எட்டாம் வகுப்பு வரையில் உள்ள பாடப் புத்தகங்கள், இந்து சமய நூல்கள் இவையே. என்னிடமுள்ள தமிழ் நூல்களில் ஒரு இரு நூறையாவது அவருக்குக் கடல் தபால் மூலம் பார்ஸலாக அனுப்ப உத்தேசித்திருக்கிறேன். பிறர் என்னிடம் சேர்ப்பிக்கும் நூல்களையும் சேர்த்து அனுப்பச் சித்தமாயிருக்கிறேன். சமய சஞ்சிகைகள், பத்திரிகைகளும் இந்த நற்பணிக்குப் பயன்படும்.

எனது புத்தகப் பார்சலை இன்னும் ஒரு மாத காலத்துக்குள் அனுப்ப உத்தேசித்திருப்பதால் நூல் உதவ முன்வருவோர் உடனடியாக அனுப்ப வேண்டுகிறேன். அக்கரைச் சீமைத் தமிழர் குறை தீர்ப்போம். எனது விலாசம்: 10-ஏ, மூசா சேட் தெரு, தி.நகர், சென்னை—17.

சென்னை,
17—10—69 ரா. அ. பத்மநாபன்

'கல்கி'யில் வெளிவந்த நா. பார்த்தசாரதியின் கட்டுரையால் உந்தப்பட்டுக் குறிஞ்சி மலரைக் காணக் கோடைக்கானல் சென்ற பலரில் நானும் ஒருவன். ஆனால் அங்கு நான் ஏமாற்றத்தையே எதிர்கொள்ள நேர்ந்தது. விரிந்து பரந்து பூத்திருந்த மலர்க் காட்சியை நான் காணவில்லை. ஆனால் அவை வீதியில் கிள்ளி விற்கப்படும் கொடுமையைக் கண்டேன். என்னைப் போல் பலரும் ஏமாந்திருக்கலாம். இனி மலரும் மலர்களுக்காவது இந்தக் கொடுமை நேராமல் காக்க அரசினர் உடன் முன்வர வேண்டும்.

திருச்சிராப்பள்ளி—1
23—10—69 வா.மு. அ. நூர்மைதின்

தமிழ் நாடு அரசு போக்குவரத்து விரைவு வண்டிகளில் பிரயாணம் செய்ய முன்கூட்டியே இடம் ரிசர்வ் செய்ய 25 பைசா வசூலிக்கப்படுகிறது. அதேபோல முக்கியமான ஊர்களில் — உதாரணமாக மதுரை—கோயமுத்தூர்—மார்க்கங்களில் திண்டுக்கல் பழனி இவ்விரண்டு இடங்களில் 25 பைசா வசூலித்து டோக்கன்கள் வழங்கப்படுகின்றன. அவைகளுக்கு நம்பர்களும் கொடுக்கப்படுகின்றன. அதன்படி வண்டியில் இடம் இருந்தால் டோக்கன் வைத்திருப்பவர்களுக்கு டிக்கட் கொடுக்கப்படுகிறது. இடமில்லாவிட்டால் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டும். அல்லது அடுத்த வண்டிக்கு டோக்கன் வாங்கிக் கொள்ள வேண்டும். இந்த ஏமாற்றத்தை ஓரளவு தவிர்க்க டோக்கனுக்குப் பத்துப் பைசா வசூலிக்கலாம். இடம் கிடைத்தால் மீதி பதினைந்து பைசாவைச் செலுத்தலாம். இடம் கிடைக்காதவர்களுக்குப் பத்துப் பைசா நஷ்டத்துடன் போகும். இதை அரசுப் போக்குவரத்துத் துறையினர் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

உடுமலைப்பேட்டை
24—10—69 யு. இ. வெங்கடேசன்

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு விவசாயக் காரியாலயத்துக்கு நான் 'வாட்ச்மேன்' வேலைக்காக 'இண்டர்வியூ'வுக்குப் போயிருந்தேன். என் கிராமத்துக்கும் அந்தக் காரியாலயத்துக்கும் ஐம்பது மைல் தூரம் உள்ளது. இண்டர்வியூ நடக்கும் ஊருக்கு நான் ஒரு நாளைக்கு முன்பே போய்ச் சேர்ந்தேன். இண்டர்வியூ காலை பத்து மணிக்கு நடைபெறும் என்று விண்ணப்பத் தாளில் குறிப்பிட்டிருந்தார்கள். பத்துப் பேர்கள் இண்டர்வியூவுக்கு வந்திருந்தார்கள்.

டி. ஏ. ஓ. ஊரிலிருந்தும் இண்டர்வியூவில் குறிப்பிட்ட நேரத்துக்கு வராமல் அவர் மாலை ஆறு மணிக்குத்தான் வந்தார். இண்டர்வியூவுக்கு வந்த பத்துப் பேர்களில் ஆறு பேர்கள் காத்திருந்து பார்த்து விட்டு, ஊருக்குத் திரும்பி விட்டார்கள். நானும் மற்ற மூவரும் இண்டர்வியூவில் கலந்து கொண்டோம். இந்நாள்வரையில் எங்கள் நான்கு பேர்களில் யாருக்குமே அந்த வேலையைப் போட்டுக் கொடுக்கவில்லை.

சிறுதையூர்,
23—10—69 எஸ். எஸ். டி. ராஜன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



எங்கள் பலம் எஃகும், மக்களுமே—பெற்றோர்களின் புத்திசாலித் தனமான திட்டம் அளிக்கும் மகிழ்வான வாழ்விற்கான பாதுகாப்பு இச்சிறுவனின் கண்களில் பளிச்சிடுகின்றது—ஜாம்ஷெட்பூரில் குடும்பக்கட்டுப்பாடு திட்டம் இயங்கி வருகிறது.

டாடா ஸ்டீல்

TS 7048A1

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon